விலை ரூபா 25.00

ஈழப்படுகொலை சூத்திரதாரி கருணாநிதி பக்கம் 8



71 ஆயிரம் ஊழியர்கள் பணிநீக்கம் பக்கம் 9




4 தேவாலயங்களில் குண்டு வெடிப்பு பக்கம் 10



குரங்கு என்று கூக்குரல் பக்கம் 23



www.onlineuthayan.com

பக்கங்கள் : 28

# உதயன்

சுடர் 27
கதிர் 206

வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 05 செவ்வாய்க்கிழமை (19/06/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

### ஹெரோயின் கடத்தியவர் கைது

இந்தியாவின், ராமநாத புரம் பிரதேசத்திலிருந்து படகு மூலம் இலங்கைக்கு கடத்தி வரப்பட்ட சுமார் 8 மில்லின் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் இந்தியர் ஒருவர் உட்பட இருவர் மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ங)

## எமக்கு எதிரிகள் பொலிஸும் படைப் புலனாய்வுப் பிரிவுமே

### முன்னாள் எம்.பி. கஜேந்திரன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

''எமக்கு பொலிஸாரும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினருமே எதிரிகள். ஒரு வேளை நடைபெறவிருந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஏதாவது அசம்பாவிதங்கள் நேர்ந்திருந்தால் அது அவர்களால்தான்'' இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் செ.கஜேந்திரன்.

நேற்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''நீதிமன்றுக்கு மரியாதை கொடுத்தே நாங்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தை இடைநிறுத்தினோம்.

எங்களது தமிழ்த் தேசத்தின் இறைமையை சர்வதேசம் அங்கீகரிப்பதன் மூலமே இவ்வாறான நில அபகரிப்பை தடுத்து நிறுத்த முடியும்'' அதனை சர்வதேசத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துசசொல்ல வேண்டும் - என்றார். (ங)

### நீதிமன்றத்தின் உத்தரவைக் கண்டவுடன்

## கைவிடப்பட்டது கவனயீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன்19

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்புக்கு எதிராக, யாழ். மத்திய பஸ் நிலையத்தில் நேற்று நடைபெற இருந்த கவனயீர்ப்புப் போராட்டம் யாழ். நீதிவான் நீதிமன்ற உத்தரவினால் இடைநிறுத்தப்பட்டது.

இது தொடர்பாக யாழ். தலைமைப் பொலிஸ் நிலையப் பொலிஸ் பரிசோதகர் சமன் சிகேராவுக்கு, யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜாவினால் வழங்கப் 04



நேற்றைய போராட்டத்தில் கலந்துகொள்ளவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சிறீதரன், ஜனநாயக மக்கள் முன்னணியின் குமரகுருபரன், பாஸ்கரா, தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளர்களில் ஒருவரான வித்தியாதரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்களான செ.கஜேந்திரன், குருபரன் (யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்) ஆகியோர் நீதிமன்ற உத்தரவு பற்றி விவாதிக்கின்றனர்.

### கேரளாவை அணைக்க இலங்கை முயற்சி

கொழும்பு, ஜூன் 19

இலங்கைக்கு எதிராக தமிழகத்தில் கடும் எதிர்ப்பலை வீசுவதால், இந்தியாவின் கேரளா மாநிலத்துடன் உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ளும் முயற்சிகளை தீவிரப்படுத்தியுள்ளது இலங்கை அரசு.

இதன் ஒரு கட்டமாக இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் கடந்த வாரம் மூன்று நாள்கள் பயணமாக கேரளாவுக்கு சென்று மாநில அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுகளை நடத்தியுள்ளார்.

அவர் கடந்த 12 ஆம் திகதி கேரள முதல்வர் உம்மன் சாண்டியை சந்தித்துப் பேசினார். இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் சசி தாரூரும் இந்தச் சந்திப்பில் உடனிருந்தார்.

இதன்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட வாழ்த்துகளை கேரள 04

# பிரிவினையை தூண்டுகின்றன; தமிழ்க் கட்சிகள் மீது வழக்கு

### உயர்நீதிமன்றில் பேரினவாதக் கட்சி தாக்கல்

கொழும்பு, ஜூன் 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள தமிழரசுக் கட்சி உட்பட நான்கு தமிழ்க் கட்சிகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த நான்கு கட்சிகளின் நோக்கங்களில் பிரதானமானது ஐக்கிய இலங்கையைப் பிரித்துத் தமிழர்களுக்கு என்று தனிநாடு ஒன்றை உருவாக்குவதே ஆகும். எனவே, இக்கட்சிகளை பிரிவினைவாதக் கட்சிகளாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று கோரியே உயர் நீதிமன்றத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிங்கள ஜாதிக பெரமுன என்ற கட்சியின் பொதுச் செயலாளர் ஜயந்த லியனகே என்பவரே இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் ஈழ விடுதலை அமைப்பு [ரெலோ] மற்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி [ஈ.பி. ஆர்.எல்.எவ்.] ஆகிய தமிழ் அரசியல் கட்சிகளுக்கு எதிராகவே இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மனுவில் மாவை சேனாதிராசா, வீ.ஆனந்த சங்கரி, என்.இந்திரகுமார் மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பிரிவினை வாதக் கட்சிகளாக நீதிமன்றத்தின் மூலம் பிரகடனப் படுத்தினால் குறித்த கட்சிகளின் அங்கீகாரத்தை தேர்தல் திணைக்களம் 04

## உயிராபத்தாய் போய்விடும் தயவுசெய்து விட்டுவிடுங்கள்

### வேம்படியின் புதிய அதிபர் மன்றாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

பதவியேற்க விடாமல் திருப்பி அனுப்பப்பட்டார் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் புதிய அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணம். அவர் நேற்று பாடசாலைக்குச் சென்றார். அப்போது அங்கு அதிபரின் அறை இழுத்துப் பூட்டப்பட்டிருந்தது.

இது குறித்து விவரம் கேட்டபோது ''பதில் அதிபர் திருமதி ராஜினிமுத்துக்குமாரன் வலயத்தில் நடைபெறுகின்ற அதிபர் கூட்டத்துக்கு சென்று விட்டார்'' என்று கூறி, ரேணுகா திருப்பி அனுப்பப்பட்டார். இதனால் ஏன் வம்பு? எனத் திரும்பி வந்துவிட் டார் புதிய அதிபர்.

பொதுச் சேவை ஆணைக்குழு கடந்த 11ஆம் திகதி தொடக்கம் வேம்படி மகளிர் கல்லூரிக்கான புதிய அதிபராக திருமதி வேணுகா சண்முகரட்ணத்தை நியமித்து நியமனக் கடிதத்தையும் வழங்கியிருந்தது.

புதிய அதிபரை கடமைப் பொறுப்புகளை ஏற்க விடவில்லை என்ற விடயத்தை அறிவதற் 04

## புளொட் உறுப்பினர்கள் நால்வர் வவுனியாவில் நேற்றுக் கைது

வவுனியா, ஜூன் 19

புளொட் அமைப்பின் வவுனியா மாவட்ட முன்னாள் பொறுப்பாளர் சூரி மற்றும் நகரசபை உறுப்பினர் உட்பட நான்கு பேர் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாமாவட்டபுளொட் அமைப்பின் பொறுப்பாளராக சூரி என்பவர் செயற்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் மற்றும் இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கியமை என்பன தொடர்பாகவே குறித்த புளொட் உறுப்பினர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

புளொட் அமைப்பின் வவுனியா மாவட்ட முன்னாள்பொறுப்பாளரான சூரிமீது கொள்ளை 04

## கொழும்பில் ஜே.வி.பி. இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 19

ஜே.வி.பி. உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு பூராகவும் தொடர் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்துள்ள ஜே.வி.பி., முதற்கட்டமாக கொழும்பில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துகிறது.

துப்பாக்கிச்சூடு நடத்திய குற்றவாளிகளைக் கைதுசெய்யாது அரசு தொடர்ந்தும் அவர்களைப் பாதுகாத்துக்கொண்டிருந்தால் தொடர் போராட்டங்களின் மூலம் நாம் அரசைக் கவிழ்ப்போம் என்று 04

## ரஜிராமின் தாய்க்கு உயிர் அச்சுறுத்தல்

### நீதிமன்றின் கவனத்துக்கு நேற்று வந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 19

சண்டிலிப்பாயில் மாணவன் ரஜிராம் கடத்தப்பட்டமை தொடர்பான வழக்கு நிலுவையில் இருக்கையில் சிறுவனின் தாயாருக்கு தொலைபேசி மூலமாக உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று நீதிமன்றத்தில் நேற்று முறையிடப்பட்டது.

மாணவன் கடத்தப்பட்டமை தொடர்பான வழக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இறுதிச் சந்தேக நபரும் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார். நோய்வாய்ப்பட்டிருந்ததைக் காரணம் காட்டி அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

இந்த வழக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஹஜாத்து மொஹமட் மொஹமட் பஸீஸ் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பார்த்தீபன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரைப் பிணையில் 04

# வன்னித் தொண்டர் ஆசிரியர்கள் கல்வி அமைச்சு முன் போராட்டம்

## உரிமை பற்றிப் பேசும் இடத்தில் இருக்க மாட்டேன் என்றார் டக்ளஸ்




''உரிமைகள் கேட்கும் இடத்தில் நானிருக்க மாட்டேன்'' என்று கோபாவேசத்துடன் கூறினார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. வன்னித் தொண்டர் ஆசிரியர்களை நேற்றுச் சந்தித்த போதே இப்படிக் கொதித்தெழுந்தார் டக்ளஸ்.

பத்து வருடங்களுக்கு மேலாகத் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வரும் சுமார் ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் கல்வி அமைச்சின் வடக்கு மாகாண செயலாளரின் நல்லூரிலுள்ள அலுவலகம் முன்பாக நேற்றுப் பட்டினிப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நியமனம் வழங்கப்படும் எனப் பலமுறை வாக்குறுதியளிக்கப்பட்டும் இதுவரை இவர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை. இனியாவது எப்போது நியமனம் வழங்கப்படும் என்ற காலப் பகுதியை உறுதியாகக் கூறும்படியும் கேட்டு பட்டினிப் போராட்டத்தை ஆரம்பித்தனர் வன்னித் தொண்டர் ஆசிரியர்கள். கல்வி அமைச்சின் வடக்கு மாகாண செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துவிட்டே தொண்டர் ஆசிரியர்கள் இந்தப் போராட்டத்தில் குதித்தனர்.

கொழுத்தும் வெயிலில் காத்திருந்த தொண்டர் ஆசிரியர்களை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, கல்வி அமைச்சின் வடக்கு மாகாண செயலாளர் எஸ். சத்தியசீலன், தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரா. புவனேந்திரன் உள்ளிட்டவர்கள் சந்தித்துப் பேசினர்.

''நீண்ட காலமாக நியமனம் வழங்கப்படும் எனக் கூறுகிறீர்கள் ஆனால் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லையே. முல்லைத்தீவு கிளிநொச்சி, துணுக்காய், வடமராட்சி கிழக்கு, வவுனியா வடக்கு, மடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுகின்றோம். ஏன் எமக்கு இந்த நிலைமை'' எனத் தொண்டர் ஆசிரியர் தரப்பிலிருந்து கேட்கப்பட்டது.

''உங்களுக்கு நியமனம் வழங்கப்படும் என ஏற்கனவே கூறியிருக்கின்றேன். நியமனம் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கும். நிச்சயம் நியமனம் வழங்குவேன் எனப் பலமுறை கூறியிருக்கிறேன். அப்படியிருந்தும் ஏன் இங்கு வந்தீர்கள்? உங்களைத் தூண்டி விட்டது யார்?'' என அமைச்சர் டக்ளஸ் தொண்டர் ஆசிரியர்களை அதட்டினார்.

''பத்து வருடங்களுக்கு மேலாக எந்த விதமான சம்பளமும் இன்றி கற்பித்தலை மேற்கொண்டுள்ளோம் என்ற உரிமையுடன் இங்கு வந்தோம்'' எனப் பெண் தொண்டர் ஆசிரியர்களில் ஒருவர் தளதளந்த குரலில் அமைச்சரிடம் தெரிவித்தார்.

உரிமை என்ற சொல்லைக் கேட்டதும் கடுப்படைந்த அமைச்சர் டக்ளஸ் உரத்த குரலில் ''உரிமைகள் கேட்கும் இடத்தில் நானிருக்கமாட்டேன் அப்படி நீங்கள் கேட்க முடியாது நான் சொன்னதை செய்வேன் எனவே நீங்கள் போராட்டத்தைக் கைவிட்டு போய் விடுங்கள்'' என்றார்.

குளிர்பானம் கொடுத்து குடிக்க வைத்து தொண்டர் ஆசிரியர்களின் போராட்டத்தை முடித்து விட்டு அமைச்சர் குழு அங்கிருந்து சென்றுவிட்டது.

அதன் பின்னரும் சுமார் ஒரு மணிநேரம் தொண்டர் ஆசிரியர்கள் அந்த இடத்திலிருந்து கலைந்து செல்லவில்லை. இறுதியில் தமக்குள் முணுமுணுத்தபடி கலைந்து சென்றனர்.

(உ-3)

# தமிழக மீனவர் மீது தாக்குதல்: இலங்கைக் கடற்படை மறுப்பு

கொழும்பு, ஜூன் 19

நடுக்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த தம்மை இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி அடித்து விரட்டினர் என இந்திய மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ள நிலையில், அவ்வாறான சம்பவங்கள் ஏதும் நடைபெறவில்லை என இந்திய மீனவர்களின் குற்றச்சாட்டுகளை அடியோடு நிராகரிக்கின்றது இலங்கைக் கடற்படை.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடிக்கும்போது அதனைக் கைகட்டி வேடிக்கைபார்க்க முடியாது என்றும் கடற்படை தெரிவித்துள்ளது.

கடந்த 16ஆம் திகதி இலங்கை கடற்பகுதிக்குள் இராமேஸ்வரம் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். இதன்போது ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி மீனவர்களை அடித்து விரட்டினர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், தங்களின் விசைப்படகுகளுக்கும் சேதம் விளைவிக்கக் கடற்படையினர் முயற்சித்தனர் என இராமேஸ்வரம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் இந்திய ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், இது விடயம் தொடர்பில் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரியவிடம் 'உதயன்' வினவியது. அதன்போது அவர் கூறியவை வருமாறு:-

இந்திய மீனவர்கள் எவரையும் நாம் அடித்து விரட்டவில்லை. நீங்கள் கூறுவது போல எதுவித சம்பவங்களும் பதிவாகவில்லை. அவ்வாறான குற்றச்சாட்டுகளை நாம் நிராகரிக்கின்றோம்.

எனினும், இந்திய மீனவர்கள் எமது கடற் பரப்புகளுள் மீன்பிடிப்பதை அனுமதிக்க முடியாது. அவ்வாறு அத்துமீறி அவர்கள் மீன்பிடிக்கும் போது எம்மால் வேடிக்கையும் பார்க்கமுடியாது - என்றார்.

(ங-சி)

# இரு இலங்கையருக்கு பிரிட்டனில் மறியல்

பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட் பகுதியில் சமீர சந்திரசேன (வயது - 28) என்பவர் கடந்த பெப்ரவரி மாதம் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக இலங்கையர் இருவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வழக்கு விசாரணைக்கு முன்னதாக பூர்வாங்க விசாரணைக்காக வாய்மூலம் சாட்சியமளிப்பதா என்பது குறித்து தீர்மானிப்பதற்கு இவர்களின் சட்டத்தரணிகளுக்கு ஜூலை 2 ஆம் திகதிவரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

துவான் பிவாஸ் சவால் (வயது - 23) விராஜ் அழகக்கோன் (வயது - 33) ஆகியோரே இவ்விரு இலங்கையர்களாவர்.

# இடமாற்றம் கிடைக்காத ஆசிரியர்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 19

வன்னிப் பகுதியில் சேவைக் காலத்தை நிறைவு செய்துள்ளபோதும் இதுவரை இடமாற்றம் வழங்கப்படாத நிலையிலுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் சார்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின், இடமாற்ற விடயத்தில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சார்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் விசாரணை அதிகாரியும் பதில் இணைப்பாளருமான ஆர்.எல். வசந்தராவிடம்இந்த முறைப்பாட்டைப் பதிவுசெய்து கொண்டார்.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வன்னிப் பகுதியில் சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்துள்ள எமக்கு யாழ்ப்பாண மாவட்டத்துக்கான இடமாற்றத்தை வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இதனால் 104 ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், வவுனியா வடக்கு ஆகிய இரண்டு கல்வி வலயங்களிலும் 350க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மேலதிகமானவர்கள் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இவர்களைப் பதிலீட்டு ஆசிரியர்களாக வன்னிப் பகுதிக்கு இடமாற்றம் செய்து எமக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட வேண்டும். கல்வியியற் கல்லூரியில் இருந்து வெளியேறும் ஆசிரியர்களைப் பதிலீட்டு ஆசிரியர்களாக அனுப்புவதாகக் கூறப்படுகிறது. இவர்களைக் கொண்டு பதிலீட்டு ஆசிரியர்களை நியமிப்பது ஆசிரியர் இடமாற்ற விடயத்திலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையாது. கஷ்டப் பிரதேச, வெளிமாவட்ட சேவையைப் பூர்த்திசெய்யாமல் மேலதிக ஆசிரியர்களாக உள்ளவர்களைப் பதிலீட்டு ஆசிரியர்களாக அனுப்ப வேண்டும் -என்றுள்ளது.

ஆசிரியர்களின் முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட ஆணைக்குழுவின் அதிகாரி, இந்த முறைப்பாடு தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனக் கூறினார்.

முறைப்பாடு பதிவு செய்யப்பட்டபோது பாதிக்கப்பட்ட ஆசிரியர்களில் சுமார் முப்பது பேர் கலந்து கொண்டனர்.

(ங-3)

## திருநெல்வேலியில் வாள் வெட்டு; இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

திருநெல்வேலி இராமலிங்கம் வீதியில் நேற்றிரவு 11 மணியளவில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் தலையில் வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் திருநெல்வேலியைச் சேர்ந்த பி.ரஜீவன் (வயது -21) என்பவரே தலையில் இரு இடங்களில் வெட்டுக் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருபவராவார்.

நேற்றிரவு குறித்த வீதியால் சென்றுகொண்டிருந்த இருவருக்கு இடையில் இடம்பெற்ற தகராறிலேயே இவரை மற்றவர் வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளார் என சம்பவத்தை நேரில் கண்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.

ஆனால் குறித்த நபர் வீதியால் சென்றுகொண்டிருந்த போது திடீரென வந்த நபர் ஒருவரே வாள்வெட்டை நடத்தினார் என்று காயம் பட்டவரை வைத்தியசாலையில் சேர்ப்பித்த நபர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் யாழ். பொலிஸார் குறித்த சந்தேக நபரை தேடி வருகின்றனர். (ங-16)

# போரால் பாதிப்புற்ற மீனவர்களுக்கே உதவிகள் கிடைப்பதை உறுதி செய்க

## இந்தியத் துணைத்தூதரிடம் சுரேஷ் எம்.பி. கோரிக்கை

வவுனியா, ஜூன் 19

போரால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இந்திய அரசின் உதவிகள் சென்றடைவதை தூதரக அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு இந்தியத் துணைத் தூதரிடம் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச் சந்திரன் கோரியுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது-

17.06.2006இல் மன்னார் கடற்பரப்பில் இடம்பெற்ற சண்டையின்போது பேசாலை மற்றும் வங்காலைப்பாடு மீனவக் கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்களின் வள்ளங்கள், வலைகள், என்ஜின்கள் மற்றும் வாடிகள் முதலான தொழில் உபகரணங்கள் தீ வைத்து அழிக்கப்பட்டன. மேலும், வங்காலைப்பாடு கிராமத்திலும் மீனவர்களின் வாடிகள், வலைகள், என்ஜின்கள் தீயினால் எரிந்து நாசமாயின.

அத்துடன், 25 வருடங்களுக்கு முன்னர் போர் நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட வங்காலை, பேசாலை, தலைமன்னார், தாழ்வுப்பாடு கிராமங்களின் மீனவர்கள் தமிழ்நாட்டிற்கு இடம் பெயர்ந்த வேளை, இராமேஸ்வரத்தில் தமது பிளாஸ்ரிக் வள்ளங்கள், என்ஜின்கள், வலைத் தொகுதிகளை மாவட்டக் கலெக்டரிடம் கையளித்தனர். மண்டப அதிகாரிகளும் கலெக்டரும் அவற்றினை பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தும் ஆவணங்களை மீனவர்களிடம் வழங்கியுள்ளனர். இவற்றுக்கு நட்டஈடு வழங்கப்படும் என்று இந்திய உயர்ஸ்தானிகரகத்தினால் பின்னர் உறுதி வழங்கப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில் இப்பொழுது அந்த மீனவர்களில் இருவருக்கு ஒன்று என்ற அடிப்படையில் 350 மீனவர்களுக்கு 175 மீன்பிடி வாழ்வாதார உதவிப்பொருள்கள் வழங்கப்படவுள்ளன. இந்த விநியோகத்துக்கு என தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் விடயத்திலேயே இப்பொழுது பிரச்சினை எழுந்துள்ளது. இதுதொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கொழும்பிலுள்ள இந்தியத் துணை தூதரைச் சந்தித்து நேரடியாக முறையிட்டுள்ளார்.

இந்தியத் துணைத் தூதருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி அவர் தெரிவித்ததாவது:

தற்பொழுது பயனாளிகள் தெரிவில் பல்வேறு முறைகேடுகள் நடைபெறுவதாகத் தெரியவந்துள்ளது. எனவே இந்திய அரசினால் வழங்கப்படுகின்ற மீனவர்களுக்கான வாழ்வாதார உதவிகளைப் போரினால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு நேரடியாகச் சென்றடைவதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டேன். அதற்குப் பதிலளித்த துணை உயர்ஸ்தானிகர் பயனாளிகள் பட்டியலை மீள்பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

ஏற்கனவே தயாரித்த பயனாளிகள் பட்டியலில் எவ்வித இழப்பையும் சந்தித்திராத -மீன்பிடித் தொழிலில் ஈடுபடாதவர்களுக்கே- பெரும்பாலான வாழ்வாதார உபகரணங்கள் வழங்கப்பட இருந்தது. இதைத் தடுத்து நிறுத்தி உரிய பயனாளிகளுக்குச் சென்றடைவதை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே இந்தியத் துணைத் தூதரை நான் சந்தித்து விடயத்தை விளக்கினேன். -என்றார் சுரேஷ் பிரேமசந் சந்திரன்

(ங-400)

# காணி, வீடுகளை மீட்டுத் தருமாறு கரம்பைக்குறிச்சி மக்கள் மனு

## பிரதேச செயலரிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 19

வரணி - கொடிகாமம் பருத்தித்துறை வீதியின் கிழக்குப் பிரதேசத்தின் கரம்பைக் குறிச்சிப் பிரிவில் அமைந்திருக்கும் 52 ஆவது பிரிகேட் படைத்தளம் அமைந்துள்ள காணிகள் மற்றும் வீட்டு உரிமையாளர்கள் தமது வசிப்பிடக் காணிகளையும் வீடுகளையும் மீளப்பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு தென்மராட்சி பிரதேச செயலரிடம் மனு ஒன்றைக் கையளித்துள்ளனர்.

கடந்த வார முற்பகுதியில் இந்த மனுவைச் சமர்ப்பித்து இருந்தனர். சுமார் 30 பேர் வரையான குடும்பங்களே இந்த மனுவைச் சமர்ப்பித்தன.

படைத்தரப்பால் மாவட்டத்தில் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள காணிகளின் விவரம் பத்திரிகையில் வெளியானதை அடுத்து காணி உரிமையாளர்கள் ஒன்று சேர்ந்து இந்த மனுவை வழங்கியுள்ளனர். (ம-122)

# அரச காணிகளைப் பெற்றபின் தனியார் காணிகள் விடுவிப்பு

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், ஜூன் 19*

***யாழ்.குடாநாட்டிலுள்ள அரச காணிகளைப் பெற்றுக் கொண்ட பின்னர் படையினர் தங்கியுள்ள தனியார் காணிகள் இரண்டு, மூன்று மாதங்களுக்குள் பொதுமக்களிடம் கையளிக்கப்படும் என்று வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.***

கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவித்த போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார். யாழ். குடாநாட்டில் அரச காணிகள் என்று எதுவும் இல்லை. பொதுமக்களின் சேவைகளுக்காக திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளே உள்ளன என்று பிரதேச செயலர்கள் குறிப்பிடும் நிலையிலேயே வடமாகாண ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ். குடாநாட்டில் தனியாருக்குச் சொந்தமான 400 வீடுகளிலேயே இராணுவத்தினர் தற்போது தங்கியுள்ளனர் என்று யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க அந்த ஊடகத்துக்கு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் ஏற்கனவே 56 சதவீதமான தனியாரின் காணிகளைப் பொதுமக்களிடம் கையளித்துள்ளோம். எஞ்சிய தனியார் காணிகளையும் கையளிப்பதற்காக அரச காணிகளைப் பெற்றுத் தருமாறு வடமாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றோம். போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது யாழ். மாவட்டத்தில் 26 ஆயிரமாகக் காணப்பட்ட படையினர் எண்ணிக்கை தற்போது 15 ஆயிரத்து 600 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது என்றும் இராணுவத் தளபதி கூறியுள்ளார். (ம-5)

# நயினை திருவிழாக் காலங்களில் அரை மணி நேரத்துக்கு ஒரு பஸ்

## அரச, தனியார் பஸ் உரிமையாளர்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த திருவிழாக் காலங்களில் யாழ். பஸ் நிலையத்தில் இருந்து அரச பஸ் அரை மணித்தியாலத்துக்கு ஒன்று என்ற வகையிலும் தனியார் சிற்றூர்திகள் 20 நிமிடங்களுக்கு ஒன்று என்ற வகையிலும் சேவையில் ஈடுபடும். இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு அரச மற்றும் தனியார் பஸ் உரிமையாளர்கள் கூட்டாக அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துக்குத் தெரிவித்தனர்.

இன்று நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இந்த விடயம் தொடர்பாக இடம்பெற்ற கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தேர், தீர்த்தம் ஆகிய இரு நாள்களும் சகல பஸ்களும் 15 நிமிடங்களுக்கு ஒரு தடவை சேவையில் ஈடுபட வேண்டும் என்று அரச அதிபர் கேட்டுக் கொண்டார்.

அரசோ, தனியாரோ எவராவது ஒன்றையொன்று முந்திச் செல்ல முயற்சிக்கக் கூடாது. குறிப்பிட்ட எண்ணிக்கையானோரை மட்டுமே ஏற்றிச் செல்வதை சம்பந்தப்பட்டவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

தற்போது 45 இற்கு மேற்பட்ட படகுகள் சேவையில் ஈடுபடுத்தக் கூடியவாறு உள்ளன. எனினும் பயணிகளை ஏற்றி இறக்குவதற்கு நயினாதீவு துறைமுகம், குறிகாட்டுவான் துறைமுகம் போன்றவற்றில் போதுமான வசதிகள் இல்லை. பிரயாணிகளை இறக்கியவுடன் குறித்த படகு கரையை விட்டு உடன் விலகிச் செல்ல வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

தேர், தீர்த்தம் ஆகிய இரு நாள்களும் இரவு 10 மணிவரையும் ஏனைய திருவிழா நாள்களில் இரவு 8 மணிவரையும் படகுகள் சேவையில் ஈடுபடலாம்.

இரவு சேவையில் ஈடுபடக் கூடிய சகல வசதிகளும் கொண்ட படகுகள் மட்டுமே சேவையில் ஈடுபட வேண்டும்.

இதனை வேலணை பிரதேச சபை, கடற்படையினர் உறுதிப்படுத்த வேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் அரச அதிபர் தெரிவித்தார். (ம-41)

# மூளாய் வீதியில் இரவில் விஷமிகள் நடமாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

வட்டுக்கோட்டை மூளாய் வீதியில் உள்ள வீடொன்றினுள் இரவு நேரத்தில் உள் நுழைந்த விஷமிகள்சிலர்வீட்டுமின்இணைப்பு வயரை வெட்டி உள்ளே செல்ல முயன்றுள்ளனர். வீட்டிலிருந்தவர்கள் ஆளரவம் கேட்டு கூக்குரலிடவே அயலவர்கள் ஒன்று கூடியதும் விஷமிகள் 'டோச் லைற்றை'யும் விட்டுத் தப்பிச் சென்றனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் வழமை போன்று அந்தப் பகுதியில் மின்சாரம் தடைப்பட்டது.

வழமையாக ஐந்து நிமிடங்களின் பின்னர் இரவு மீண்டும் மின்சாரம் வழங்கப்பட்டுவிடும்.

ஆனால் அன்றைய தினம் மின்சாரம் தடைப்பட்டு ஐந்து நிமிடங்களின் பின்னர் அயலிலுள்ள வீடுகளில் மின்விளக்குகள் எரிந்தும் குறிப்பிட்ட வீட்டில் மட்டும் மின்சாரம் திரும்பவில்லை.

சந்தேகம் கொண்ட வீட்டுக்காரர் வெளியே அவதானித்தபோது இனந்தெரியாத சிலரின் நடமாட்டத்தை அவதானித்து கூக்குரலிட்டனர்.

அன்றையதினம் வட்டுக்கோட்டை கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கொடியேற்றத் திருவிழா ஆரம்பமாகிய நாள்.

இரவு திருவிழா முடிந்த பின்னர் ஆலயத் தொண்டர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே குறிப்பிட்ட வீட்டிலிருந்து கூக்குரல் கேட்கவே அங்கு விரைந்தனர். அவர்கள் அங்கு ஆலயத் தொண்டர்கள் வருவதைக் கண்ட விஷமிகள் தாம் வைத்திருந்த 'சாஜர்டோச்' லைற்றை முற்றத்தில் போட்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

பின்னர் அவதானித்த போதே மின் இணைப்பு வயர் வெட்டப்பட்டிருந்தது தெரிய வந்தது. சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (அ-4)

# வலுவிழந்தோரை ஆற்றுப்படுத்த நயினையில் அன்னதானமடம்

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையினரால் நிறுவப்பட்ட மாற்றுவலுவுடையோரை ஆற்றுப்படுத்தி அமுதளிக்கும் சிறப்பு அன்னதான மண்டபம் ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் நந்தன வருட கொடியேற்றத் தினமான இன்று செவ்வாய்க்கிழமை அடியார்களின் தேவைக்காகத் திறந்து வைக்கப்படுகின்றது.

கடந்த வருட விஜயதசமித் தினத்தன்று நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் கா.ஆ.தியாகராசாவினால் அத்திபாரமிடப்பட்டு இந்த மண்டபத்தில் கட்டப்பட்டுள்ளது. இன்று பிரபல வர்த்தகர் இ.ச.பே.நாகரெத்தினத்தால் திறந்து வைக்கப்படும்.

இந்த மண்டபத்தின் முதல் நாள் அன்னம் வழங்கும் பணியைத் தீவகம் தெற்கு பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் நிறைவேற்றுவார். அடியார்கள் அனைவரையும் இவ்விழாவுக்கு வருகை தருமாறு சபையினர் அறிவித்துள்ளனர். (ம-7)

# பண்ணை சுற்றுவட்டம் நேற்றுத் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ். பண்ணை சுற்றுவட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ். மாநகர ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்.மாநகர சபை முதல்வராக இருந்த அல்பிறட் துரையப்பாவின் நினைவாக இந்தச் சுற்றுவட்டம் புனரமைக்கப்பட்டு





யாழ்.நங்கை உருவச் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கென அல்பிறட் துரையப்பா குடும்பத்தைச் சேர்ந்தோர் ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கியிருந்தனர்.

இந்த நிகழ்வில் முன்னாள் முதல்வர் அல்பிறட் துரையப்பா குடும்ப உறுப்பினர் நவரத்தினராசா நினைவுக்கல்லை திரைநீக்கம் செய்து வைத்தார். (ம-7)

# வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்குச் சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 19

வடமாகாணத்தில் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்களில் மிகவும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக பத்தாயிரம் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன என்று யாழ். இந்திய தூதுவராலயத்தின் துணை தூதுவர் வீ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச செயலகத்தில் சைக்கிள்கள் கையளிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் சைக்கிள்களைக் கையளித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்திய அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது.

இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த மக்களின் குடும்பத் தலைமைத்துவத்தில் உள்ள பெண்கள், மாணவர்கள், வலுக் குறைந்தவர்கள் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு உதவக் கூடியதாக சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன.

மாவட்ட ரீதியாக யாழ்ப்பாணத்துக்கு 1500 சைக்கிள்களும் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு தலா இரண்டாயிரத்து 500 சைக்கிள்களும் வழங்கப்பட்டுள்ளன. வவுனியா, மன்னார் மாவட்டங்களில் 1800 சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

எமது இந்த உதவிகளை வழங்க ஆளுநர் முயற்சி எடுத்திருந்தார். யூ.என்.எச்.சி.ஆர். மற்றும் பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள் வழங்கிய ஒத்துழைப்பினூடாக உரிய பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு இவை வழங்கப்படுகின்றன.

இந்திய அரசு முக்கிய திட்டங்களுக்கு உதவுகிறது. பனை அபிவிருத்திச் சபைக்கான கட்டடம் திறக்கப்படவுள்ளது. மன்னாரில் இடம்பெயர்ந்த மீனவர்களுக்கு உதவவுள்ளோம். ஓகஸ்ட் மாதத்தில் நல்லூர் திருவிழாவின் போது பெரிய அளவில் கலை நிகழ்ச்சிகளையும் நடத்தவுள்ளோம்.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## நிகழ்வுகள் இன்று

**கலந்துரையாடல்**

சாவகச்சேரி பிரதேசசபை தனது பிரதேசத்தில் இயங்கும் சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றை முற்பகல் 10 மணிக்குப் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடத்தவுள்ளது. (ம-122)

**நூல் வெளியீடு**

அரச மொழி கருமத் திணைக்கள முன்னாள் உதவி ஆணையாளரின் நினைவை முன்னிட்டு ''தமிழ்வழி ஆங்கிலம்'' எனும் நூல் வெளியீடு நண்பகல் 12 மணிக்கு நெல்லியடி முருகமூர்த்தி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**பாதுகாப்புக் குழுக் கூட்டம்**

திணைக்களத் தலைவர்களுக்கான மாவட்ட பொது மக்கள் பாதுகாப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் செயலகத்தில் நடைபெறவுள்ளது. திணைக்களத் தலைவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார். (ம-9)

# அமெரிக்கத் தடைவிலக்களிப்பு வெறும் 180 நாள்கள் மட்டுமே!

பொருளாதாரத் தடைகளில் இருந்து இலங்கைக்கு அமெரிக்கா விலக்களித்துள்ள போதிலும், ஈரானுக்கான தேயிலை ஏற்றுமதியில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. மேலும், அமெரிக்காவின் தடைவிலக்களிப்பு வெறுமனே 180 நாள்களுக்கு மட்டும்தான். இந்தக் காலத்தில் தேயிலை வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்ட முடியாது.

- இவ்வாறு இலங்கை தேயிலை ஏற்றுமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஈரானுக்கான எதிர்கால தேயிலை ஏற்றுமதி உறுதியற்ற நிலையிலேயே இருக்கிறது என இலங்கை தேயிலை ஏற்றுமதியாளர் சங்கத்தின் தலைவர் நிராஜ் டி மெல் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் அறிவிப்பினால் தேயிலை ஏற்றுமதியில் குறிப் பிடத்தக்க எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

தேயிலை ஏற்றுமதியை கையாளும் அரச வங்கி இன்னமும் வர்த்தகத்தை ஆரம்பிக்கவில்லை.

ஈரானுக்கு விற்கப்படும் தேயிலைக்கான கொடுப்பனவு பொறிமுறை பற்றிய சந்தேகங்கள் அவர்களுக்கு உள்ளன. அமெரிக் காவின் தடைவிலக்களிப்பு வெறுமனே 180 நாள்களுக்கு மட்டும்தான். இந்தக் காலத்தில் தேயிலை வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்ட முடியாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஈரானியர்கள் அதிகளவில் தேனீரை அருந்தும் பழக்கம் கொண்டவர்களாவர். இலங்கையின் தேயிலை ஏற்றுமதியில் 10 வீதம் ஈரானுக்கே ஏற்றுமதி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் பொறியில் சிக்கிவிட்டதாம் இலங்கை

கொழும்பு, ஜூன் 19

அமெரிக்காவின் இராஜதந்திர சூழ்ச்சிப் பொறிக்குள் அரசின் கொள்கைகள் சிக்கிவிட்டன எனத் தெரிவித்துள்ள தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம், அரசின் கொள்கைகள் தடம்புரள்வதானது நாட்டுக்கு பேராபத்தாகும் என்றும் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளது.

மேற்குலகத்தின் சூழ்ச்சிப் படலத்தின் முதல் அங்கமே நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம் என்று அந்த அமைப்பின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற் கமைய ஐ.நா. குழுவொன்று இலங்கை வரவுள்ளது என அறியமுடிகின்றது. அதற்கு அரசும் அனுமதியளிக்கப் போவதாகத் தெரியவருகின்றது. இந்தக் குழுவினர் வந்த பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளையும் இங்கு வரவுள்ளார்.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் இலங்கைக்கு எதிரான சூழ்ச்சிப் படலத்தின் முதல் அத்தியாயமே நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயமாகும்.

ஜெனிவாத் தீர்மானத்தை அரசு நிராகரித்துள்ளது. அப்படியானால், ஏன் ஐ.நா. குழுவை நாட்டுக்குள் வருவதற்கு அனுமதிக்க வேண்டும்? அவ்வாறு செய்வது தீர்மானத்தை ஏற்றுக் கொண்டுள்ளோம் எனக் கூறுவதற்குச் சமனான செயலாகும்.

அமெரிக்காவின் சூழ்ச்சியால் இலங்கை அரசின் கொள்கைகள் தடம்புரள்கின்றன. அந்நாட்டின் சூழ்ச்சி வலையில் சிக்கும் நிலைப்பாட்டையே அரசு எடுத்துள்ளது. இது நாட்டுக்கு நல்லதல்ல என்பதை கூறிவைக்க விரும்புகின்றோம் - என்றார்

## கைவிடப்பட்டது...

01↘ பட்ட உத்தரவுக்கு அமைவாகவே இந்த ஆர்ப்பாட்டம் இடைநிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

''இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் அசம்பாவிதங்கள் நிகழும் என்று தமக்கு உறுதியான தகவல்கள் கிடைத்திருக்கின்றது என்று கூறியே பொலிஸார் நீதிமன்றில் தடையுத்தரவைப் பெற்றுள்ளனர்'' என்று தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், இந்த ஒரு தலைப்பட்சமான நடவடிக்கைக்கு எதிராக தாம் மேல்நீதிமன்றத்தை நாடவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொள்வதற்காக தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராஜா, சி.சிறீதரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள், யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், தென்னிலங்கையைச் சேர்ந்த ஜனநாயக மக்கள் முன்னணியின் மாகாணசபை உறுப்பினர்கள், நவசமசமாஜக் கட்சியின் உறுப்பினர்கள், இலங்கை ஆசிரியர் சங்கத்தினர், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் பஸ் நிலையத்துக்கு முன்னால் நேற்று மதியம் திரண்டிருந்தனர்.

கவனயீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பிக்க அனைவரும் தயாரான நேரத்தில், திடீரென அங்கு வந்த தலைமைப் பொலிஸ் பரிசோதகர், நீதிமன்றத்தினால் தனக்கு வழங்கப்பட்ட உத்தரவை காண்பித்து கவனயீர்ப்புப் போராட்டத்தில் பங்குபற்ற வந்தோரை உடனடியாகக் கலைந்து செல்லுமாறு கோரினார். சிறிய சலசலப்புக்குப் பின்னர் அந்த இடத்தில் இருந்து கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ள வந்தோர் அகன்று சென்றனர். இதன் பின்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இதன் போது கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா, ''எங்களுடைய போராட்டம் இத்துடன் முடிந்து விடவில்லை. நாளையும் (இன்று) வலி. வடக்கில் மற்றுமொரு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். எல்லோரும் ஒரே பாதையில் பயணம் செய்யக் கூடிய வழி ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் மட்டுமேதான்.

நாங்கள் முன்கூட்டியே அறிவித்துவிட்டுத்தான் போராட்டங்களை முன்னெடுத்தோம். இந்தப் போராட்டங்களைத் தடுத்தால் மாற்று வழிமுறைகளை பின்பற்றுவோம். மிஞ்சிப் போனால் அவர்களால் எங்களை கைது செய்யத்தான் முடியும். கைதுகளும் சிறை வாசமும் எங்களுக்குப் புதிதல்ல'' - என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நகரசபை உறுப்பினர் க.சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில், ''நீதிமன்றத் தீர்ப்பை நாங்கள் மதிக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவாகத்தான் இருக்கும்'' என்றார்.

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில், ஜனநாயக மக்கள் முன்னணியின் குமர குருபரன், நவசமாஜக் கட்சியின் ரணத்குமார சிங்க, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் யோசப் ஸ்டாலின் ஆகியோரும் உரையாற்றினர். (ங-5)

## கேரளாவை அணைக்க இலங்கை...

01↘ முதல்வருக்கு பிரசாத் காரியவசம் பரிமாறிக் கொண்டுள்ளார்.

இலங்கைக்கும் கேரளாவுக்கும் இடையில் நெருக்கமான பொருளாதார உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது குறித்து இந்தச் சந்திப்பின் போது பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன.

அத்துடன் கொச்சியில் எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள கேரள எழுச்சி - 2012 என்ற வர்த்தக, முதலீட்டு ஊக்குவிப்பு மாநாட்டில் இலங்கையையும் பங்கேற்குமாறு கேரள முதல்வர் உம்மன்சாண்டி அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கைத் தூதுவருக்கு கேரள உள்துறை அமைச்சர் திருவாங்கூர் ராதாகிருஸ்ணன் இராப்போசன விருந்தளித்து கௌரவித்துள்ளார்.

இதன்போது கேரள உள்துறை, உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் கேரளாவின் காடுகள், வனவிலங்குகள், விளையாட்டு மற்றும் திரைப்படத்துறை அமைச்சர் கணேஸ் குமாரையும் பிரசாத் காரியவசம் சந்தித்துள்ளார்.

இதன்போது கேரளாவுடன் இணைந்து இலங்கையின் திரைப்படத் தொழிலை விருத்தி செய்வது குறித்தும் பேசப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இலங்கை எதிர்ப்பு அலை வீசி வருகின்ற நிலையில், முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் தமிழ்நாட்டுடன் மோதிக்கொள்ளும் கேரளாவை தன் கைக்குள் போட்டுக் கொள்ள இலங்கை முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் இலங்கை அரசியல்வாதிகள் கால் வைக்க முடியாத நிலை தோன்றியுள்ள நிலையிலும், இலங்கைப் பொருள்களை புறக்கணிக்கும் போராட்டங்கள் இடம்பெறும் நிலையிலும் கேரளா மீது இலங்கை கண்வைத்துள்ளது எனக் கூறப்படுகிறது.

இவ்வாறு கேரளாவுடன் இலங்கை அரசு இணைவதைத் தடுப்பதற்காகவேனும் தமிழகம் இலங்கைக்கு சார்பாக நடக்க முற்படும் என்று இலங்கை எதிர்பார்க்கிறது. இதே இராஜதந்திரத்தையே இந்தியாவுக்கு எதிரான சீனாவுடன் நட்புப் பாராட்டுவதன் மூலம் இலங்கை கடைப்பிடிப்பதுவும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டுக்கு அடுத்ததாக இலங்கைக்கு மிக அருகே உள்ளது கேரளா என்பது குறிப்பிடத்தக்கது.

## உயிராபத்தாய் ...

01↘ காக கல்லூரி அதிபர் அலுவலகத்துக்கு நேரில் சென்ற 'உதயன்' செய்தியாளரும் பதில் அதிபரால் திருப்பி அனுப்பப்பட்டார்.

''கல்வி அமைச்சின் அனுமதிக் கடிதத்துடனேயே ஊடகங்கள் பாடசாலைக்குள் வரமுடியும். முதலில் அந்த அனுமதியுடன் வாருங்கள்'' என்று அவர் கூறினார்.

இது தொடர்பில் புதிய அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கேட்டபோது ''இந்தப் பிரச்சினையைப் பெரிது படுத்த வேண்டாம், அப்படியே விட்டுவிடுங்கள். அனைத்தையும் கடவுள் பார்த்துக்கொள்வார். பிரச்சினை பெரிதானால் அது என்ர உயிருக்குக் கூட ஆபத்தாக மாறிவிடும்'' என்றார்.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பா.விக்னேஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது ''வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் விடயத்தில் எனக்கு எதுவும் தெரியாது. நடப்பதைக் கண்டு கொள்ளவேண்டியது தான்'' என்றார். (உ-3)

## பிரிவினையை...

01↘ சட்டரீதியாக இல்லாமல் செய்ய முடியும் என்றும், இதை நோக்காகக் கொண்டே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. இதேவேளை தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற இன ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் கூட்டமைப்புக்குப் பிரிவினை வாதச் சாயம் பூசுவதன் மூலம் அதன் குரலைப் பலவீனப்படுத்தப் பேரினவாதிகள் முயற்சிக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ங-சி)

## புளொட் உறுப்பினர்கள்...

01↘ முதலான பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பொலிஸார் அவரைத் தேடியவேளை, சூரி தலைமறைவாகிவிட்டார். இவ்வாறு பொலிஸாரின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு மறைந்து வாழ்ந்த இவரைக் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் வைத்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

விசாரணையின் போது இவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் வவுனியா நகரசபை உறுப்பினர் எஸ்.பார்த்தீபன் உட்பட மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்னும் சிலரையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வலைவீசித் தேடிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ங-400)

## கொழும்பில் ஜே.வி.பி...

01↘ ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் விஜித ஹேரத் நேற்று 'உதய'னிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது உறுப்பினர்கள் இரண்டு பேரைச் சுட்டுக்கொன்று சுமார் 50 பேரைக் காயப்படுத்திய குற்றவாளிகள் இன்னும் அம்பாந்தோட்டைப் பகுதியில்தான் உள்ளனர்.

இவர்களைக் கைதுசெய்வதற்காகப் பொலிஸார் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. நாம் செய்த முறைப்பாடுகள் அப்படியே உள்ளன. குற்றவாளிகளைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

எமக்கு நீதி கிடைப்பதற்காக எம்மால் முடிந்த அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்வோம். நாடு முழுவதும் தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்துவோம்.

குற்றவாளிகள் யார் எனத் தெரிந்தும் அவர்களைக் கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுக்காததன் மர்மம் என்ன? மனித உரிமை மீறல்கள் தொடர்பில் மேற்கு நாடுகள் இலங்கை மீது சுமத்தும் குற்றச்சாட்டுகளில் எந்தவித பிழையும் இல்லையென்பது தெளிவாகின்றது.

கொலைகாரர்களைப் பாதுகாக்கும் இந்த அரசால் நாட்டு மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை. அரசைக் கவிழ்ப்பதன் மூலமே நாட்டு மக்கள் நன்மையடைவர்,பாதுகாப்புப் பெறுவர்.

இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தைக் கண்டித்து கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துகிறோம். அதனைத் தொடர்ந்து நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் - என்றார்.

## ரஜிராமின் தாய்க்கு...

01↘ விடுவிக்கும் படி மனுச் செய்திருந்தார். சந்தேக நபருக்கு ஒரு முழங்காலுக்குக் கீழே இயங்காது என்பதைச் சுட்டிக்காட்டிய அவர் இயற்கைக் கடன்களின் போது பெரும் அவதிக்குள்ளாகின்றார் எனத் தெரிவித்தார்.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.சுகாஸ் மனிதாபிமான அடிப்படையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால், ரஜிராமின் தாயாருக்குத் தொலைபேசியூடாக உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதைக் கவனத்தில் கொள்ளுமாறு நீதிவானிடம் கேட்டுக் கொண்டார். வழக்கின் தீர்ப்பு ரஜிராமுக்கு சார்பாக அமையுமானால் அனைவரும் கொலைசெய்யப்படுவார்கள் என 15ஆம் திகதி உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவற்றைப் பரிசீலித்த நீதிவான் சந்தேக நபர்களைக் கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன் சாட்சிகளுக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என்ற நிபந்தனையுடன் 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் ஒரு இலட்சம் ரூபாவுக்குச் சமமான ஆள் பிணையிலும் செல்ல சந்தேக நபருக்கு அனுமதியளித்தார். பிணையாளி மல்லாகம் நீதிவான் நீதிமன்ற எல்லைக்குள் இருத்தல் வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

தவிர ரஜிராமின் தாயாருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பான விடயத்தை மன்றின் கவனத்தில் எடுத்து ரஜிராமின் நலனைப் பாதுகாக்கவும் மன்று கவனம் செலுத்தும் என்றும் தெரிவித்தார். வழக்கு யூலை 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பரமநாதன் ரஜிராம் (வயது-13) பாடசாலை சென்று கொண்டிருந்த போது கடந்த வருடம் சீரணிச் சந்தியில் வைத்து ஹையஸ் வாகனத்தில் வந்தவர்களால் கடத்தப்பட்டான். பின்னர் காத்தான்குடிக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்தான்.

யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டு நடைபாதைப் புடைவை வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த வேளை தாயாரால் இனங்காணப்பட்டு மீட்கப்பட்டான்.

ரஜிராம் கடத்தப்பட்டமை தொடர்பான சந்தேகத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த அன்ஷார், வாகன சாரதியான மொஹமட் முஸ்தப்பா மொஹமட் நஜீம், அப்துல்லாஹ் மொஹமட் ஜமீல், மொஹமட் சுல்தான் மொஹமட் றியால் ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (உ-4)

# தேவாலய வழிபாட்டுக்கு கடற்படையினர் கெடுபிடி

## முள்ளிக்குளத்தில் தொடரும் அவலம்

*மன்னார், ஜூன் 19*

***மன்னாரில் முள்ளிக்குளம் கிராமத்திலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் தற்காலிகமாகக் குடியமர்ந்துள்ள முள்ளிக்குளம் மக்கள் மாதா தேவாலயத்தில் வழிபடுவதற்கு கடற்படையினர் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.***

***முள்ளிக்குளம் மக்களின் நிலங்களை தற்போது கடற்படையினர் ஆக்கிரமித்துள்ளனர். இதனால் இந்த மக்கள் தமது சொந்த நிலத்தில் இருந்து 2 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள பகுதியிலேயே தற்காலிகமாக குடியேறியுள்ளனர்.***

முள்ளிக்குளம் கிராமத்துக்கு அருகில் அமைந்துள்ள கரடிக்குழி, மறிச்சுக்கட்டி, பாலைக்குழி, மொட்டைத்தீவு ஆகிய கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்து சென்ற முஸ்லிம் குடும்பங்கள் சகல வசதிகளுடனும் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளன. ஆனால் தமிழ் மக்களின் பூர்வீகக் கிராமமான முள்ளிக்குளத்தில் மட்டுமே மீளக்குடியமர்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் முள்ளிக்குளத்தை அண்டிய மலங்காடு, பெரியகுளம் ஆகிய காடுகளால் சூழப்பட்ட கிராமங்களில் தற்காலிகமாகக் குடியமர்ந்துள்ளனர்.

இந்த மக்கள் அனைவரும் கத்தோலிக்க மக்களாக உள்ளதால் தாம் வாழ்ந்த கிராமத்தில் அமைந்துள்ள புனித பரலோக மாதா ஆலயத்துக்குச் சென்று வழிபடுவதற்குக் கடற்படையினரின் அனுமதியைக் கோரினர். அதற்குக் கடற்படையினர் சில கட்டுப்பாடுகளுடனேயே வழிபடலாம் என்று கண்டிப்பான தொனியில் தெரிவித்துள்ளனர்.

மாதா தேவலாயத்தில் வழிபட கடற்படையினர் விதித்துள்ள கட்டுப்பாடுகள் வருமாறு:-

* ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டுமே மக்கள் ஆலயத்துக்குச் சென்று வழிபட முடியும்.
* இதன் போது அடையாள அட்டைகளைக் கடற்படையினரிடம் ஒப்படைத்து அனுமதிப்பத்திரம் பெற வேண்டும்.
* அடையாள அட்டை இல்லாதவர்கள் தேவாலயத்துக்குச் செல்ல முடியாது.
* கைத்தொலைபேசி, புகைப்படக் கருவி என்பவற்றைக்கொண்டுசெல்ல முடியாது.

இத்தகைய கட்டுப்பாடுகள் காரணமாக தமது ஆன்மீக வழிபாட்டைக் கூட மேற்கொள்ள முடியாது இருப்பதாக மக்கள் வேதனைப்படுகின்றனர்.

இதேவேளைவு, கடந்த வெள்ளிக்கிழமை தற்காலிகமாகக் குடியமர்ந்த இவர்களை அரச, அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த எவருமே இதுவரை சென்று பார்வையிடவில்லை.

மன்னார் ஆயர், பங்குத் தந்தை ஆகியோர் மட்டுமே இவர்களைச் சென்று பார்வையிட்டுள்ளனர். மீளக்குடியேறிய போது இவர்கள் எடுத்துச் சென்ற உலர் உணவுப் பொருள்களும் தீர்ந்து விட்டன என்று இந்த மக்கள் தெரிவிக்கின்றனர். முள்ளிக்குளம் கிராமத்தின் காணிகள் மன்னார் ஆயருக்குரியவை என்பது குறிப்பிடத்தக்கது. (ங-க-12)

## படையினரின் பிடியில் காணிகள் குமுழமுனை மக்கள் குமுறல்

*நெடுங்கேணி, ஜூன் 19*

*முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குமுழமுனைப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்களின் விவசாயக் காணிகளை இராணுவத்தினர் தடுத்து வைத்துள்ளமையால் பொருளாதார நிலையில் பெரும் பின்னடைவை எதிர்கொண்டு வருகின்றனர் என்று குமுழமுனை மக்கள் குமுறுகின்றனர்.*

*முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குமுழமுனைப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து ஒரு வருடமாகிறது. இந்த மக்களின் முக்கிய தொழிலாக விவசாயமே விளங்குகின்றது.*

*இங்குள்ள தண்ணிமுறிப்புக் குளத்தின் கீழ் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் வயல் காணிகள் உள்ளன. தற்போது ஆயிரத்து 300 ஏக்கர் மட்டுமே விவசாயத்துக்குப் பயன்படுத்துவதற்கு இராணுவம் அனுமதித்துள்ளது.மிதிவெடியைக் காரணம் காட்டி மீதிக் காணியை இராணுவம் தடுத்து வைத்துள்ளது. இதனால் மீளக்குடியமர்ந்த மக்கள் குறைந்த அளவு வயல் காணிகளிலேயே விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் இந்த மக்கள் போதிய வருமானமின்றி வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் .*

*மேலும் தண்ணிமுறிப்புக்குளத்தின் கீழுள்ள இரண்டு வாய்க்கால்களில் தற்போது ஒரு வாய்க்கால் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருவதாலும் விவசாய நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளது. (க-435)*

## தவில் வித்துவானுக்கு வவுனியாவில் கௌரவிப்பு

வவுனியா, ஜூன் 19

கலாசாரத் திணைக்களத்தால் கலாபூசணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பிரபல தவில் வித்துவான் வீராச்சாமியைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் 21 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் வவுனியா கோயில்குளம் அகிலாண்டேஸ்வரி சிவன்கோயில் மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (க-400)

## மன்னார் மாவட்ட செயலகத்தில் ஊடகக் கருத்தரங்கு

மன்னார், ஜூன் 19

மன்னார் மாவட்டச் செயலகத்தில் ஊடகக் கருத்தரங்கொன்று நடைபெற்றுள்ளது.

மாவட்ட அபிவிருத்தியில் பிரதேச ஊடகவியலாளர்களின் பங்களிப்பு என்னும் தொனிப்பொருளில் அரச தகவல் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஊடகக் கருத்தரங்கு சனிக்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அத்துடன் மன்னார் மாவட்ட அரச அதிபர் சரத் ரவீந்திர, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன், வவுனியா மாவட்டத் திட்டமிடல் அதிகாரி, பிரதேச செயலர்கள், உதவி அரச அதிபர்கள், திணைக்களங்களின் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

முதன்மை விருந்தினராகக் கைத்தொழில் வாணிபத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கலந்துகொண்டார். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்தக் கருத்தமர்வின் போது ஒவ்வொரு மாவட்டங்களினதும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஆரியரத்ன அத்துக்கல, பிரதிப் பணிப்பாளர் ஏ.ஹில்மி முஹம்மத் ஆகியோர் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தனர். (க-12)



வவுனியாவில் இடம்பெற்ற பாரம்பரிய சுதேச வைத்தியர்களின் இணையத்தின் வருடாந்த மாநாட்டுக்கு வருகை தந்த விருந்தினர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

## பொதுநோக்கு மண்டபத்தை வசதியான இடத்தில் அமைக்குக

### கற்குளம் மக்கள் வேண்டுகோள்

வவுனியா, ஜூன் 19

வவுனியா கற்குளம் கிராமத்தில் மக்கள் பயன்பெறக் கூடிய வசதியானதொரு இடத்தில் பொது மண்டபத்தை அமைக்குமாறு கிராம மக்கள் வவுனியாப் பிரதேச செயலரைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தற்போது கற்குளம் கிராமத்தின் எல்லைப் பகுதியிலுள்ள காட்டுப் பிரதேசத்தில் பொதுநோக்கு மண்டபத்தை அமைப்பதற்கான ஆயத்த வேலைகள் இடம்பெறுவதையடுத்தே கிராம மக்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனமொன்று இந்தப் பொதுநோக்கு மண்டபத்தை அமைப்பதற்கான நிதியை வழங்கியுள்ளது.

இந்த நிலையில் இங்குள்ள மாதர் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் தமக்கு வசதியானதொரு இடத்திலேயே இந்தப் பொது மண்டபத்தை அமைப்பதற்கு முயற்சிப்பதாகவும் கிராம மக்கள் கூறுகின்றனர்.

மேலும் கிராமத்தின் எல்லையிலுள்ள காட்டுப் பகுதியில் பொது மண்டபம் அமையுமாயின் அது உபயோகமற்ற நிலையிலேயே இருக்க வேண்டிநேரிடும் என்றும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (க-400)

## விதிகளை மீறிய சாரதிகளிடமிருந்து 11 ஆயிரத்து 500 ரூபா தண்டம் அறவீடு

கிளிநொச்சி, ஜூன் 19

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் வீதி ஒழுங்கு முறைகளை மீறி வாகனங்களைச் செலுத்தியவர்களிடமிருந்து 11 ஆயிரத்து 500 ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி முழங்காவில் பகுதியில் தலைக்கவசம் அணியாது சென்ற ஒருவருக்கு 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அதேதினம் ஆபத்தான முறையில் வாகனத்தைஓட்டிச் சென்ற ஒருவருக்கு ஆயிரம் ரூபாவும் வரி அனுமதிப் பத்திரமின்றி வாகனம் ஓட்டிச் சென்ற ஒருவருக்கு ஆயிரம் ரூபாவும் கடந்த 12 ஆம் திகதி பிறேக் இல்லாமல் வாகனம் செலுத்திய ஒருவருக்கு ஆயிரம் ரூபாவும் சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தை செலுத்திச் சென்ற ஒருவருக்கு 3 ஆயிரம் ரூபாவும் தலைக்கவசம் அணியாது வாகனம் செலுத்தியவருக்கு 500 ரூபாவும் அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தைச் செலுத்திய மேலும் ஒருவருக்கு 3 ஆயிரம் ரூபாவும் தண்டமாக விதிக்கப்பட்டது.

மேலும் ஜெயபுரம் பகுதியில் வீதியால் பயணித்தவர்களுக்கு மதுபோதையில் சென்ற நபர் இடையூறு விளைவித்ததற்காக ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இவர்கள் அனைவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுக் கடந்த 14 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே மேற்படி தண்டம் விதிக்கப்பட்டது. (க-6)

## குருமன்காடு பஸ்தரிப்பிடம் தொடர்ந்து அதே இடத்தில்

### நகரசபையின் பதில் தலைவர் உறுதி

வவுனியா, ஜூன் 19

வவுனியா குருமன்காட்டுச் சந்தியில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்தை அகற்றுவதில்லையென வவுனியா நகர சபையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

பொதுமக்களின் நன்மை கருதியே வவுனியா நகரசபை இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாக நகரசபையின் பதில் தலைவரான எம்.எம். ரதன் அறிவித்துள்ளார்.

இந்த பஸ்தரிப்பிடம் நீண்டகாலமாகவே அமைந்துள்ளது. அத்துடன் பஸ்ஸுக்காக காத்திருக்கும் பயணிகளுக்கு மிகுந்த பயனுள்ளதாகவும் விளங்குகின்றது.

சில காரணங்களால் இதனை அகற்றுவதென தீர்மானிக்கப்பட்ட போதிலும் தற்போது அகற்றுவதில்லை



எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார் .


ஏனைய நகரசபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடியதன் பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை இந்த பஸ் தரிப்பிடத்தை அகற்றவேண்டுமெனக் கோரும் கடிதம் ஒன்றை வவுனியா வரியிறுப்பாளர்கள் அனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-4)

## தேர்தல் நெருங்கும் வேளையில்

# மட்டக்களப்பில் நினைவுக்கல் மீது இனந்தெரியாத நபர்கள் மை பூச்சு





மட்டக்களப்பு,ஜூன்19

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நெருங்கும் வேளையில் மட்டக்களப்பு, ஏறாவூர் நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் நேற்று திங்கட்கிழமை காலை திறக்கப்படவிருந்த அபிவிருத்திப் பணிகளுக்கான நினைவுக்கல் மற்றும் பெயர்ப்பலகைகளை இனந்தெரியாத நபர்கள் நிறப்பூச்சு பூசி சேதமாக்கியுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை காலை ஏறாவூர் நகரில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைரின் வேண்டுகோளின் பேரில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் உதுமாலெப்பையினால் 8 கோடி ரூபா செலவில் ஆரம்பிக்கப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்களுக்கான நினைவுக்கல் மற்றும் பெயர்ப்பலகைகள் மீதே இவ்வாறு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைர் தெரிவித்ததாவது:-

எனது வேண்டுகோளின் பேரில் ஏறாவூரில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் உதுமாலெப்பையினால் வழங்கப்பட்ட 8 கோடி ரூபா பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்கள் நேற்று ஆரம்பித்துவைக்கப்படவிருந்தன. அத்துடன் பூர்த்திசெய்யப்பட்ட அபிவிருத்திப் பணிகளும் நேற்று மக்களிடம் கையளிக்கப்படவிருந்தன.

இந்தநிலையில் நினைவுக்கல் மீது நிறப்பூச்சு பூசப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது. இந்த அபிவிருத்தித் திட்டங்கள் என்னுடைய வேண்டுகோளின் போரில் இங்கு ஆரம்பிக்கப்படவுள்ளதால் அதற்கான பெயர்ப்பலகைகளில் எனது பெயரை அமைச்சர் உதுமாலெப்பை இணைத்துக் கொண்டார்.

ஆனால் இந்தப் பிரதேசத்தில் இருக்கும் அரசியல்வாதியொருவர் தனது பெயரை இணைக்கவேண்டும் என விடுத்த வேண்டுகோளை அமைச்சர் உதுமாலெப்பை நிராகரித்ததன் காரணமாகவே இந்தச் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முன்னர் குறித்த அரசியல்வாதி தன்னுடைய பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகையை அந்த இடத்தில் வலுக்கட்டாயமாக அமைத்தபோதும் அமைச்சர் உதுமாலெப்பையினால் அது அகற்றப்பட்டு இந்த நினைவுக்கல் மற்றும் பெயர்ப்பலகைகள் நடப்பட்டன.

இந்த அபிவிருத்திப் பணிகள் யாரால் கொண்டு வரப்பட்டது என்பது தொடர்பில் ஏறாவூர் பிரதேச மக்கள் நன்கு அறிவார்கள். அரசியலில் இருந்து எதனையும் செய்யாமல் யாரும் செய்யும் சாதனைகளுக்கு தனது பெயரை பொறித்துக் கொள்ள நினைக்கும் அரசியல்வாதிகள் தொடர்பில் ஏறாவூர் மக்கள் நன்கு புரிந்துகொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறான அரசியல்வாதிகள் இனியாவது விஷமத்தனமான செயற்பாடுகளை விடுத்து மக்களுக்குச் சேவையாற்ற முன்வர வேண்டும்- என்றார். (ச)

## நிபந்தனைகளை ஏற்காவிட்டால் தனித்துப் போட்டியிட நேரிடும்

### முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

மட்டக்களப்பு,ஜூன்19

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் தமது நிபந்தனைகளை அரசு ஏற்க மறுத்தால், தனித்துப் போட்டியிட நேரிடும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

எந்தக்கட்சியுடன் இணைந்து போட்டியிட்டாலும் தமது நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தத் தீர்மானம் தொடர்பான எழுத்து மூல ஆவணம் அடுத்த வாரமளவில் வெளியிடப்படும். எந்தக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவது என்பது தொடர்பில் இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று அவர் கூறினார்.

நிபந்தனைகளுக்கு உரிய மதிப்பு அளிக்கப்படாவிட்டால், கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தனித்து போட்டியிட நேரிடும் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

### மண்டூர் பிரதேசத்தில்

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற பத்துப் பேர் கைது

எருவில்,ஜூன்19

மட்டக்களப்பு, மண்டூர் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வந்த 10 பேர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கை மின்சார சபையின் கொழும்பு தலைமையக ஆய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் நிஹால் தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் பிரிவில் மின்சார சபை உத்தியோகத்தர்கள் மற்றும் வெல்லாவெளிப் பொலிஸார் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட தேடுதலின்போதே சட்டவிரோதமாக மின் பாவனையில் ஈடுபட்ட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-31)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

ஓம் சக்தி

நயினாதீவு

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய

2012 ஆம் ஆண்டு (நந்தன வருடம்)

உயர் திருவிழா



| | | | | |
|---|---|---|---|---|
| 19.06.2012 | செவ்வாய்க்கிழமை | 01 ஆம் திருவிழா | பகல் | கொடியேற்றம் 12.00 மணி |
| 23.06.2012 | சனிக்கிழமை | 05 ஆம் திருவிழா | இரவு | முத்துச்சப்பரம் |
| 25.06.2012 | திங்கட்கிழமை | 07 ஆம் திருவிழா | இரவு | கைலைக்காட்சி |
| 27.06.2012 | புதன்கிழமை | 09 ஆம் திருவிழா | பகல் | எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம் |
| 28.06.2012 | வியாழக்கிழமை | 10 ஆம் திருவிழா | பகல் | சிவபூசைக் கைலைக்காட்சி |
| | | 10 ஆம் திருவிழா | இரவு | திருமஞ்சம் |
| 29.06.2012 | வெள்ளிக்கிழமை | 11 ஆம் திருவிழா | பகல் | விசேட கருட சர்ப்பபூசை வாயு பட்சணி நாகம் வீதியுலா |
| | | | இரவு | பூந்தண்டிகை |
| 01.07.2012 | ஞாயிற்றுக்கிழமை | 1 3 ஆம் திருவிழா | பகல் | கைலைக்காட்சி |
| | | | இரவு | சப்பரம் |
| 02.07.2012 | திங்கட்கிழமை | 14 ஆம் திருவிழா | பகல் | தேர் 9.00 மணி |
| 03.07.2012 | செவ்வாய்க்கிழமை | 15 ஆம் திருவிழா | காலை | தீர்த்தம் |
| | | 15 ஆம் திருவிழா | மாலை | திருவூஞ்சல், கொடியிறக்கம் |
| 04.07.2012 | புதன்கிழமை | 16 ஆம் திருவிழா | இரவு | (பூங்காவனம்) தெப்போற்சவம் |

யாத்திரீகர்வின் நலன்கருதி, வழமைபோல் இம்முறையும் போக்குவரத்துச் சேவையினர், மோட்டார்படகுச்சேவையினர், அமுதசுரபி அன்னதான சபையினர், தாகசாந்தி நிலையத்தினர், சுகாதார சேவைப்பகுதியினர், தொண்டர் சபையினர், சாரணர்கள், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், முதலுதவிப்படைப்பிரிவினர், மக்கள் நலன்புரி சங்கத்தினர் அனைவரும் வேண்டிய ஒழுங்குகளைச் செய்துள்ளனர் என்பதனை அறியத்தருகின்றோம். இப் பெருவிழாச் சிறப்புடன் செய்து முடிப்பதற்கு திருவிழா உபயகாரர்களும், அடியார்களும் எமக்கு பூரண ஒத்துழைப்புத் தந்துதவுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்

**தினமும் மாலை கோயில் முன் கலையரங்கில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.**

அன்னையின் அருள் பெற அடியார்கள் அனைவரும் வருக

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு

அறங்காவலர்சபை

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# வடக்கு மாகாண சபை தேர்தலும் மறைந்து கிடக்கும் நோக்கமும்

வடமாகாண சபையின் தேர்தலை தொடர்ந்து ஒத்திவைக்காமல் விரைவில் நடத்தி இந்த மாகாணத்தின் நிர்வாகத்தை மக்கள் கையில் ஒப்படைக்கும்படி அமெரிக்கா முதற்கொண்டு பல வெளிநாடுகள் வற்புறுத்தி வருகின்றன.

இங்குள்ள நிலைமைகள் எங்களுக்கு மட்டும் தான் தெரியும், வெளிநாடுகள் எமக்கு சொல்லித்தர வேண்டிய தில்லை என்ற வகையில் அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

வடமாகாண சபை தேர்தலை நடத்தும்படி ஐ.தே.கவும் அண்மையில் வற்புறுத்தியிருந்தது. அந்த வகையில் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களில் ஒருவரும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவருமான வாசுதேவ நாணயக்காரவும் இப்பொழுது வலியுறுத்தியிருக்கிறார்.

கண்ணி வெடிகள் இன்னமும் அகற்றப்பட வேண்டியிருக்கிறது. இடம்பெயர்ந்த குடும்பங்களை மீளக் குடியமர்த்த வேண்டியுமிருக்கிறது. அதனால் மாகாண சபை தேர்தலை நடத்துவது உசிதமாக இல்லை என்ற வகையில் அரசாங்கம் கூறிக் கொண்டு காலம் கடத்திவருவதை அமைச்சர் நாணாயக்கார மறுதலித்து கண்ணிவெடி அகற்றும் செயல்கள், மீள்குடியேற்றங்கள் யாவும் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதுதான் வடக்கில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. அப்படியானால் மாகாண சபைத் தேர்தலை ஏன் நடத்த முடியாது என்று ஆணித்தரமான ஒரு கேள்வியைக் கேட்டு வைத்திருக்கிறார். அந்த மாதிரியான ஒரு சூழ்நிலையில் தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் கூட இந்த மக்கள் தமது ஜனநாயக கடமையை மிகக் கச்சிதமாகவும் பாராட்டும் படியாகவும் நிறைவேற்றி மகிழ்ந்தார்கள். எனவே தான் அரசு வடக்குமாகாண சபைத் தேர்தலை நடத்துவதைப் பின்போடுவதற்காக சாக்குப்போக்குக் கூறிக் கொண்டிருக்கிறது என்றே எண்ணத் தோன்றுகிறது.

வடக்கு மாகாணத்தைத் தவிர ஏனைய பகுதிகளில் மாகாண சபை தேர்தல்கள் முறையாக நடைபெற்று மாகாண நிர்வாகங்கள் சிறப்பாக நடைபெற்றக் கொண்டிருக்கின்றன. கிழக்குமாகாண சபையை முற்கூட்டியே கலைத்து அங்கும் தேர்தலை விரைவில் நடத்தி முடிப்பதற்கு அரசு முனைப்புக் காட்டிவருவது தெரிகிறது. அங்கேயும் அரசு தனக்குச் சாதகமான ஒரு கட்சியை பதவியில் அமர்த்தி அதன் தலைவரை முதல்வராக்குவதற்கு எத்தனிப்பதும் தெரிகிறது.

கிழக்கு மாகாணத்தைப் போன்றதொரு சூழ்நிலையை வடக்கிலும் உருவாக்கிக் கொள்ள அல்லது அவ்வாறான ஒரு சூழ்நிலை உருவாகும் வரை வடக்கு மாகாண சபைத் தேர்தலை இழுத்தடிப்பது அரசுக்கும் அதன் தலைவர்களுக்கும் தேவைப்பாடாக உள்ளது எனலாம்.

இது ஒரு ஜனநாயக நாடு-60 ஆண்டுகளுக்கு மேலாக ஜனநாயகம் இங்கு சிறப்பாகப் பேணப்பட்டுவருகிறது என்ற வாய்ப்பாட்டை ஓயாமல் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் உச்சரிக்கத் தவறாத அரசும் தலைவர்களும் இந்த நாட்டில் பேரினவாத ஆட்சிமுறையொன்றை தாங்கள் உணர்ந்தோ உணராமலோ முன்னெடுத்துவருவதை வெளிப்படுத்துவதில்லை.

போர் முடிவுக்கு வந்து மூன்று ஆண்டுகள் முடிவுற்று விட்டன. இன்னமும் குடாநாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகள் அவர்களுக்கு முறையாக வழங்கப்பட்டு அதை அவர்கள் அனுபவிக்க அனுமதிக்கப்படவில்லை. ஏனைய பகுதிகளில் உள்ள மக்கள் அனைவரும் ஜனநாயக முறையில் தமது வாக்குரிமைகளைப் பயன்படுத்தி தமது மாகாண சபைகளைத் தெரிவு செய்து கொள்ள முடியுமானால் வடக்கு மக்கள் மட்டும் ஏன் அதை அனுபவிக்கக் கூடாது?

கண்ணி வெடியும் மீள்குடியமர்வும் ஒரு புறமிருக்க இராணுவத்தின் செயல்பாடுகள் போர் முடிவுற்று விட்ட நிலையிலும் இன்னமும் இங்கு முடிவுறாமையே காரணம் என்று மக்கள் எண்ணுகிறார்கள். மக்களின் காணி அபகரிப்பிலும், புத்தர் சிலைகளை புதிது புதிதாக அமைப்பதிலும் அவர்கள் இறங்கியிருப்பதே அவர்களின் இப்போதைய செயல்பாடுகள். இந்த செயல்பாடுகள் முடிவுற்றதன் பின் அதாவது காணி அபகரிப்பும் சிலைகள் அமைப்பும் சிக்கல் பிசிறு இல்லாமல் முடிவுற்றதன் பின்னர் மாகாண தேர்தலை நடத்துவதே அரசின் உத்தேசம் என்று தோன்றுகிறது. இல்லையெனில் மக்கள் குடியிருப்புகளில் உள்ள முகாம்களை உடனடியாக அகற்றி மக்களின் குடியுரிமைகளுக்குள் அவர்கள் தலையிடுவதை நிறுத்தி, வடக்கு மாகாண சபை தேர்தலை விக்கினம் இன்றி நடத்த அரசு முன்வர வேண்டும். ஏனைய மாகாணங்களின் மக்களைப் போன்று இந்த மக்களும் ஜனநாயகத்தை அதன் பால் வரும் இன்றியமையாத உரிமைகளை நடைமுறையில் சுவைத்து மகிழ வழி செய்தல் வேண்டும்- இது தொடர்ந்து இழுபடுமானால் இதில் அரசின் கபட நோக்கம் ஒன்று மறைந்திருப்பதாகவே மக்கள் கருதுவர்.

# வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இராணுவம் மக்களிடையே போர்ப் பீதியை ஏற்படுத்துகிறது

**தேசிய சமாதானப் பேரவை நடத்திய சர்வதேச மாநாட்டில் சுட்டிக்காட்டு**

யாழ்ப்பாணம், ஜூன் 19

போர் முடிவடைந்த பின்னரும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இராணுவம் நிலைகொண்டிருப்பது அந்தப் பகுதி மக்கள் மத்தியில் போர்ப் பீதியை ஏற்படுத்துகிறது. அது மட்டுமன்றி நாட்டில் அமைதி ஏற்பட இது தடையாக இருக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேசிய சமாதானப் பேரவையுடன் இணைந்து தேசிய சர்வமத அமைப்பு கடந்த சனிக்கிழமை கொழும்பு புத்த ஜயந்தி நிலைய மாநாட்டு மண்டபத்தில் நடத்திய சர்வதேச மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மக்களை போர் மனோபாவத்திலிருந்து மீட்சி பெறவைப்பதற்கு சமயத் தலைவர்கள், அரசியல்வாதிகள், சிவில் சமூகத்தினர் ஒன்றுபட்டு செயற்பட முன்வர வேண்டும்.

12 மாவட்டங்களிலுள்ள சர்வ மத பேரவைக் கிளைகள் தேசியப் பிரச்சினை தொடர்பாக இரு வருடங்கள் ஆராய்ந்ததன் நிறைவில் இந்த மாநாட்டில் 8 அம்சங்கள் கொண்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

போரின் பின்னால் உள்ள சூழலில் ஏற்படும் சந்தேகம், அச்ச நிலை, நம்பிக்கையின்மை போன்றவை நீக்கப்பட வேண்டும்.

வன்முறையை ஒழிக்க வேண்டும், ஒருவருக்கொருவர் செவி சாய்த்து மற்றவர் தேவைகளைப் புரிந்து கொள்ளும் சமூகம் ஒன்றை பயிற்றுவிக்க வேண்டும்.

போரால் பாதிக்கப்பட்ட பின் இலகுவாக பல இன்னல்களுக்கு ஆளாகும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் மட்டுமன்றி ஏனைய நபர்களையும் அவர்கள் முகம் கொடுக்கும் அழுத்தங்கள் துன்பங்களில் இருந்த மீட்க வேண்டும்.

அனைவரது உரிமைகளும் பாதுகாக்கப்படும் நிலைமை உருவாக வேண்டும். தேசிய ரீதியில் ஏற்படக் கூடிய பதற்ற நிலையோ, போர் நிலையோ, மீண்டும் வரக்கூடிய சாத்தியக் கூறுகளை அகற்ற வேண்டும்.

இவை தொடர்பாக பொறுப்பதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரல், ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்ப ஒத்துழைத்தல் சிவில் சமூகத்தின் கடமை.

நிலையான சமாதானத்தை மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளை ஆட்சியாளர்களின் கவனத்துக்குக் கொண்டு வருதல் வேண்டும்.

போரால் பாதிக்கப்பட்டோரின் மனித நேயப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் நாட்டின் ஏனைய பிரிவினர்களுடன் ஒன்றித்து உறவாட உள்ள தடைகளை நீக்குவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.


கடந்த 30 வருட காலமாக நாட்டில் பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பின்னடைவை ஏற்படுத்திய போர் காரணமாக ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளைக் குறைக்க முயற்சி செய்யவும் நிலையான சமாதானத்தை அடைவதற்கான சூழலை ஏற்படுத்துவதற்கு சர்வ மதத் தலைவர்கள் மற்றும் சமூகத் தலைவர்களின் இணக்கப்பாட்டில் எதிர்பார்க்கப்பட்டது.

இந்த மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கை இன்று முழுமையாக போர் மனோபாவத்துக்குள்ளே தள்ளப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மக்கள் அனுபவித்து வரும் துன்பங்கள் கொஞ்சமல்ல. இந்த மாநாட்டில் எட்டப்பட்ட தீர்மானங்கள் அறிக்கையோடு நின்று விடாமல் செயல் வடிவுக்கு கொண்டு வரப்பட்டு அந்த மக்களின் விடிவுக்கு வழி கோல வேண்டும்.- என்றார். (ம-16)

(மற்றொரு செய்தி 17 ஆம் பக்கத்தில்)

# நயினை அம்பாள் பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூன் 19

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இன்று நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும்.

இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை இரவு முத்துச் சப்பரமும் 25 ஆம் திகதி இரவு கைலாச வாகனமும் 27 ஆம் திகதி எழுந்தருளி அம்பாள் சங்காபிஷேகமும் 28 ஆம் திகதி கைலைக் காட்சியும் 29 ஆம் திகதி கருடன் சர்ப்ப பூசையும் இடம்பெறவுள்ளன. முதலாம் திகதி இரவு சப்பரமும் இரண்டாம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் மூன்றாம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

தீர்த்தத் திருவிழாவன்று மாலை கொடியிறக்கம் இடம்பெறும்.

திருவிழாவை முன்னிட்டு அங்கு கூடும் பெருந்திரளான மக்களின் வசதிக்காகச் சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பகுதியினர் தினமும் ஆலய சுற்றாடல் பகுதிகளைச் சுத்தமாக வைத்திருக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இலையான்களை அழிப்பதற்கான மருந்துகளும் விசிறப்படவுள்ளது. குடிதண்ணீர், மலசலகூட வசதிகள் சீர் செய்யப்பட்டுள்ளன. பொது மக்கள் சுகாதார நலன் கருதி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறை மிகவும் கூடுதலான மக்கள் திருவிழாவில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் நகைகள் அணிந்து வருவதைத் தவிர்க்குமாறும் களவுகள் இடம்பெறுவதைத் தவிர்க்க ஒத்துழைப்பு வழங்குமாறும் ஆலய அறங்காவல் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. தொண்டர் சேவைகளும் வழமை போன்று இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச செயலகம், வேலணை பிரதேச சபை, கடற்படையினர், பொலிஸார், அன்னதான சபையினர், படகு உரிமையாளர், சுகாதாரப் பகுதியினர் அனைவரும் தத்தமது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றி மக்களுக்கு உதவத் தயாராக உள்ளனர் எனவும் குறித்த விடயங்களில் ஆலய அறங்காவலர்கள் அவதானத்துடன் இருப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது.(ம-7-17)

# மாவைக் கந்தனுக்கு ஞாயிறன்று கொடியேற்றம்



யாழ்ப்பாணம், ஜூன் 19

சரித்திரப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் காம்யோற்சவப் பெருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் மூன்றாம் திகதி (ஜூலை 18 ஆம் திகதி) வரை நடைபெறவுள்ளது.

திருக்கார்த்திகைத் திருவிழா ஜூலை 14 ஆம் திகதியன்றும் தேர்த் திருவிழா 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் தீர்த்தத் திருவிழா ஆடி அமாவாசை தினமான ஜூலை 18 ஆம் திகதி புதன்கிழமையும் நடைபெறும்.

திருவிழா நாள்களில் ஆறு சாமப் பூசைகள் விசேடமாக நடைபெறும் என்று ஆலய ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள் தெரிவித்தார். (அ)

# கணித மதிப்பீடு

தென்மராட்சி, ஜூன் 19

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம்- 6 வகுப்புக்களில் கற்கும் மாணவர்களுக்கான கணித மதிப்பீடு இல.5 எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

மதிப்பீட்டுக் கால வினாத்தாள்களை நாளை மறுதினம் வியாழக் கிழமை பிற்பகல் 12. 30 மணி தொடக்கம் கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு மதிப்பீடு இல.6 ஜூலை 6 ஆம் திகதி நடைபெறுமெனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ம-9)

# துணுக்காயில் இராணுவத்தால் 712 ஏக்கர் காணி அபகரிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 19

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தில் சுமார் 712 ஏக்கர் காணிகளை இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்துள்ளனர் என்று தெரிய வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களில் பொது மக்களின் காணிகளையும் அரச காணிகளையும் இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்துள்ளதுடன் அந்தக் காணிகளைத் தமக்கு வழங்குமாறு தொடர்ந்தும் வற்புறுத்தி வருகின்றனர்.

**தென்னியன்குளம் பகுதியில் 200 ஏக்கர் காணியையும் கோட்டைகட்டியகுளம் பகுதியில் 150 ஏக்கர் காணியையும் தேறாங்கண்டல் பகுதியில் சுமார் 250 ஏக்கர் காணியையும் துணுக்காய் ஆலங்குளம் பகுதியில் 112 ஏக்கர் காணியையும் இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர்.**

துணுக்காய் தென்னியன் குளம் பகுதியில் 200 ஏக்கர் காணியையும் கோட்டை கட்டியகுளம் பகுதியில் 150 ஏக்கர் காணியையும் தேறாங் கண்டல் பகுதியில் சுமார் 250 ஏக்கர் காணியையும் துணுக்காய் ஆலங்குளம் பகுதியில் 112 ஏக்கர் காணியையும் இராணுவத்தினர் ஆக்கிரமித்து அந்தக் காணிகளில் முகாம்களை அமைத்துள்ளதுடன் பயிர்ச் செய்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்

இந்த நிலையில் இந்தப் பிரதேசத்தில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் காணிகள் இன்றி வாழ்ந்து வருகின்றன.

அமைதிபுரம், தென்னியன்குளம், கோட்டைகட்டிய குளம், பழைய முறிகண்டி, தேறாங்கண்டல், ஆலங்குளம், அனிஞ்சியன்குளம், ஐயன்கன்குளம் போன்ற பகுதிகளிலேயே இராணுவத்தால் இந்தக் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. (க-6)

## கேட்டதெல்லாம் கொடுக்கும் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர்

பெருந்திருவிழா நேற்று ஆரம்பம்



சரித்திர வரலாறு படைத்த ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோயில் கொடியேற்ற வைபவம் நேற்றைய தினம் 18 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றுள்ளது.

இந்த ஆலயமானது ஆரம்பமாவதற்கு முன்பு இந்தவிடம் பெருங்காடாக இருந்து வந்தது. இதற்கு அண்மையாக உள்ள கற்சிலைமடு தான்தோன்றீஸ்வரம் ஆலயத்தில் திருவிழாக்கள் நடைபெற்றன. அத்தோடு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரம் ஆலயத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வாவெட்டிமலையில் ஆலயம் ஒன்று இருந்தமையால் அங்கும் விழா நடைபெற்றதாக முன்னோர் தெரிவித்தனர். ஆனால் அதுபற்றிய சரியான விவரம் தெரியவில்லை.

இவ்வாறிருந்த நிலையில் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் இருக்கின்ற இடம் காடாக இருந்தமையால் சேனைப்பயிர் செய்வதற்காக காடுவெட்டித் துப்புரவு செய்து குரக்கன் பயிர் செய்தனர். குரக்கன் அறுவடையை மேற்கொண்ட பின் ஒட்டுகளுக்கு தீயிடப்பட்டபோது ஒரு கொன்றை மர நிழலின் கீழ் ஒரு குறிப்பிட்ட இடம் எரியாமல் இருந்தது.

எரியாத இடத்தைத் துப்புரவு செய்தபோது அதிலே உள்ள கல் ஒன்றிலே மண்வெட்டி பட்டதும் பட்ட கல்லிலிருந்து குருதி வடியத் தொடங்கியது. வேலையை மேற்கொண்டவர்கள் ஆச்சரியமுற்று ஊராருக்குத் தெரிவித்தனர்.

கிராமமக்கள் திரண்டுவந்து பார்த்தபோது அங்கே தான்தோன்றியாகச் சிவலிங்கம் காணப்பட்டதைத் தொடர்ந்து அதற்கு ஆலயம் அமைத்து தீயிலே வேகாதபடியினால் வேகாவனம் என ஆலயத்துக்குப் பெயரிட்டதுடன் ஒட்டுக்களுக்கு தீயிட்டதன் பயனாக கிராமத்துக்கு ஒட்டுசுட்டான் என்ற பெயரும் வழங்கலாயிற்று. இவ்வாலயமானது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து தற்போது பெரும் ஆலயமாக விளங்கி வருகிறது. ஆனி மாதத்தில் அமாவாசையில் கொடி ஏற்றப்பட்டு பூரணை தினத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெறும்.

அதன்படி 18 ஆம் திகதி கொடியேற்றமும் 30 ஆம் திகதி அன்று வேட்டைத்திருவிழாவும் அடுத்த மாதம் 2 ஆம் திகதி அன்று தேர்த்திருவிழாவும் அதனைத் தொடர்ந்து அடுத்த நாள் தீர்த்தோற்சவத்துடன் பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். ஒவ்வொரு திருவிழாவும் ஒவ்வொரு கிராமத்தவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

10ஆம் திருவிழாவை உத்தியோகத்தர்கள் வெகு சிறப்பாகச் செய்வார்கள். பல அற்புதங்களை நிகழ்த்தியும் தற்போது வேண்டுவோருக்கு வேண்டியதைத் கொடுத்துக் கொண்டிருக்கின்ற ஒட்டுசுட்டான் வேகாவனப் பெருமானின் அருளைப்பெற நாலா திசைகளிலிருந்தும் மக்கள் வந்துகொண்டே இருப்பர். முல்லை மாவட்டத்திலே மிகவும் பிரசித்தமான பெரிய அளவிலான திருக்குளத்தோடு அழகான கட்டடம் அமைந்த ஆலயமாக இந்த ஆலயம் திகழ்வது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

**இ.தனபாலசிங்கம்**

## வவுனியா அரச ஊழியர்களுக்கு சிங்களத்தில் கற்கைநெறி

வவுனியா மாவட்டத்திலுள்ள அரச ஊழியர்களுக்கு சிங்களக் கற்கை நெறியொன்று நடத்தப்பட்டு வருகின்றது.

தேசிய மொழிகள் பயிற்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் வடமாகாண முகாமைத்துவப் பயிற்சி நிறுவனம் இந்தக் கற்கைநெறியை நடத்தி வருகின்றது.


தற்போது இந்தப் பயிற்சி நெறி வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்று வருகின்றது.

அந்த அடிப்படையில் கடந்த 11 ஆம் திகதி வவுனியாவிலும், 12 ஆம் திகதி கிளிநொச்சியிலும், 13 ஆம் திகதி முல்லைத்தீவிலும் ஆரம்பித்து நடைபெற்று வருகின்றன. வவுனியாவிலிருந்து சுமார் 100 அரச ஊழியர்கள் இந்த 120 மணித்தியாலச் சிங்களக் கற்கை நெறியில் இணைந்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான கற்கை நெறி வவுனியா கமநல சேவைகள் நிலையத்தில் இடம்பெற்று வருகின்றது. இங்கு சிங்கள மொழியில் நன்கு தேர்ச்சி பெற்ற வளவாளர்கள் பயிற்சியை வழங்கி வருகின்றனர்.

பயிற்சி நெறியின் முடிவில் பரீட்சை நடத்தப்பட்டு எதிர்வரும் 20 ஆம் திகதி இடம் பெறும் நிறைவு நாளின் போது சான்றிதழ்கள் வழங்கப் படவுள்ளன. (க-400)

## நம்பிக்கையே துணை. ..



கொடிய போரால் தனது ஒரு காலை இழந்த நிலையிலும் தன்னம்பிக்கையுடன் பாடசாலை செல்லும் துணுக்காய்ப் பகுதியைச் சேர்ந்த மாணவன் ஒருவன். (க)

### சீரான போக்குவரத்து வசதியில்லை:

## தனியார் வாகனத்துக்கு அதிக பணம் செலவிடும் வன்னேரிக்குளம் மக்கள்

கிளிநொச்சி,ஜூன் 19

போக்குவரத்து வசதிகள் பூரணமாகக் கிடைக்காத நிலையில் வன்னேரிக் குளம் மக்கள் தனியார் வாகனங்களுக்கு அதிக பணத்தைச் செலவிட வேண்டிய அவலநிலையில் உள்ளனர்.

கிளிநொச்சி, வன்னேரிக் குளம் மக்கள் போக்குவரத்தில் தொடர்ந்தும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வன்னேரிக் குளத்துக்குச் சீரான பஸ் சேவைகள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

**கிளிநொச்சியில் இருந்து அம்பலப் பெருமாள் சந்தி வரையான பகுதி வரைக்குமே அரச பஸ் சேவை இடம்பெறுகின்றது. ஆனால் பல்லவராயன் கட்டுச் சந்தியில் இருந்து வன்னேரிக்கான பஸ் சேவைகள் எவையும் இல்லை.**

குறிப்பாகக் கிளிநொச்சியில் இருந்து அம்பலப் பெருமாள் சந்திவரையான பகுதி வரைக்குமே அரச பஸ் சேவை இடம்பெறுகின்றது.

ஆனால் பல்லவராயன் கட்டுச் சந்தியில் இருந்து வன்னேரிக்கான பஸ் சேவைகள் எவையும் இல்லை. இதனால் அம்பலப் பெருமான் சந்தியில் இருந்து வன்னேரிக்குளம் செல்ல வேண்டிய மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இவர்கள் ஓட்டோவுக்கு 600 ரூபா கொடுத்துச் செல்லவேண்டிய நிலையிலுள்ளனர்.

மேலும் பூநகரி பல்லவராயன்கட்டுச் சந்தியில் இருந்து எந்தவிதமான பஸ் சேவையும் இல்லாத நிலையில் அங்கிருந்து வன்னேரி செல்லவேண்டிய பயணிகள் ஜெயபுரம் வரை நடந்து சென்று அங்கிருந்து 500 ரூபாவைக் கொடுத்து ஓட்டோவைப் பிடித்து தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

பாடசாலை செல்ல வேண்டிய ஆசிரியர்கள் ஏனைய தேவைகளுக்கு செல்லவேண்டிய மக்கள் எனப் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையே காணப்படுகின்றது. (க-6)

## சாரதிக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி, ஜூன் 19

பளைப் பகுதியில் இடம் பெற்ற வீதி விபத்துடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி, பளைப் பகுதியில் கூலர் வாகனம் ஒன்றால் மோதுண்ட குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்துடன் தொடர்புடைய கூலர் வாகனத்தை ஓட்டிச் சென்ற சாரதி பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். ஆரம்ப கட்ட விசாரணைகளின் பின்னர் குறித்த சந்தேகநபரைக் கடந்த 14 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முன்னிலைப்படுத்தினர்.

இவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார். (க-6)

## அனுமதி பெற்றபோதும் மணலை ஏற்றுவதற்கு இராணுவம் தடை

துணுக்காயில் அனுமதியைப் பெற்று மணல் ஏற்றுபவர்களை இராணுவத்தினர் தடை செய்வதால் வீடுகளை அமைத்துவரும் மீளக்குடியமர்ந்த மக்கள் தமது வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியாத அவல நிலையில் உள்ளனர்.

துணுக்காயில் வீட்டுத் திட்ட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் தம்மால் அமைக்கப்பட்டு வரும் நிரந்தர வீடுகளுக்குத் தேவையான மணலைக் கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோரின் அனுமதியுடன் ஏற்றுவதற்கெனச் செல்லும்போது மணல் ஏற்றப்படும் இடங்களுக்குச் செல்லும் இராணுவத்தினர் அதற்குத் தடை விதிக்கின்றனர்.

இதனால் வீட்டுத்திட்ட வேலைகள் தடைப்பட்டுத் தாமதமடைவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)

# கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை கல்லுண்டாயில் அமைப்பு

**திட்டத்தை விரைந்து நடத்தி யாழ். குடாநாட்டு மக்களுக்கும் ஏனைய பிரதேசங்களுக்கும் குடிதண்ணீரை விரைந்து வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம், ஜூன் 19

நவீன தொழில்நுட்ப தொழில் நுணுக்க வசதிகளைக் கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை 150 மில்லியன்ரூபா செலவில் கல்லுண்டாயில் அமையவுள்ளது.

சுத்திகரிப்பு ஆலை - பம்ஹவுஸ் ஆகிய பெரிய ஆலைகள் அமைப்பதற்குக் கடந்த வருடம் தேவையான காணி வழங்கப்பட்டிருந்தது.

மக்களுக்கு தீங்கு ஏற்படாத வகையிலும் விவசாயிகளுக்கு பயனுள்ளதான வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று அரச அதிகாரிகளுடனான கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தை விரைந்து நடத்தி யாழ். குடாநாட்டு மக்களுக்கும் ஏனைய பிரதேசங்களுக்கும் குடிதண்ணீரை விரைந்து வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, கல்லுண்டாயில் அமைக்கப்படவுள்ள இந்தச் சுத்திகரிப்பு ஆலை தொடர்பான மக்கள் சந்திப்புக் கூட்டத்தில் அவர்கள் ஒருமித்து கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது:-

மக்களுக்குப் பயனுள்ள எந்தத் திட்டத்துக்கும் நாம் எதிர்ப்பில்லை. ஆனால் மக்களின் சுகாதாரம், நோய் மற்றும் தாக்கம் தொடர்பாக யாழ்.தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு தொடர் பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

இதேவேளை, கல்லுண்டாய் பிரதேசத்தில் அமையவுள்ள சுத்திகரிப்பு ஆலைப் பிரதேசத்தை ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழுவினரும் ஏனைய நிபுணர்களும் பார்வையிட்டு முதல் கட்ட வேலைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தேசிய நீர்வழங்கல் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-50)

# மானிப்பாய் பிரதேச சபை வீதிகளில் குப்பை கொட்டுவதற்குத் தடை

நவாலி, ஜூன் 19

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகளில் குப்பைகள், கழிவுப் பொருள்கள் கொட்டுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

டெங்கு ஒழிப்பை முன்னிட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியிருப்பாளர்களின் வீட்டு வளவுகளிலுள்ள கழிவுப் பொருள்களை உரப் பைகளில் கட்டி வீதிகளில் வைக்குமாறும் அவற்றை பிரதேச சபை வாகனங்கள் ஏற்றிச் செல்லும் என்றும் முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது இந்த நடைமுறை நீக்கப்பட்டுள்ளதால் குடியிருப்பாளர்கள் குப்பைகளைக் கண்ட கண்ட இடங்களிலும் கொட்டிவிட்டுச் செல்கின்றனர். இதனால் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்பட்டு வருவதுடன் பலவித கொடிய நோய்கள் தோன்றும் ஏது நிலையும் காணப்படுகிறது.

ஆதலால் இனிவரும் காலங்களில் கழிவுப் பொருள்களை தமது வீட்டு வளவுகளுக்குள் வெட்டிப் புதைத்தோ அல்லது எரித்தோ அழித்துவிடுமாறு பிரதேச சபையின் செயலாளர் பு.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

மீறுவோர் மீது நீதிமன்றம் மூலம் வழக்குத் தொடரப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-100)

# யாழ். கோட்டையின் பின்புற வீதி அகலிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்.கோட்டையின் பின்புறமாகவுள்ள கடற்கரை வீதியை அகலிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கெனக் கடற்கரையோரப் பகுதியில் மண் கொட்டப்பட்டுச் சீரமைக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பகுதியில் தாழ்ந்த இடங்கள், கடல் நீர் உட்புகும் இடங்கள் என்பன மண் கொட்டப்பட்டு நிரப்பப்பட்டு வருகின்றன.

கனரக வாகனங்களின் உதவியுடன் இந்தப் பணிகள் கடந்த சில நாள்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (த-17)



வல்வெட்டித்துறைப் பொலிஸாரின் நடமாடும் சேவை கம்பர்மலை வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. பொலிஸ் நிலையம் பொறுப்பதிகாரி சி.ஐ.குமாரசிங்க தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் ராஜபக்ஷ கலந்துகொண்டார். பொதுமக்கள் பொலிஸாரிடையே நல்லுறவை ஏற்படுத்தும் நோக்குடன் இந்த நடமாடும் சேவை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (ம-252)

# சங்கானைச் சந்தையில் மலசலகூட வசதிகள்

சங்கானை, ஜூன் 19

சங்கானை மரக்கறிச் சந்தையிலுள்ள பகுதியில் இருசாராருக்குமான மலசலகூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

வலி.மேற்கு பிரதேச சபையால் இவை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் சந்தைக்கு வரும் வியாபாரிகள், பொதுமக்கள் இவற்றைப் பாவனை செய்யாது மலசலகூடத்துக்கு வெளியே தமது இயற்கைக் கடன்களைக் கழித்து வருகின்றனர்.

இதனால் இந்த மலசலகூடத்துடன் இணைந்த ஓடக்கரை வீதியில் செல்வோர் மூக்கைப் பிடித்துக் கொண்டு செல்லவேண்டிய நிலையில் உள்ளனர்.

இந்த விடயத்தில் உரிய அதிகாரிகளின் கவனம் திரும்புமா என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-29)

# நாயன்மார்கட்டு குளப் பகுதியில் குப்பைகளால் சுகாதாரக் கேடு



கொழும்புத்துறை, ஜூன் 19

அரியாலை நாயன்மார்கட்டு குளப் பகுதியில் கொட்டப்படும் குப்பைகளால் பெரும் சுகாதாரச் சீர்கேடு நிலவி வருகின்றது.

கால்நடைகள் இவற்றை இழுத்து சிந்துவதால் வீதியால் பயணிப்போர் துர்நாற்றத்தால் பெரும் அவலப்படுகின்றனர்.

இந்தப் பகுதியில் குடிமனைகள் இல்லாதபோதும் அயலிலும் வேறு இடங்களிலும் இருந்தும் குப்பை மற்றும் கழிவுகளை அதிகாலை வேளையில் எடுத்து வந்து வீசிவிட்டு செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இந்தச் சுற்றுபுறச் சூழல் பாதுகாப்புக்கு எதிரான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த பொலிஸார் மற்றும் சுகாதார பரிசோதகர்கள் அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

காலை வேளைகளில் குப்பைகளை வீசவருவோரை மடக்கிப் பிடிக்கும் நோக்கில் சுகாதார உத்தியோகத்தர்களும் பொலிஸாரும் சிவில் உடையில் இந்தப் பகுதியில் நடமாடி வருகின்றனர்.

இவ்வாறு குப்பைகளை காலை நேரம் எடுத்து வந்த சிலர் கடந்த வாரம் அகப்பட்டு குற்றப் பணம் செலுத்தியதாகவும் கூறப்படுகிறது.

தொடர்ந்து இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோர் அகப்படும்போது அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-135)

# சங்கானையில் பெருகும் பாதீனியம்

சங்கானை, ஜூன் 19

சங்கானை மண்டிகைக் குளம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் பாதீனியச்செடி அமோகமாக வளர்ந்துள்ளது.

வருடா வருடம் இதனை அகற்றுவதில் ஈடுபடும் சுகாதாரப் பரிசோதகர்கள் இந்த முறை இந்த விடயத்தில் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்று பலதரப்பட்டோரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் எள்ளு, புல், நெல் வளர்வதைப் போன்று பாதீனியமும் வளர்ந்துள்ளது.

இதனை அகற்றுவதாயின் இதன் பூக்கள் பூத்து அந்தப் பூக்கள் காய்வதற்கு முன் அகற்றவேண்டும்.

பூத்துக் காய்ந்த பின் அகற்றுவதால் அந்த விதைகள் நிலத்தில் சிந்தப்பட்டு வருடா வருடம் இவ்வாறாக வளர்ந்து கொண்டே இருக்கும்.

சம்பந்தப்பட்டவர்கள் உடனடி நடவடிக்கை எடுத்து இவற்றை அகற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று விவசாயிகள் கேட்டுள்ளனர்.

இந்தக் குளத்துடன் இணைந்த 100 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாய நிலங்களிலும் இந்தப் பாதீனியம் பரவுவதற்கான நிலைமை ஏற்படும் என்று இந்தப் பகுதியில் விவசாயத்தை மேற்கொண்டுள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ம-29)

# வீட்டில் டெங்கு பரவும் சூழல் வைத்திருந்ததால் நடவடிக்கை

நவாலி, ஜூன் 19

ஆனைக்கோட்டையில் டெங்கு பரவக்கூடிய விதத்தில் தமது வீட்டு வளவில் கழிவுப் பொருள்களை வைத்திருந்த இருவர் மானிப்பாய் பொலிஸாரின் பரிசோதனையின்போது கண்டறியப்பட்டுள்ளனர்.

டெங்கு ஒழிப்பை முன்னிட்டு ஆனைக்கோட்டை நவாலி மற்றும் இதர பகுதிகளில் மானிப்பாய் பொலிஸார் தற்போது வீடுவீடாகச் சென்று பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பரிசோதனையின்போது ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியிலுள்ள இரு வீடுகள் சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படும் வகையிலும் பரவக்கூடிய வகையிலும் வைத்திருந்தனர் என்று இவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு டெங்கு பற்றிய பல அறிவுரைகளும் பொலிஸாரால் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-100)

# வடிகாலால் துர்நாற்றம்



சங்கானை, ஜூன் 19

பொன்னாலை வீதி, சங்கானையில் அமைந்துள்ள மண்டிகைக்குளத்தையும், சங்கானை பிரான்பற்று வீதியையும் இணைக்கும் பாதையில் சங்கானை மீன்சந்தைக்கு முன்பாக ஒரு வடி கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கால்வாயின் ஊடாக மாரி காலங்களில் வரும் மழை நீர் மண்டிகைக்குளத்தை வந்தடையும்.

ஆனால் தற்போது இந்த வடிகால் வாய்க்காலுடன் இணைந்து பாதையோரம் வலி மேற்கு பிரதேச செயலகமும், ஒரு உணவகமும் அமைந்துள்ளன.

இவ்விரு இடங்களிலும் இருந்து வரும் கழிவுப் பொருள்கள் யாவும் இக் கால்வாயில் குழாய்கள் மூலம் விடப்பட்டு குளத்தை சென்றடைகின்றன.

ஆனால் வாய்க்காலில் வளர்ந்துள்ள புல் பூண்டு. மற்றும் எச்சங்களால் கழிவுகள் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுகிறது. இதனால் மக்கள் இந்தப் பாதையைப் பாவிக்க முடியாத நிலைமை உள்ளது. அத்துடன் டெங்கு உற்பத்திக்கான குடம்பிகள் பெருகும் இடமாகவும் இது மாறியுள்ளது.

டெங்கு வாரம் என்று வீடு வீடாகச் செல்வோர் பொது இடங்களில் உள்ள இந்தச் சீர்கேடுகள் குறித்துக் கவனம் செலுத்தவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ம-29)

# சோலர் கொள்வனவுக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூன் 19

வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சூரிய மின்கல (சோலர்) கொள்வனவுக்கு உள்ளூராட்சி சபைகள் சிலவற்றுக்கு ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளார்.

இந்தச் சோலர்களை உடனடியாகக் கொள்வனவு செய்ய சபைத் தலைவர்கள், செயலாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன் மூலம் மின்சாரம் இதுவரை வழங்கப்படாத உள்ளூராட்சி பிரதேசங்கள் நன்மை அடையும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-50)

# சைக்கிள்கள் திருட்டு

நவாலி, ஜூன் 19

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்தில் அடுத்தடுத்து மூன்று சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலய வருடாந்தத் திருவிழாவின்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆலயத்துக்கு வந்த பக்தர்களது சைக்கிள்களே இவ்வாறு திருட்டுப் போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-100)



ஜனாதிபதி பதவி வேட்பாளர் தெரிவு குறித்து பாரதீயஜனதாக்கட்சி, மூத்த தலைவர் அத்வானி தலைமையில் டில்லியில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் சுஷ்மா சுவராஜ், நிதின் கட்காரி, தே.ஜ., கூட்டணி ஒருங்கிணைப்பாளர் சரத்யாதவ், அருண் ஜெட்லி பங்கேற்றனர்.

# தனித் தமிழ் ஈழம்தான் ஈழப் பிரச்சினைக்கு தீர்வு

## திருமா எம்.பி. கருத்து

தமிழ் ஈழம் ஒன்றுதான் ஈழச் சிக்கலுக்கு தீர்வு; அதற்காக உலகத் தமிழர்களிடையே ஒரு பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று விடுதலைச்சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

இதுகுறித்து கடலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விழுப்புரத்தில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள டெசோ மாநாட்டில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் பெருமளவில் பங்கேற்க உள்ளனர்.

தமிழ் ஈழம் ஒன்றுதான் ஈழச் சிக்கலுக்கு தீர்வு என்பதையும், அதற்காக உலகத் தமிழர்களிடையே ஒரு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பதையும் டெசோ அமைப்பு வலியுறுத்துகிறது. அந்தக் கோரிக்கையை விடுதலைச் சிறுத்தைகள் வரவேற்பதால் டெசோ அமைப்பில் இணைந்து செயற்பட ஒப்புதல் அளித்திருக்கிறோம்.

டெசோ அமைப்பில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியையும் உறுப்பினராக இணைத்துக்கொண்டதற்கு தி.மு.க. தலைவர் கலைஞருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்-என்றார். (வ)

# ரயில் விபத்து: 10 பேர் படுகாயம்

மும்பையில் நேற்றிரவு பயணிகள் ரயில் இரண்டு மோதிக்கொண்ட விபத்தில் 10 பேர் படுகாயமடைந்தனர்.

மும்பையின் போரி வெய்லில் இருந்து புறநகர் விரைவு மின்சார ரயில் ஒன்று அந்தேரியின் ஜோகேஸ் வரி ரயில் நிலையம் நோக்கிப் புறப்பட்டது.

இந்த ரயில், ஒரே பாதையில் வந்த மற்றொரு மின்சார ரயிலுடன் மோதியதில் சில ரயில் பெட்டிகள் தடம் புரண்டன.

இந்த விபத்தில் 10 பேர் காயமடைந்ததாக ரயில்வே பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்துக் குறித்து உரிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இருப்பினும் இரு ரயில்களும் மிதமான வேகத்தில் மோதியதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

# ஆபாச நகைச்சுவைக்கு குஜராத்தில் தடை

தினசரி, வார, மாத பத்திரிகைகளில் ஆபாச நகைச்சுவைகளை வெளியிட குஜராத் அரசு தடை விதித்துள்ளது.

குஜராத்தில் உள்ள 35 ஆயிரம் அரச பாடசாலைகளுக்கு பத்திரிகைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப்பத்திரிகைகளில் ஆபாச நகைச்சுவைகள் இடம்பெறுவதால் அதைப் படிக்கும் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் என்பதனாலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளின் படிக்கும் பழக்கத்தை அதிகப்படுத்தவே பாடசாலைகளில் பத்திரிகைகள் விநியோகம் செய்யப்படுவதாகவும், மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு இந்த நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் குஜராத் கல்வித்துறை அமைச்சர் ராமன் வோரா தெரிவித்துள்ளார்.


# இந்திய விடுதலைப் போரைவிட மிகப்பெரியது ஈழப் போராட்டம்

## காசி ஆனந்தன் பெருமிதம்

இந்திய விடுதலைப் போராட்டத்தைவிட 100 மடங்கு பெரியது இலங்கை ஈழ விடுதலை போராட்டம் என்று கவிஞர் காசி ஆனந்தன் தெரிவித்தார்.

விழுப்புரத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு அவர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய சுதந்திர போராட்டத்தைவிட தமிழீழத்துக்கான போராட்டம் மிகப் பெரியது. சுபாஷ் சந்திரபோஸ் தான் எனக்கு வழிகாட்டி என்று பிரபாகரன் கூறியிருக்கிறார். இந்திய விடுதலைப் போராட்டத்தைவிட 100 மடங்கு பெரியது இலங்கை ஈழ விடுதலைப் போராட்டம்.



இந்தியப் போரில் சுமார் 30 ஆயிரம் பேர் இறந்திருப்பார்கள். ஆனால் ஈழ மண்ணில் நடந்த போரில் மூன்று லட்சத்துக்கு மேல் இறந்துள்ளனர்.

அப்போது விமானத்தில் வந்து யாரும் குண்டுகள் போடவில்லை. இப்போது அப்படியில்லை, அதிகமாக தமிழர்கள் வாழ்ந்த பூமியில் அதிகமான அளவில் குண்டு போட்டு சாகடித்துள்ளனர். அந்தப் போரில் யாரும் விதவையாக்கப்படவில்லை. மாறாக இலங்கையில் 89 ஆயிரம் பெண்கள் விதவையாக்கப்பட்டுள்ளனர். இதில் சுமார் 60 ஆயிரம் பெண்கள் குழந்தைகள் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் காந்தியடிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தில் யாரும் இறக்கவில்லை. ஆனால் இந்த இலங்கை விடுதலைப் போராட்டத்தில் திலீபன் போன்றவர்கள் அழிந்து போயிருக்கின்றனர். இது மிகவும் உயர்ந்த விடுதலைப் போராட்டமாகும். அங்குள்ளவர்கள் உறுதியாக இருக்கின்றனர். நாங்கள் அவர்களைவிட உறுதியாக இருக்கிறோம். ஈழப்போர் என்பது பிரபாகரன் மூட்டிய நெருப்பு. இந்த போராட்டம் தொடரும். வழக்கம்போல் எங்களுக்கு கை கொடுங்கள்-என்றார். (வ)

# தீவிரவாதிகள் தாக்குதல்

## துணைப்படை வீரர் ஐவர் படுகாயம்

காஷ்மீர் எல்லைப் பகுதியில் மத்திய துணைப்படை பொலிஸார் மீது தீவிரவாதிகள் கையெறி குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியதில் 5 இற்கும் மேற்பட்ட துணைப் படைப்பொலிஸார் படுகாயமடைந்தனர்.

இந்திய-பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் 175 ஆவது பட்டாலியன் பிரிவைச் சேர்ந்த மத்திய துணைப் பொலிஸ்படையினர் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது எல்லையிலிருந்து தீவிரவாதிகள் சிலர் இந்திய துணைப்பொலிஸ் படை மீது கையெறி குண்டுகளை வீசினர்.

இந்த எதிர்பாராத தாக்குதலில் உஷாரான இந்திய துணைப்பொலிஸார் பதிலடி கொடுத்தனர். இதில் துணைப்பொலிஸார் 5 பேர் படுகாயமடைந்தனர். (வ)

# ஈழப்படுகொலை சூத்திரதாரி கருணாநிதி அதை மூடி மறைக்கவே டெசோ மாநாடு

## ம.தி.மு.க. ஆண்டு விழாவில் வைகோ பாய்ச்சல்


ஈழத்தமிழர்களைக் கொன்று குவிப்பதற்கு காரணமாக இருந்த கருணாநிதி, தற்போது இதை மூடி மறைக்கவே டெசோ மாநாட்டை நடத்துகிறார் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ்நாடு, அரியலூரில் ம.தி.மு.கவின் 19 ஆவது ஆண்டு தொடக்க விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொள்ள வந்த வைகோ செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

இலங்கையில் மாவீரர் துயிலகங்கள், தமிழர் வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்பட்டு சிங்களவர் குடியேற்றம் நடைபெற்று வருகிறது.

இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். சிங்கள அரசின் இனப்படுகொலை தொடர்ந்து வெளிச்சத்துக்கு வந்து கொண்டு இருக்கிறது. இதனால், சர்வதேச நீதிமன்றத்தில் அந்நாட்டு ஜனாதிபதி ராஜபக்ஷவை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்து வருகிறது.

**சுதந்திரத் தமிழ் ஈழம் அமைய பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.**



சுதந்திரத் தமிழ் ஈழம் அமைய பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இந்த வாக்கெடுப்பில் உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் வாழும், தமிழர்கள் அந்தந்த நாடுகளில் வாக்குப் பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

ஈழத்தமிழர்களைக் கொன்று குவிப்பதற்கு காரணமாக இருந்தவர் கருணாநிதி. இதை மூடி மறைக்கவே, தி.மு.க. இப்போது டெசோ மாநாட்டை நடத்துகிறது- என்றார்.

# தொடரும் வேலை நிறுத்தம்; ஏர் இந்தியாவுக்கு புதிய விமானிகள்

விமானிகளின் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை அடுத்து, புதிய விமானிகளுக்குப் பயிற்சி அளித்து ஏர் இந்தியாவில் பணிக்கு அமர்த்தப்போவதாக சிவில் விமானப்போக்குவரத்துத்துறை அமைச்சர் அஜித் சிங் தெரிவித்துள்ளார்.

சம்பள உயர்வு, சிறப்பு போயிங் விமானப்பயிற்சி உட்பட சில கோரிக்கைகளை தமக்கு செய்து தர வலியுறுத்தி ஏர் இந்தியா விமானிகள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டத்துக்கு டில்லி உயர்நீதிமன்றம், மத்திய அரசு கண்டனம் தெரிவித்தும் கூட, விமானிகள் தங்களது போராட்டத்திலிருந்து பின்வாங்க வில்லை.

இந்தநிலையில் புதிய விமானிகளுக்குப் பயிற்சி அளித்து அவர்கள் விரைவில் பணிக்குச் சேர்க்கப்படுவார்கள் என்று அஜித் சிங் தெரிவித்தார். (வ)

# சோனியா கோரினால் கூட்டணிக்கு ஒரு கும்பிடு

## மம்தா அறிவிப்பு

காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி கேட்டுக் கொண்டால், ஐக்கிய முற்போக்குக் கட்சிகளின் கூட்டணியிலிருந்து தான் விலகிக் கொள்ளத் தயார் என்று, திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பணர்ஜி தெரிவித்தார்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளில், திரிணாமுல் காங்கிரஸ் தவிர, ஏனைய அனைத்துக் கட்சிகளின் ஒருமித்த கருத்தோடு, ஜனாதிபதி வேட்பாளருக்கு பிரணாப் முகர்ஜி அறிவிக்கப்பட்டார். ஆனால், என்னதான் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகித்தாலும், தன்னால் பிரணாப் முகர்ஜியை ஆதரிக்க முடியாது என்றும், தான் ஆதரிக்கும் வேட்பாளர் அப்துல் கலாம்தான் என்றும் மம்தா தனது முடிவில் பிடிவாதமாக இருப்பதால், ஐக்கிய முற்போக்குக் கட்சிகளின் கூட்டணியில் மம்தா நீடிக்க விரும்பவில்லையோ என்று



ஒரு கருத்து பல தரப்பினரிடமும் விவாதமாக இருந்தது.

இந்த கருத்துக்கு பதில் சொல்லும் வகையில், சோனியா காந்தி கேட்டுக் கொண்டால், ஐக்கிய முற்போக்குக் கட்சிகளின் கூட்டணியிலிருந்து தான் விலகிக் கொள்ளத் தயார் என்று நேற்று மம்தா அறிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய முற்போக்குக் கட்சிகளின் கூட்டணியிலிருந்து திரிணாமுல் காங்கிரஸ் விலகும் பேச்சுக்கே இடமில்லை என்று அந்தக்கட்சியின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

# புதிய குடியரசுக் கட்சியினருக்கு கிரீஸ் தேர்தலில் பெரு வெற்றி



கிரீஸ் நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் புதிய குடியரசுக் கட்சி நாடாளுமன்றத்தின் அதிக ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. எனினும் பெரும்பான்மை வாக்குகளைப் பெறாததால், ஆட்சி அமைப்பதற்கு பிசொக் கட்சியின் ஆதரவை நாட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.


கடன் நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் கிரீஸூக்கு, ஐரோப்பிய ஒன்றியம் வழங்க முன்வந்துள்ள கடனுதவியைப் பெற்றுக்கொள்வதற்குப் புதிய ஜனநாயகக் கட்சி ஆதரவு தெரிவித்து தனது பிரசாரத்தை மேற்கொண்டிருந்தது. இந்தத் தேர்தல் முடிவுகள் மூலம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பொதுவான நாணயமான யூரோவை கிரீஸ் தொடர்ந்து தனது பயன்பாட்டுக்கு உபயோகிப்பதற்கும், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து கிரீஸ் விலகிச்செல்லாது இருப்பதற்கும் கிரீஸ் மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று குடியரசுக் கட்சியின் தலைவர் அந்தோனிஸ் சமராஸ் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கடனுதவியை மறுக்கும் சிரிசா கட்சி இத்தேர்தலில் இரண்டாவதாக வந்துள்ளது. இதேவேளை இந்தத் தேர்தல் முடிவை ஜேர்மன் வரவேற்றுள்ளது. ஜேர்மனின் வெளிவிவகார அமைச்சர் குய்டோ வெஸ்டெர்வெல் இந்தத் தேர்தல் முடிவுகள் குறித்து கருத்து தெரிவிக்கையில்,'' கிரீஸ் தனது கடமைகளைச் சரிவரப் புரிந்து கொண்டு அவற்றுக்கு இணங்க வேண்டும் என்றும், தற்போதைய நிதி நெருக்கடி நிலைமையிலிருந்து மீண்டு நாட்டை வெளிச்சத்துக்குக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும்'' என்றார்

கிரீஸ் கடந்த 6 வாரத்தில் தனது இரண்டாவது பொதுத் தேர்தலை சந்தித்துள்ளது. முதல் தேர்தலில் எந்தக் கட்சியும் பெரும்பான்மை பலத்துடன் வெற்றிபெறாததுடன் கூட்டணியாக இணையவும் மறுப்புத் தெரிவித்ததால் இச்சூழ்நிலை உருவானது.

இந்தத் தேர்தலில் புதிய குடியரசுக் கட்சி தோல்வி அடைந்திருந்தால், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலிருந்து விலகித் தனியாகச் செல்லும் சூழல் உருவாகியிருக்கும். இது ஐரோப்பியக் கண்டத்தில் உள்ள ஏனைய நாடுகளிடமும் இதே போன்ற முடிவை எடுக்க வழிவகுத்திருக்கும் என்பதால் சர்வதேச நாட்டுத் தலைவர்களினால் இந்தத் தேர்தல் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (ந)

## பேஸ்புக் தொழில்நுட்பவியலாளர் பிரட் டெய்லர் பதவி விலகல்



பேஸ்புக் சமூக வலைத்தளத்தின் தலைமைத் தொழிநுட்ப நிபுணர் பிரெட் டெய்லர் இன்னும் சில நாள்களில் பதவி விலகவுள்ளார்.

பிரெட் டெய்லர் தான் புதிய நிறுவனம் ஒன்றைத் தொடங்க உள்ளதால் இவ்வலைத்தளத்திலிருந்து பதவி விலகவுள்ளதாக அறிவித்துள்ளார். கடந்த மாதம் நாஸ்டாக் பங்குச் சந்தையில் பேஸ்புக்கின் பெரும்பாலான பங்குகள் வீழ்ச்சியடையத் தொடங்கிய பின்னர் அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

கடந்த மாதம் பேஸ்புக்கின் பங்குகள் 30 டொலரிலிருந்து 21வீதம் வீழ்ச்சியடைந்து விற்பனையாகத் தொடங்கின.

டெய்லர் தனது பதவி விலகல் தொடர்பாக கூறும்போது,''பேஸ்புக்கிலிருந்து விலகுவது எனக்கு கவலை அளிப்பதாக இருந்தபோதும் புதிதாக நிறுவனம் ஆரம்பிப்பது எனக்கு மிகுந்த உற்சாகத்தை அளிக்கின்றது. எனினும் இந்தப் பதவி விலகல் மிக இலகுவான காரியமாக அமையவில்லை. பேஸ்புக்கின் தலைமைத்துவம் மீது எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது''என்றார்.

இதேவேளை பேஸ்புக்கின் ஸ்தாபகரான மார்க் சூக்கொர்பேர்க் டெய்லரின் பதவி விலகல் குறித்து கருத்துரைக்கையில், ''அவருடன் வேலை செய்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிப்பதாக இருந்தது. அவரும் அவரது குழுவினரும் பேஸ்புக்கிற்கு ஆற்றிய கடமையில் எனக்கு மிகுந்த விசுவாசம் உள்ளது'' என்று குறிப்பிட்டார். (ந)

## சிரியாவில் வன்முறைகள் அதிகரிப்பு

சிரியாவில் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பாளர்கள் தமது பணிகளை நிறுத்தியதைத் தொடர்ந்து வன்முறைகள் அதிகரித்துள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

சன்னிப் பிரிவு முஸ்லிம்கள் உள்ள வட மற்றும் மத்திய பிராந்தியங்களில் பஷர் அல் ஆசாத்தின் ஆதரவுப் படையினர் நடத்திய ஷெல் தாக்குதல்களில் 50 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அரச படையினர் மேற்கொள்ளும் வன்முறைகள் மற்றும் கிளர்ச்சியாளர்களின் நாடளாவிய புரட்சி ஆகியவற்றை அடுத்து ஐ.நா கண்காணிப்பாளர்கள் தமது பணிகளை இடைநிறுத்தி யிருந்தனர்.

இதனிடையே அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆகியோருக்கு இடையில் சிரிய விவகாரம் குறித்து கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.(ந)

## இந்தியாவைப் பாராட்டும் தலிபான் அமைப்பு

இந்தியா ஒரு முக்கியமான நாடு என்றும்; ஆப்கனில் நடந்துவரும் இராணுவ நடவடிக்கைகளில் பங்கேற்குமாறு அமெரிக்கா பலமுறை விடுத்த அழைப்புகளை இந்தியா நிராகரித்துள்ளது என்றும் முல்லா ஒமர் தலைமையிலான தலிபான் அமைப்பு தனது அறிக்கை ஒன்றில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆப்கன்களின் சுதந்திர வேட்கையையும் விருப்பங்களையும் இந்தியா அறியும். அமெரிக்க நிர்ப்பந்தத்துக்காக ஆப்கன் மீது இந்தியா கை வைக்கும் என்று எண்ணுவது தர்க்கத்துக்கு முரணானது. இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முயன்ற அமெரிக்க இராணுவ அமைச்சர் லியோன் பனெட்டாவை வெறுங்கையுடன்இந்தியா அனுப்பிவைத்தது.

அண்மையில் இந்தியாவுக்கு வந்திருந்த பனெட்டா, ஆப்கன் விவகாரங்களில் இந்தியாவை ஈடுபடுத்தப் பெருமளவு முயன்றார். 2014 ஆம் ஆண்டிலிருந்து நேட்டோப் படைகள் ஆப்கனை விட்டு விலகுவதால், அவர் இந்த முயற்சியை மேற்கொண்டார். ஆனால், அவர் தனது முயற்சியில் சிறிதும் வெற்றியடையவில்லை -என்றுள்ளது.

இதனிடையே, ஆப்கனில் உள்ள வடக்கு வஜிரிஸ்தான் பகுதியில் அமெரிக்கா தனது வான் தாக்குதலை நிறுத்தாதவரை, குழந்தைகளுக்குப் போலியோ தடுப்பூசி போடுவதை அனுமதிக்க மாட்டோம் என்று தலிபான் அறிவித்துள்ளது. (ந)




கருக்கலைப்பைத் தடை செய்யும் துருக்கி அரசின் முடிவை எதிர்த்து தலைநகர் அங்காராவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண்கள்...

## பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தலிலும் ஜனாதிபதியின் கட்சி பெரு வெற்றி



பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தலில், ஜனாதிபதி பிராங்கோய்ஸ் ஹோலண்டேவின் கட்சி பெரும்பான்மை பெற்று வெற்றி பெற்றுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சர்கோஸியின் கன்சர்வேட்டிவ் கட்சி தேசிய சபையில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தியிருந்தது. இதனால் இழப்பு நேரிட்டது. தீவிர வலது தேசிய முன்னணி சிறிய வெற்றி பெற்றிருப்பதால் நாடாளுமன்றத்தில் முதல் முறையாக முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த வெற்றி திடமான மற்றும் பெரும் பான்மை, சட்டம் மற்றும் மாற்றங்கள் கொண்டுவர உதவும் என்றும், ஐரோப்பாவிலும் பிரான்ஸின் பெரும் மதிப்புக் கூடும் என்றும் அந்நாட்டின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் ஹோலண்டே சர்கோஸியைத் தோற்கடித்து வெற்றி பெற்றார் என்பது தெரிந்ததே. (ந)

## தடுப்பூசி போடாமல் இந்தியாவுக்குப் போகாதீர்:

### எச்சரிக்கிறது இஸ்ரேல்

ஜெருசலேம், ஜூன் 19

விசர்நாய்க்கடி தடுப்பூசி போட்டுக் கொள்ளாமல் இந்தியாவுக்குச் சுற்றுலா செல்ல வேண்டாம் என்று இஸ்ரேல் அரசு அந்தநாட்டு மக்களை எச்சரித்துள்ளது.

பிரிட்டனிலிருந்து இந்தியா சென்ற பெண், நாயால் கடிக்கப்பட்டு சொந்த நாடு திரும்பியதும் வெறிநோயால் உயிரிழந்தார் என்ற செய்தியைச் சுட்டிக் காட்டி இஸ்ரேலிய சுகாதார அமைச்சகம் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறது.

இந்தியாவின் வனப் பகுதிகளுக்கோ மலைப் பகுதிகளுக்கோ சாகசப் பயணம் செல்லும் சுற்றுலாப் பயணிகள் முதலி லேயே தடுப்பூசி போட் டுக்கொள்வது நல்லது என்று அறிவுறுத்தப்பட் டுள்ளனர்.

### உலகப் புகழ் நிறுவனங்களின் அதிரடி

## 71 ஆயிரம் ஊழியர்கள் பணிநீக்கம்

நியூயோர்க்,ஜூன் 19

நோக்கியா, பெப்சி, சொனி, யாகூ போன்ற 12இற்கும் மேற்பட்டபல நாடுகளில் உள்ள நிறுவனங்கள், இந்தாண்டு 71 ஆயிரம் ஊழியர்களைப் பணிநீக்கம் செய்ய முடிவு செய்துள்ளன.

அமெரிக்கா, ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகளில் உள்ள பிரபல நிறுவனங்கள், உலகில் பல நாடுகளில் தங்களது தயாரிப்பு நிறுவனங்களை நிறுவின. அவற்றில் லட்சக் கணக்கானோர் பணியாற்றி வருகின்றனர்.

பிரபல மொபைல் போன் தயாரிப்பு நிறுவனமான நோக்கியா, குளிர்பான நிறுவனமான பெப்சி, மின்னணுப் பொருள்களைத் தயாரிக்கும் சொனி, கணினித் துறையில் உள்ள ஹியூலட் பேக்கார்ட் விமான நிறுவனமான லுப்தான்சா, கமராக்கள் தயாரிப்பு நிறுவனமான ஒலிம்பஸ் உட்பட 12 நிறுவனங்கள் தங்கள் நிறுவனத்தில் பணி




யாற்றி வரும் 71 ஆயிரம் ஊழியர்க ளைப் பணிநீக்கம் செய்ய முடி வெடுத்து அறிவித்துள்ளன.

இதில் கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வரும் நோக்கியா நிறுவனம் அடுத்தாண்டு இறுதிக்குள் 10 ஆயிரம் பேரைப் பணி நீக்கம் செய்ய முடிவு செய்துள்ளது.

தற்போது பெருகி வரும் பலத்த போட்டிக்கு இடையே தாக்குபிடிக்க முடியாத நிலை இருப்பதும், ஊழியர்களைக் குறைக்க இந்த நிறுவனம் முடிவெடுத்ததற்குக் காரணமாகிவிட்டது. ஊழியர்களைக் குறைப்பதன் மூலம் 200 கோடி டொலர் சேமிக்க முடியும் என்று அந்த நிறுவனம் நம்புகிறது.

அதேபோல், கமராக்களைத் தயாரித்து விற்று வரும் பிரபல ஒலிம்பஸ் நிறுவனம் இன்னும் இரண்டாண்டுகளில் 40 ஆயிரம் ஊழியர்களை வெளியேற்றத் திட்டமிட்டுள்ளது. இதில், இந்த மாதம் மட்டும் 2700 பேரை வெளியேற்றிவிட நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

கணினித் தயாரிப்பில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான, ஹியூலட் பேக்கார்ட் நிறுவனம் அடுத்த இரண்டாண்டுகளில் 27 ஆயிரம் ஊழியர்களை வெளியேற்றவும் முடிவு செய்துள்ளது.

இதேபோல் மேற்கூறப் பட்ட ஒவ்வொரு பன்னாட்டு நிறுவனமும் கணிசமான அளவுக்கு ஊழியர்களைக் குறைக்கத் திட்டமிட்டுள்ளன. (ந)

# 4 தேவாலயங்களில் குண்டுகள் வெடிப்பு

## நைஜீரியாவில் 25 பேர் சாவு



நைஜீரியாவின் வடக்குப் பகுதியில் உள்ள 4 தேவாலயங்களில் நேற்றுமுன்தினம் அடுத்தடுத்து குண்டு வெடித்ததில் பல குழந்தைகள் உட்பட 25 பேர் உயிரிழந்ததுடன் 80இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கதுவானா நகரில் உள்ள கத்தோலிக்க தேவாலயத்தில் நடந்த குண்டுவெடிப்பில் மட்டும் 10 பேர் உயிரிழந்துள்ளனர்; 29 பேர் படுகாயமடைந்தனர். ஏனைய மூன்று இடங்களிலும் நடைபெற்ற குண்டுத் தாக்குதலில் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.


இதனால் ஏற்பட்ட கலவரத்தை அடுத்து அங்கு அவசர நிலை பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. (ந)

## ஆப்கனில் தாக்குதல்: 40 தலிபான்கள் சுட்டுக்கொலை; 37 பேர் கைது

தலிபான் தீவிரவாதிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில், 40 தலிபான்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்; 37 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றனர். ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளின் கைவரிசை அதிகரித்து வருகிறது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் லாக்மான், கந்தகார், கோஸ்து, காஸி ஆகிய பகுதிகளில் பொலிஸாருக்கும், தலிபான் தீவிரவாதிகளுக்கும் இடையிலேயே தாக்குதல் நடந்தது. இந்தத் தாக்குதலில், 40 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டதுடன் மேலும் 37 பேர் இராணுவத்தினரிடம் சிக்கினர் என்றும் கூறப்பட்டது. (ந)

# எகிப்து தேர்தல்; மந்தநிலையில் வாக்களிப்பு



எகிப்து ஜனாதிபதித் தேர்தலில் வாக்குப்பதிவு மந்தமாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. எந்த வாக்குச் சாவடியிலும் 20 சதவீதத்துக்கு மேல் வாக்குகள் பதிவாகவில்லை. புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் அகமது ஷாபிக் மற்றும் இஸ்லாமியர்களின் சகோதரர் எனக் கருதப்படும் முகமது மூர்சி ஆகியோர் களத்தில் உள்ளனர்.

முதல் முறையாக நடைபெறும் இந்தத் தேர்தலில், வாக்காளர்கள் ஆர்வமின்றிக் காணப்பட்டனர். மந்தகதியில் நடந்த இந்த வாக்குப்பதிவில், 20 சதவீத வாக்காளர்கள் மட்டுமே வாக்களித்தனர். இரண்டாம் நாள் வாக்குப் பதிவு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அன்றும் வாக்காளர்கள் ஆர்வமின்றியே காணப்பட்டனர். இதுகுறித்து, அந்தநாட்டின் வழக்கறிஞர்கள் கூட்டமைப்பினர் விடுத்துள்ள அறிக்கையில், ''வாக்குச் சாவடிகள் அனைத்திலும் வாக்காளர்கள் ஆர்வமின்றியே காணப்பட்டனர். இதனால், 20 சதவீதத்திற்கும் மேல் வாக்குகள் பதிவாகவில்லை'' எனக் குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தல் வாக்குப்பதிவு குறித்து, அந்தநாட்டின் தேர்தல் தலைவர் பரூக் சுல்தான் ''தேர்தல் வாக்குப்பதிவின் முதல் நாளில் ஏற்பட்ட வன்முறைகளுக்கு, தேர்தலில் போட்டியிடும் இரு வேட்பாளர்களுமே பொறுப்பு'' என்றார்.

இதேவேளை தேர்தலில் மந்தமான வாக்குப்பதிவுக்கு கடும் வெயில் காரணமாக இருக்கலாம் என்று தேர்தல் பார்வையாளர்கள் சிலர் தெரிவித்தனர். இதனால், வாக்குப்பதிவுக்கான நேரம் இரவு 9 மணி வரை நீடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

# வல்லரசு நாடுகள் ஈரானுடன் பேச்சு

மொஸ்கோ, ஜூன் 19

ஈரானுடன் ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி உள்ளிட்ட வல்லரசு நாடுகள் மொஸ்கோவில் நேற்றுத் திங்கட்கிழமை பேச்சு நடத்தின.

ஈரானிய இஸ்லாமியக் குடியரசு தன்னுடைய அணு சக்தித் திட்டங்கள் குறித்த தகவல்களை வெளியிட மறுப்பதுடன் அணு ஆயுதம் தயாரிக்க நினைக்கும் நோக்கத்தையும் வெளிப்படுத்த மாட்டேன் என்று கூறி வருகிறது. தன்னுடைய அணு விசை நிலையங்கள் அனைத்தும் ஆக்கபூர்வமான உற்பத்திக்குத்தான் என்று இடைவிடாமல் சொல்கிறது.

ஆனால் இஸ்ரேலும் அமெரிக்காவும் ஈரானை நம்ப மறுக்கின்றன. எனவே ஈராக்கில் அணு ஆயுதத்தை சதாம் ஹுசைன் மறைத்து வைத்திருப்பதாகக் கூறி அதிரடியாக உள்ளேநுழைந்ததைப்போன்று ஈரானிலும் செய்ய அமெரிக்கா தலைமையிலான நேச நாடுகள் விரும்புகின்றன. ஆனால் ஈரானுக்கு எப்போதும் உற்ற தோழனாக ரஷ்யா விளங்குகிறது. ஈரான் சொல்வதையெல்லாம் நம்புவதற்கு ரஷ்யா தயார் இல்லை என்றாலும் ஈரான் மீது ஏனைய வல்லரசு நாடுகள் கைவைக்காமல் தடுக்க நினைக்கிறது.

இதற்கிடையே இந்தியா உள்ளிட்ட 7 நாடுகளுக்கு அமெரிக்க அரசு நேரடியாகவும் மறைமுகமாகவும் விடுத்த எச்சரிக்கைகள் பயன் தரத் தொடங்கியிருக்கின்றன.

ஈரானுடன் பொருளாதார உறவு கொண்டு அந்த நாட்டை ஆதரிக்காதீர்கள் என்று அமெரிக்க அரசு கூறிவருகிறது. இதையடுத்து இந்தியா உள்ளிட்ட நாடுகள் ஈரானிடம் வாங்கும் பெற்றோலிய எண்ணெய் அளவைக் குறைத்துக் கொண்டு வருகின்றன.

# நேற்றும் குலுங்கியது ஜப்பான்

ஜப்பான் நாட்டின் கடலோரப் பகுதியில் நேற்று அதிகாலை பலத்த நிலநடுக்கம் ஏற்பட்டது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ரிச்டர் அளவு கோலில் 6.4 எனப் பதிவான இந்த நிலநடுக்கம் ஜப்பானில் இருந்து 115 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மோரியோகா கடலில், 31கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. இதனால், ஏற்பட்ட சேதம் குறித்து எந்தத் தகவலும் இதுவரை தெரிவிக்கப் படவில்லை; சுனாமி எச்சரிக்கையும் அறிவிக்கப்படவில்லை.


## விற்பனைக்கு



1998 Model Toyata Hiace HC xxxx தொடர் இலக்கம் உடைய 5 Door, Manual, alloy Wheel Full Seet Set, Dual A/C வான் விற்பனைக்குண்டு.

Con : 077 4722522

(19554)(6-8)

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட "A' தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர், #19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை. தொ.பே : 077 8996085

(19464)(6-8)

## விற்பனைக்கு உண்டு

நல்ல நிலையிலுள்ள குளிரூட்டி சாதனமும் (Water Cooler), சோகேஸ் (மரத்தாலான) என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 075 0964062

(19569)(6-8)

## வீடு விற்பனைக்கு

சுன்னாகம், காங்கேசன்துறை வீதியில் ஜெட் மோட்டர்ஸ் நிறுவனத்துக்கு அருகில்இரண்டு பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 077 6596635, 021 2240003

(19567)(6-8)

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. வயதெல்லை இல்லை.

சம்பளம்: ரூபா 10, 000/=

தொடர்பு : 077 5197958

(19564)(6-8)

## அறைகள் வாடகைக்குண்டு

மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் அறைகள் வாடகைக்குண்டு. படிக்கும் மாணவர்களுக்கு (ஆண்களுக்கு) மட்டும்

தொடர்பு : 077 2752513

(19566)(6-8)

## Special offer Buffet

On 18th, 19th, 20th of June



Breakfast 6am - 10 am ~~1000/=~~ 900/=

Dinner 7pm -11 pm ~~2000/=~~ 1250/=

Treat yourself at Tilko Jaffna City hotel

TILKO hotels

www.cityhoteljaffna.com
info@cityhoteljaffna.com
T.p 021-720 0707
021-222-5969
70/6, KKS Road, Jaffna

(சி/771)

## Diploma in Psychology

with Counseling and Psycho Therapy

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக மருத்துவக்கற்கை நெறிகளின் முன்னோடி கே.யு வழங்கும் உளவியல் டிப்ளோமா

psychology

Learn From Experts ,Learn from Doctors



Duration : 6 Months(2 levels )Part time
Fee : 22,500/=(Each Level )
Commencement : 23/06/2012


Faculty of Medical Sciences

Knowledge Universe-Sri Lanka.

No 75,Temple Road,Jaffna. www.kugroup.info

(சி/718) Call (Day Times only): 0777302882


## 9 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 31 ★ 10 ★ 1934

ஆண்டவன் அடியில் 29 ★ 06 ★ 2003

அமரர் குமாரவேலு அருளம்பலம்

திதி : ஆனி அமாவாசை 19.06.2012

எமது குடும்பத்தை நல்வழிப்படுத்தி எமக்கு நற்கல்வி ஊட்டி சீருடனும் சிறப்புடனும் வாழவைத்த எம் தெய்வத்தை வணங்குகின்றோம்

சாந்தி! சாந்தி! சாந்தி!!!

மனோன்மணி வாசா
ஆடியபாதம் வீதி, கொக்குவில்
கிழக்கு, கொக்குவில்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(19384)(6-8)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25★11★1926

உதிர்வு 30★06★2011



திதி : அமாவாசை (19.06.2012)

திருமதி கிருஷ்ணர் நல்லம்மா

அம்மா உங்கள் அன்பான முகம்
அழகான வதனம் உங்கள்
முத்தான புன்சிரிப்பு எல்லாம் மறைந்து
ஆண்டொன்று சென்றாலும்
எங்களால் மறக்கமுடியாதம்மா - உங்கள்
ஆத்மா சாந்தி பெற எங்கள்
சோதி வைரவரை வேண்டுகின்றோம்

இன்று (19.06.2012) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இராணி கொற்,
இடைக்காடு, அச்சுவேலி.


குடும்பத்தினர்.

(19513)(6-8)

# வாய்ப்பு வரும் நேரம்

(07)

அதனால் மற்றொரு முக்கியமான பிரிவைப் பற்றிய விவரங்களைக் கற்றுக் கொண்டேன். வெகு விரைவில், அதிகாலையில் ஹெம்ப்ஸ்டெட் செல்லும் மெயில் ரயிலில் எனக்கு 'ப்ரேக்ஸ்மேன்' வேலை கொடுத்தனர். அப்போது, ரயில் ரோடு நிறுவனத்தின் இரண்டு வருட பயிற்சி பெற்ற பிறகு உலகத்துக்குப் பயன் அளிப்பவனாக இருப்பதை உணர்ந்தேன். என் மாதச் சம்பளம் 40 டொலர்கள். நான் தங்குமிடம் மற்றும் உணவுச் செலவுகளுக்காக 18 டொலர்கள் செலவழித்தேன். என் தாயாருக்கும் சகோதரிக்கும் உதவி செய்ய 20 டொலர்கள் அனுப்பினேன்.'' போக்குவரத்துப் பிரிவில் பணிபுரியும் அவனது சக ஊழியர்கள், விரீலண்ட் அந்த நிறுவனத்தின் தலைவராக உயர்வு பெறும் ஆவலுடைய இளைஞன் என்பதை வெகு சீக்கிரமாக அறிந்து கொள்ள ஆரம்பித்தனர்.



அவன் சக ஊழியர்களிடையே ''பிரசிடண்ட் விரீலண்ட்'' என்றே அழைக்கப்பட்டான். அவன் கண்டக்டராகப் பதவி உயர்வு பெறக்கூடும். ஆனால், அதற்கு மேல் பதவி உயர்வு பெற முடியாதென அவனிடம் சொல்லப்பட்டது. அவன் கண்டக்டராகப் பதவி உயர்வு பெற்றபோது பல முதிய ப்ரேக்மேன்களைக் கடந்து முன்னேறிவிட்டான்.

ஆனால், ஒருநாள் ஏற்பட்ட விபத்துக்கு அவனும் எஞ்சினியரும் பொறுப்பானார்கள். அவர்கள் தங்களது தவறை ஒப்புக் கொண்டனர். இருவரும் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். விரீலண்ட் கூறினார். ''நான் மறுபடியும் சுப்பிரிண்டனிடம் சென்றேன். என்னை வேலையில் நீடிக்க உதவ வேண்டுமென்று மன்றாடி வேண்டினேன். பிறகு அவர் என்னைப் ப்ரேக்மேனாக வேலை செய்ய அனுமதித்தார். நான் எந்தக் குறையும் கூறாமல் என் தவற்றின் விளைவை ஏற்றுக் கொண்டேன்.'' சில காலத்தில் அந்த ரயில் ரோடு நிறுவனத்தின் உரிமை வேறு சிலரிடம் மாறியது. புதிய மனேஜர்கள் விரீலண்ட் அசாதாரணத் திறமை உடையவன் என்பதை வெகு சீக்கிரமாகக் கண்டு கொண்டனர். உடனடியாக அவனது திறமை சோதித்துப் பார்க்கப்பட்டது.

மறுபடியும் ரயில்ரோடு நிறுவனத்தின் நிர்வாகம் கைமாறிய சமயத்தில், அதன் ஜெனரல் மனேஜர் அந்தத் தொழிலின் இயக்க விவரங்களைப் புரிந்து கொள்ளவில்லை. அவர் தினசரி வேலைகளைச் செய்ய விரீலண்டின் அனுபவத்தை நம்பி இருக்க வேண்டியிருந்தது. அதற்குப் பிறகு, உயர் பதவிகளில் உள்ளவர்கள் அவரைத் தனிப்பட்ட முறையில் அறிந்து கொள்ளவும் அவரது வேலைகளைக் கண்காணிக்கவும் ஆரம்பித்தனர். அவர்கள் நியூயோர்க்கின் மெட்ரோபொலிடன் ஸ்ட்ரீட் ரயில்வே கோப்பரேஷன் நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்ள மிகவும் அவசியமான ஒருவர் விரீலண்ட் தான் என்பதைக் கண்டறிந்தனர்.

அவரது பிரசித்தி பெற்ற பணிவாழ்வைப் பற்றிக் கூறும்போது, அங்கு வாய்ப்பும் திறமையும் இருந்ததைச் சொல்ல வேண்டும். விரீலண்ட் திறமையும் வாய்ப்பும் பெற்றதால் சாதனை புரிய முடிந்தது.

சமீபத்தில் அளித்த பேட்டியில் விரீலண்ட் சொன்னார்; ''உடல் நலமும் திறமையும் நேர்மையும் உடைய ஒருவரை எந்தச் செயற்கைச் சூழ்நிலையாலும் உயர்வடைய முடியாமல் தடுக்க முடியாதென்பது என் கருத்து ஆகும். அது வழியில் தற்காலிகமாகக் குறுக்கிடலாம் அல்லது அவனது ஆவலை நிறைவேற்றிக் கொள்ளும் வழியை மேலும் கடினமாக்கலாம்.

ஆனால், அவனைத் தடுத்து நிறுத்த முடியாது. கொடுங்கோலாட்சி அடியோடு அழிந்து விட்டது. அதன் மறைவுக்குப் பிறகு அதிகாரமும் செல்வமும் பெற்றிருப்பவர்களுக்கு ஒளிமயமான காலம் வந்துவிட்டது. இன்று இந்தப் பரந்த உலகில் திறமையானவர்களைக் கண்டறிவதில் அக்கறை காணப்படவில்லை. இன்றைய காலகட்டத்தில் நல்லவரும், வல்லவரும், பொறுப்பை ஏற்கக் கூடியவரும் தேவைப்படுகின்றனர்; இத்தகையோரிடையே கடுமையான போட்டி உள்ளது.''

### முதலாளிகள் சொல்வது என்ன?

தங்களிடம் வேலை செய்ய வருபவர்கள் விரும்பி ஏற்றுக் கொள்ளும் தொழிலில் ஏற்படும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இருப்பதில்லை என்பது இன்று முதலாளிகளிடையே காணப்படும் பொதுவான கருத்து ஆகும். அவர்கள் தயாராக இல்லையெனில், எளிதாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் வரும்போது அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிடுகின்றனர்.

டிஸ்ரேலியின் வாக்கு; ''வாய்ப்பு வரும்போது பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இருப்பதே ஒருவரது வாழ்வில் ஏற்படும் வெற்றியின் இரகசியம் ஆகும்.'' நமது இன்றைய நிலையைச் சார்ந்தே பல சந்தர்ப்பங்களும் அமையக்கூடும்.

-கண்ணதாசன்

(தொடரும்)

# மாணவர்களின் கல்வியை முன்நோக்கி நகர்த்த நூலகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும்

## வேலணை பிரதேச சபை செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

கடந்த காலங்களில் கல்வி அடைவு மட்டம் முதலாம் நிலையில் இருந்தது. தற்போது 9ஆம் இடமாக பின்னடைந்துள்ளது. மாணவர்கள் மத்தியில் அதிகரித்த தொலைக்காட்சி, தொலைபேசி மற்றும் இணையத்தள பாவனையுமே இதற்கு காரணமாகும் என்று வேலணை பிரதேச சபை செயலாளர் செ.ரமேஷ் தெரிவித்தார்.

**மாணவர்கள், பெற்றோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத் துவதன் மூலம் தொலைக்காட்சி, தொலைபேசிப் பாவனையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

தீவக நூலக அபிவிருத்திக் குழு கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தீவக பிரதேச சபை நூலகங்களின் வினைத்திறனான செயற்பாட்டுக்கு தீவக நூலக அபிவிருத்திக் குழு மூலம் மேற்கொள்ளப்பட்ட கையெழுத்து சஞ்சிகை, முப்பரிமாண பொது நூலகங்களை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகள் மூலம் நூலகங்களின் செயற்பாடுகளில் முன்னேற்றம் காணப்படுகிறது. இது நூலகங்களின் செயற்பாட்டு அறிக்கைகளில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது - என்றார்.

தொடர்ந்து வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசா தெரிவித்ததாவது:-

மாணவர்கள், பெற்றோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் தொலைக்காட்சி, தொலைபேசிப் பாவனையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் நூலகத்தின் அபிவிருத்திக்கு தமது பூரண ஒத்துழைப்பையும் முழுப் பங்களிப்பையும் வழங்குவோம் - என்றார். (எ-50)



*யாழ்ப்பாணம், அரியாலை அபிவிருத்திச் சங்கம் வழங்கிவரும் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் கடந்த வருட சா/த பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம, சிறப்பு விருந்தினர்கள், அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் காணப்படுகின்றனர். (135)*

## புதிய நிர்வாகிகள் தெரிவு

பண்டத்தரிப்பு, ஜூன் 19

யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்யும் கூட்டம் தேசிய இளைஞர் சேவை மன்ற யாழ். அலுவலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு தேசிய இளைஞர் சேவை மன்ற யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா, யாழ். மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி.வி.ஸ்ரீமேனன் ஆகியோருடன் யாழ். மாவட்டத்தின் சகல பிரதேச செயலகங்களினதும் இளைஞர் சேவை அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதில் சம்மேளனத்தின் புதிய தலைவராக ச.செந்தில்குமரன், உப தலைவர்களாக ஆ.சுதன், கே.கிருபானந்தன் ஆகியோரும் பொருளாளராக சி.நிரோஜனும், அமைப்பாளராக க.ரஜீவ்பிரகாசும் உப அமைப்பாளராக நா.கஜேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் உப செயலாளர்களாக ர.நிசாந்தினி, சி.ரவிக்குமார், விளையாட்டுத்துறை செயலாளராக ஐ.ஞானதீபன், கலாசார செயலாளராக பே.சுபாகர், ஊடகச் செயலாளராக எஸ்.ரி.மரியதாஸ், தேசிய சேவை செயலாளராக சு.கௌரி, கல்விச் செயலாளராக இ.கருணாநிதி, கணக்குப் பரிசோதகராக அ.ஜெபநேசனும் தெரிவு செய்யப்பட்டனர். (எ-130)

* * *

சுழிபுரம், ஜூன் 19

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் கல்லூரி சிவபாதசுந்தரனார் மண்டபத்தில் சங்கத் தலைவர் வி.உமாபதி தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாக தலைவர் வி.உமாபதி, செயலாளர் இ.ஸ்ரீரங்கன், பொருளாளர் ச.ஜெயந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (எ-28)

## யாழ். மத்திய கல்லூரி மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

கொழும்பு பல்கலைக் கழக தமிழ்ச் சங்கம் நடத்திய மாவட்ட மட்ட நாடகப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரியின் இருளை நீக்கி என்ற நாடகம் மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

யாழ்.மத்திய கல்லூரியின் றொமைன் குக் மண்டபத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது. நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் எஸ்.ரி.குமரனின் எழுத்துருவாக்கம் நெறியாள்கையில் ஆற்றுகை செய்யப்பட்ட இந்த நாடகத்துக்கான காட்சியமைப்பை பிரவீனும், இசையமைப்பை, நிலக்ஷனும், வழங்கியுள்ளார்கள். நடிகர்களாக பிரவீன், கவிராஜ், தயாநிஷன், பிரசாந்தன், அபிசேக், சண்முகப்பிரியன், தர்மிசன், பெனிற்றன் ஆகியோர் நடித்துள்ளனர்.

இது முதற் தடவையாக கொழும்பு பல்கலைக்கழக நாடகப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ)

## மூன்றாமிடம்

மாகாண மட்டத்திலான கணித நாடகப் போட்டியில் தீவக வலயத்தைச் சேர்ந்த காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

மேற்படி கல்லூரி மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு II தனி நடனத்தில் 2 ஆம் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (எ)

# கலை, இலக்கிய போட்டி முடிவுகள்

காரைநகர், ஜூன் 19

காரைநகர் பிரதேச செயலக மட்டத்தில் நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியாகி உள்ளன. இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

**கவிதை - கனிஷ்ட பிரிவு**

1 ஆம் இடம் - க.அபினேஷா (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), 2 ஆம் இடம் - த.ஆரணி (யாழ்ற்ரன் கல்லூரி), 3 ஆம் இடம் - ஆ.அபிராமி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி).

**கவிதை - சிரேஷ்ட பிரிவு**

1 ஆம் இடம் கு.தர்சினி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி) 2 ஆம் இடம் - அ.பிருந்தா (யாழ்ற்ரன் கல்லூரி), 3 ஆம் இடம் - சி.கிரிசா (யாழ்ற்ரன் கல்லூரி)

**கட்டுரை - கனிஷ்ட பிரிவு**

1 ஆம் இடம் - த.திருமகள் (யாழ்ற்ரன் கல்லூரி), 2 ஆம் இடம்- மோ.துர்சிகா (யாழ்ற்ரன் கல்லூரி), 3 ஆம் இடம் - கி.சோபனா (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி).

**கட்டுரை - சிரேஷ்ட பிரிவு**

1 ஆம் இடம் க.ரேணுகா (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), 2 ஆம் இடம் - கு.மாலதி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), 3 ஆம் இடம் - கோ.தனுஜா (தியாகராசா ம.ம.வி)

**சிறுகதை - திறந்த பிரிவு**

1 ஆம் இடம் - த.சுகந்தினி (விக்காவில், காரைநகர்), 2 ஆம் இடம் - க.சுகந்தினி (புதுறோட், காரைநகர்), 3 ஆம் இடம் த.பார்த்திகா (களபூமி, காரைநகர்) (எ-250)

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## உரிமையை அனுபவிக்க விடுங்கள்

தமிழ் மக்களின் காணிகள் இராணுவத்தினரால் அபகரிக்கப்படுவதற்கு எதிராக நேற்று யாழ். நகரில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமிழ்க் காங்கிரஸால் வழிநடத்தப்படும் தமிழ்த் தேசிய முன்னணி இந்தப் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது.

யாழ். நகரின் மத்தியில் பஸ் நிலையத்துக்கு முன்பாக, ஒரு மணி நேரம், ஓரமாக நின்றபடி காணிகளை அபகரிக்க வேண்டாம் என்று அந்தப் பகுதியில் போவோர் வருவோரின் கவனத்தை ஈர்ப்பதே போராட்டத்தின் நோக்கம்.

இந்தப் போராட்டம் நடத்தப்படப் போவதாக மூன்று தினங்களுக்கு முன்னரே ஊடகங்கள் வாயிலாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் நேற்றுப் போராட்டம் ஆரம்பிக்க இருந்த சமயத்தில் அந்த இடத்துக்கு வந்த பொலிஸார், நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெறப்பட்டிருப்பதால் போராட்டத்தை நடத்த முடியாது என்று தடுத்து விட்டனர்.

தமிழ் அரசியல்வாதிகளும் அநியாயத்துக்கு ஜனநாயகத்தையும் சட்டம் ஒழுங்கையும் மதிப்பவர்களாக இருக்கிறார்கள் என்பதால் [இவர்களில் பலர் சட்டத்தரணிகள் என்பதும் கவனத்துக்குரியது] நீதிமன்றத்தின் உத்தரவைச் சிரமேற்கொண்டு போராட்டத்தைக் கைவிட்டனர். பின்னொரு நாளில் போராட்டம் நடத்தப்படும் என்றும் தெரிவித்தனர்.

''நீதிமன்றத்தின் தடையை மீறிப் போராட்டம் நடத்திச் சிறைக்குப் போவதெல்லாம் எமக்குப் புதிதில்லை. ஆனால் அப்படியொரு சம்பவம் நடந்துவிட்டால் இனி வரும் காலங்களில் இத்தகைய போராட்டங்களுக்கு மக்கள் வரமாட்டார்கள் என்பதால் சட்டத்தை மதித்து நாம் போராட்டத்தை ஒத்தி வைத்தோம்'' என்று அரசியல்வாதிகள் அங்கு சொல்லிக் கொண்டார்கள் என்பது வேறு கதை ஆயினும், இப்படி ஜனநாயக ரீதியான போராட்டத்துக்கு நீதிமன்றத்தின் தடை பெறப்படுவது வடக்கில் அண்மைக் காலத்தில் இது இரண்டாவது சந்தர்ப்பம்.

கடந்த மாதத்தில் வவுனியாவில் ஜே.வி.பி. மாற்றுக் குழுவால், காணாமல்போனோர் தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் ஒன்றும் இதே பாணியில் நீதிமன்றத்தின் தடையுத்தரவு பெற்று நிறுத்தப்பட்டது.

இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் என்று பொலிஸார் தெரிவிப்பதன் அடிப்படையில் நீதிமன்றங்கள் இவ்வாறு ஜனநாயகப் போராட்டங்களுக்குத் தடை விதிக்கின்றன.

ஆனால், நேற்று நடைபெற இருந்த ஆர்ப்பாட்டமும் சரி வவுனியாவில் நடைபெற இருந்த ஆர்ப்பாட்டமும் சரி ஜனநாயகத்துக்கு முரணாக வகையில் ஏற்பாடு செய்யப்பட்டவையல்ல. தமது கருத்துக்களை – எதிர்ப்பை – தெரிவிப்பதற்கு இலங்கை அரசமைப்பு மக்களுக்கு வழங்கியுள்ள கருத்துச் சுதந்திரத்தின் அடிப்படையிலமைந்தவை.

அந்த உரிமையை ஒரு பகுதி மக்கள் அனுபவிக்கும் போது – அதாவது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை ஒரு பகுதி மக்கள் வெளிப்படுத்தும்போது – மற்றையதொரு பகுதி மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்படும் என்று கருதினால், அவ்வாறு நடக்காமல் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு இரு பகுதி மக்களதும் ஜனநாயக உரிமைகளை மதிக்க வேண்டியது தான் பொலிஸாரின் தலையாய கடமை. ஒரு பகுதி மக்களின் உரிமையை அடியோடு மறுப்பது நீதியானதல்ல. இதனை நீதித்துறையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

# வன்மம் தீர வழியென்ன?

■ கே.எஸ்.எம்

மூலம் - உபாலி கொலம்பகே
(ராவய)

எந்த ஒரு நாட்டின் பிரஜை ஒருவர் தனது நாட்டில் தான் விரும்பும் எந்தவொரு பிரதேசத்திலும் வாழ்வதற்கு உரிமையுண்டு. அதே போன்று அந்த நாட்டின் எந்த ஒரு பிரதேசத்திலும் தொழில் புரியவும் அவருக்கு உரிமை உள்ளது. இது, அண்மையில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவால் பி.பி.சி செய்திச் சேவைக்கு வழங்கப்பட்ட கருத்து .

சிங்கள உத்தியோகத்தர்களை வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் கடமையில் ஈடுபடுத்துவது மற்றும் அந்தப் பிரதேசங்களில் குடியமர்த்துவது சம்பந்தமாக ஆய்வாளர்கள் சிலரால் எழுப்பப்பட்ட வினாக்களுக்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டிருந்தார். இதை அரசின் கருத்தாகவே கொள்வதால் தவறேதுமில்லை.

ஏனெனில் அரசின் இன்றைய நடைமுறைப் போக்குகள் அந்தக் கருத்துக்குப் பலம் சேர்ப்பதாகவே அமைகின்றன. இத்தகைய குடியமர்த்தல்கள் மூலம் சனப்பரம்பலை மாற்றிவிடும் திட்டம் தமக்கு இல்லை என்பதையும் பாதுகாப்புச் செயலாளர் தெளிவுபடுத்தியிருந்தார். ஆனால் அரசின் உள்ளார்ந்தம் அதுதான் என்பது தெளிவாகவே புலப்படுகிறது.

சிங்களப் பிரதேசங்களில் தமிழர்கள் தங்கி வாழ்வது மற்றும் அந்தப் பிரதேசங்களிலுள்ள நிறுவனங்களில் தொழில் புரிவதற்கு தடையேதும் இல்லை என்ற வாதங்களும் முன்வைக்கப்படுகின்றன. நாட்டின் அரசமைப்புச் சட்டங்களின்படி இது ஏற்புடையதே என்றாலும் அந்த நிலைப்பாடு முழுமையான உண்மையல்ல.

தமிழன் தனது அந்தஸ்துக்கமைந்து தான் இந்த நாட்டில் வாழ வேண்டும் என்பதையே சிங்கள இனவாத நிலைப்பாடாக அமைகிறது. இந்தக் கருத்து முன்னரை விடவும் இன்று ஆழமாக வேரூன்றிப் போயுள்ளது. அந்த வன்ம நிலைப்பாடு, நல்லெண்ண வெளிப்பாடு என்ற மேல்பூச்சுப் போர்வையின் உள்ளே வெளியில் தெரியாதவாறு மறைந்திருப்பதே இன்று நிலவும் ஒரு வேறுபாடாகும்.

இந்தச் சிங்கள எண்ணக்கரு ஆத்மார்த்தமான மாற்றமொன்றுக்கு உட்படாதிருப்பதே இந்த நிலைப்பாட்டுக்கு முக்கிய காரணியாகியுள்ளது. முன்னெப்போதும் இல்லாதவாறு நாட்டின் ஆட்சியாளர்களால் சிங்கள இனவாதம் தீவிரமாக கையாளப்பட்டு வருவதும், இந்த வன்ம உணர்வு மேலெழுந்து உச்சமடைவதற்கு மேலுமொரு காரணமாகியுள்ளது. அந்தச் சிங்கள இனவாத எண்ணத்துக்கு எண்ணெய் ஊற்றி எரியவிட்டால் தான், தமக்குக் கிட்டும் சுகபோகங்கள், வரப்பிரசாதங்கள், வசதி வாய்ப்புக்களைத் தொடர்ந்துவரும் தமது சந்ததிகளும் அனுபவிக்க முடியும். இந்த வன்ம உணர்வை சிங்களச் சமூகத்துக்கு ஊட்டி அதை வளரச் செய்து பேணிக்கொள்வதன் மூலமே தமது அந்த தன்னலக் குறிக்கோளைப் பேணிப் பாதுகாக்க இயலும் என ஆட்சியாளர்கள் எண்ணுவதும் அதற்குக் காரணமாயிருக்கக் கூடும்.

இந்த நாட்டில், அரச நிறுவனங்களில் போன்றே அரச சார்பற்ற நிறுவனங்களிலும் தமிழர்கள் உயர்பதவிகளிலும் சாதாரண பதவிகளிலும் இருக்கின்றனர். ஆனாலும் அவர்கள் உத்தியோகபூர்வ மட்டத்திலும் சரி, தனிப்பட்ட விடயத்திலும் சரி தானொரு தமிழன் என்ற நிலைப்பாட்டில் நின்றே முடிவுகளை மேற்கொள்ள வேண்டிய பரிதாபத்துக்குரிய நிலைக்கே அவர்கள் உந்தித்தள்ளப்படுகின்றனர். குறிப்பாக, தமிழ் உயரதிகாரியொருவரால் பெரும்பான்மையின ஊழியர்களின் நடத்தை சம்பந்தப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகளின் போது தனது இனம் பற்றித் தான் ஒரு தமிழ் அதிகாரி என்பதை நினைவில் நிறுத்திக் கொண்டே குறிப்பிட்ட அந்தத் தமிழர் செயற்பட வேண்டியுள்ளது. நியாயமான சட்டப்படி அமையும் தீர்வொன்றையென்றாலும் கூட தகாத வார்த்தைப் பிரயோகங்களுடன் ''அந்தத்.. தமிழன் இப்படிச் செய்து விட்டான்'' என்ற வன்மத்தை வளர்த்துவிடும் வசைமொழிகளையும் பெரும்பான்மையின ஊழியர் ஒருவரிடமிருந்து தமிழ் உயரதிகாரிகள் எதிர்கொள்ள வேண்டி நேர்வது சாதாரணமான ஒன்றாகியுள்ளது.

புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்றை எட்டும் அசமந்தப் போக்கும், இழுத்தடிப்பும் எந்தவொரு நகர்வுமின்றி அது கருகிப் போயிருப்பதும் தான் தமிழ் மக்கள் என்றால் இளப்பமாக கருதப்பட்டு சிறுபான்மைப்படும் இந்தப் போக்கு தீவிரமடைந்து வருவதற்கு காரணமாகியுள்ளது. கொழும்பிலும் மற்றும் ஏனைய பிரதேசங்களிலும் தமிழ் இனத்தவர்களான அரச அதிகாரிகள் மூலம் கொடுத்து வரும் பிரச்சினைகள், அவல நிலைகளில் மிகமிகச் சிறிய உதாரணமொன்றே மேலே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சுருக்கமாக கூறுவதானால் இலங்கையச் சமுதாயத்தில் ஓர் அங்கமான தமிழ் மக்கள் நாட்டில் அன்றாடம் இடம்பெறும் அனைத்துக் கருமங்களின் போதும் தாம் தமிழராகப் பிறந்து விட்டதன் நட்டத்தை அடைந்தே வருகின்றனர் என்பது கண்கூடாகவே புலப்படுகிறது. இந்த நாட்டில் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளே. தமக்கு வழங்கப்பட்டுள்ள அந்த அந்தஸ்தில் நின்று வாழும்வரையிலும் அவர்களுக்குத் தொந்தரவுகள் இருக்கமாட்டாது என்பதே இதன் மூலம் சூசகமாகக் காட்டப்பட்டுவரும் சமிக்ஞையாகும். அதை மீறி தாமும் இந்த நாட்டின் பிரஜைகளே என்ற அடிப்படையில் சிங்களவர்களுக்குச் சமமான உரிமைகள் தமக்குமுண்டு என்ற நிலைப்பாட்டில் செயற்பட முனைந்தால், சிறுமைகள், கொடுமைகள், அவலங்கள் ஏராளமாகும் என்பதும் இன்று யதார்த்த பூர்வமாக அரங்கேறி வருகின்றன. இந்தச் சிங்கள மேலாதிக்க எண்ணக் கருவையொட்டிய செயற்பாடுகளாக வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் சிங்கள மயப்படுத்தப்பட்டு வருகின்றன என்பது தமிழ் மக்களால் முன்வைக்கப்படும் கடும் குற்றச் சாட்டொன்றாகியுள்ளது.

இதன் நேரடிப் பங்காளிகளாக பாதுகாப்புப் படையினரே செயற்படுகின்றனர் என்பதும் இத்தகைய இராணுவத் தலையீட்டை இலக்கு வைத்துத்தான் பிரித்தானியத் தூதுவரின் அண்மைக்கால கருத்து வெளிப்பாடு அமைந்திருக்கலாம் எனவும் கருத முடிகிறது. வடக்கிலிருந்து இராணுவமுகாம்கள் அகற்றப்பட வேண்டுமென்ற அவரது அந்தக் கருத்து வெளிப்பாடு, கடும் கண்டனங்களுக்கு உள்ளாகியுள்ளது. நாட்டில் மேலோங்கி நிற்கும் சிங்கள இனவாதச் சிந்தனைக்கு அமைய மேற்கு நாட்டவரொருவரான பிரித்தானியத் தூதுவரின் அந்தக் கூற்று வரவேற்கத் தக்கதாக இருக்கவில்லை என்பதே உண்மை. அரசின் பாதுகாப்புத் திட்டவரைபுகளுக்கு அமைவான அட்டவணைகளின் படியல்லாது இராணுவத்தை அங்கிருந்து உடனடியாக அகற்றுவது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்பதே யதார்த்தமாகும்.

பிரச்சினைக்குரியது வடக்கில் அமைந்துள்ள இராணுவமுகாம்கள் அல்ல. அந்த முகாம்களிலுள்ள இராணுவச் சிப்பாய்களினால் அங்குள்ள பொதுமக்களின் நாளாந்த வாழ்க்கையில் செலுத்தப்படும் தலையீடுகள், அழுத்தங்கள் எந்தளவு தூரத்துக்கு அவர்களது பொது வாழ்க்கையில் ஊடுருவல் செய்துள்ளன என்பதேயாகும். பெண்கள் மீதான வன்புணர்வு சம்பவங்கள், அதிகார துஷ்பிரயோகங்கள் போன்ற குற்றச் சாட்டுக்கள் மட்டுமல்லாது, அரச பணி என்ற போர்வையில் வடக்கு மக்களின் வாழ்க்கையை ஆக்கிரமித்துவரும் இராணுவத்தினரின் கடும் போக்கு அங்கு அரங்கேற்றப்பட்டு வருகிறது என்ற குற்றச்சாட்டுக்கள் பல்வேறு தரப்புக்களிடமிருந்தும் எழுந்துள்ளன.

புலம்பெயர் தமிழர் தரப்புக்கள், ஒரு காலகட்டத்தில் அரசுடன் ஒத்து நின்றிருந்த ஆனந்தசங்கரி உட்பட ஏனைய பல தரப்புக்களிடமிருந்தும் இது சம்பந்தமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. வடக்கில் ஆறு பொதுமக்களுக்கு ஒருவர் என்ற ரீதியில் அங்கு இராணுவப் பிரசன்னம் அமைந்திருப்பதாக அண்மையில் ஆர்.சம்பந்தன் தெளிவுபடுத்தியிருந்தமையும் இது விடயத்தில் கவனத்தை ஈர்த்துள்ளது.

அந்தப் பிரதேசங்களில் இடம்பெறும் சமய நிகழ்வுகள், விளையாட்டு நிகழ்வுகள் உட்பட்ட பொது மக்களின் இல்லங்களில் இடம்பெறும் அவர்களது தனிப்பட்ட கொண்டாட்டங்கள் சம்பிரதாயச் சடங்குகள் என்ற அனைத்து விடயங்களிலும் அங்கு கட்டாய இராணுவத் தலையீட்டைக் காண முடிவது உண்மையே. இதைவிட பொதுமக்களுக்கு சுமுகமான சிவில் நிர்வாக அணுகுமுறையொன்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்குப் பதிலாக போரினால் பாதிப்புக்கு உள்ளான அந்த மக்கள் வாழும் பிரதேசங்களில் ஓய்வு பெற்ற அல்லது பதவி நிலைகளிலுள்ள இராணுவ அதிகாரிகளே சிவில் நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டுகளும் உள்ளன.

இவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்க்கையில், அங்கு இராணுவமயப்படுத்தலும், சிங்கள மயப்படுத்தலும் சமாந்தரமாக நிறைவேற்றப்படுவதை ஏற்க வேண்டியுள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை.

தமக்கு அறிமுகமில்லாத புதியவர்கள் தமது கருமங்கள் அனைத்தையும் கழுகுக்கண்களால் உற்று நோக்கிக் கண்காணித்து வருவது, அங்குள்ள மக்களுக்கு கடும் உளத்தாக்கங்களை ஏற்படுத்தி வருவதை நாம் உணர வேண்டியது அவசியம். மறுபுறத்தில் இந்தப் பிரதேசங்களில் இராணுவக் கடமையில் இருக்கும் சிப்பாய்களில் பெரும் பகுதியினர் சிங்களச் சமூகத்தின் துடிப்பான இளைஞர்களே என்பதும், அவர்கள் போதிய கல்வியறிவைப் பெற்றிராத பின்தங்கிய கிராமப் புறங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதும் இயல்பாகவே இவ்விரு இனத் தரப்புக்கள் மத்தியில் மோதல்கள் ஏற்பட வாய்ப்புக்களை வழங்குகின்றன. இத்தகைய முரண்பாடு உருவாக ஏதுவான காரணங்களும் இங்குள்ளன. அதாவது இந்தப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களில் பெரும் பங்கினர் ஏதோ ஒரு விதத்தில் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களின் உறவுகளாகவோ, அவர்களுக்கு அறிமுகமானவர்களாகவோ, அன்றேல் நெருக்கமாகப் பழகியவர்களாகவோ காணப்படுகின்றனர்.

இராணுவத் தரப்பினருடன் நேரடிக் குரோதம் எதுவும் இல்லாத நிலையில் இராணுவத்தினருடன் திருப்தியான ஒரு நல்லெண்ணத்தைக் கொண்டிருப்பவர்கள் அல்லர். அதேவேளை, பெரும்பன்மையான இராணுவத்தினரும் கூட ஏதோ மக்களுடன் சம்பந்தப்பட்டுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களால் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருப்பவர்.

இந்த இரு தரப்பினரிடையே குரோதத்தையும், வன்மத்தையும் மேலும் வளர்த்து தீவிரப்படுத்தும் நிர்வாகச் செயற்பாடுகள்தான் தொடர்ந்து அவசியப்படுகிறதா? அல்லது அந்த நிலைப்பாட்டை சுமுகமானதாக முன்னெடுக்கும் நிர்வாகச் செயற்பாடுகள் தான் அவசியமாகிறதா? என்பது ஆழமான சிந்தனைக்கு உரிய ஒன்றே. ★

# வெந்துபோன உள்ளத்துக்கு மருந்து போடுவோர் யார்?

சங்கர்

வடக்கு மாகாணக் கல்விப் புலத்தின் நிர்வாகக் கட்டமைப்பு வினைத்திறனான முறையில் இயங்க வேண்டும். கல்வி அதிகாரிகளின் ஆளுமை மிக்க தலைமைத்துவத்தின் மூலம் கல்வித் தரம் மேம்பாடு காணவேண்டும்.

'நான்' என்ற உணர்வை விடுத்து 'நாம்' என்ற உணர்வுடன் சமூக நலனில் அக்கறையுடைய ஒவ்வொருவரதும் எதிர்பார்ப்புகளில் இதுவும் ஒன்றாக உள்ளது.

இந்த எதிர்பார்ப்புகளுக்கு மாறான செயற்பாடுகள் கல்விப் புலத்தில் இடம்பெற்று வருகின்றன. கல்விப் புலத்திலுள்ள பிரச்சினைகள், அநீதி இழைப்புகளுக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில், சட்டத் துறையில், நீதித் துறையில் முறைப்பாடு செய்யும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. எமது கல்விப் புலத்தின் ஆரோக்கியமற்ற தன்மையை இவ்வாறான சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன.

வன்னிப் பகுதியில் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள யாழ். மாவட்ட ஆசிரியர்கள் தமது மாவட்டத்துக்கு இடமாற்றம் வழங்காது பின்னடித்து வருவதைக் கண்டித்து 104 ஆசிரியர்களும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடுகளை நேற்றுப் பதிவு செய்தனர். இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஆதரவுடன் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

வன்னிப் பகுதியில் முதல் நியமனம் பெற்று சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஆசிரியர்களுக்கான இடமாற்ற விடயத்தில் மாகாணக் கல்வித் திணைக்களம் பாரபட்சமாக நடந்து வருவதாகக் கூறப்படுகிறது. இந்த விடயம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் தனது அதிருப்தியையும் வெளியிட்டிருந்தது.

பதிலீட்டு ஆசிரியர்களின் பட்டியலைத் தயாரிப்பதில் ஏற்படும் தாமதமே இந்த ஆசிரியர்களுக்கான இடமாற்றத்தை உடனடியாக வழங்க முடியாதுள்ளதற்கான காரணம். கல்வியியற் கல்லூரியிலிருந்து வெளியேறுபவர்களைக் கொண்டு முதலீட்டு ஆசிரியர்கள் பட்டியலைத் தயாரிக்க உள்ளோம் என்று கல்வி அதிகாரிகள் கூறிவருகின்றனர்.

இந்த நிலையில் சேவைக் காலம் முடிவடைந்து ஆறு மாதங்கள் கடந்தும் தமக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை என்று ஆசிரியர்கள் தரப்பில் கூறப்படுகிறது. அத்துடன் கல்வி அதிகாரிகளின் இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்ற நிலைப்பாட்டில் அவர்கள் உள்ளனர்.

ஆசிரியர் இடமாற்ற விடயத்தில் மாகாண கல்வித் திணைக்களத்தின் அசமந்தப் போக்குத்தான் ஆசிரியர்கள் தமது உரிமைகளுக்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவை நாட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்றும் கல்வியியலாளர்கள் மட்டத்தில் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயத்தில் கல்விப்புல நிர்வாகக் கட்டமைப்பு வினைத்திறனான முறையில் இயங்கவில்லை என்பதையே இது தெட்டத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

பதிலீட்டு ஆசிரியர்களை தெரிவு செய்வது என்பது அப்படி என்ன பெரிய கஷ்டமான விடயம் என்ற கேள்விகளும் எழாமல் இல்லை. பாடசாலைகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் 2003/38 ஆம் இலக்க சுற்றறிக்கையை நேர்மையான முறையில் நடைமுறைப்படுத்தினால் போதும், அந்த சுற்றறிக்கை பாடசாலையின் ஆளணிவளம் தொடர்பாகக் கூறுகிறது என்று விடயம் தெரிந்தோர் விசனிக்கின்றனர்.

அந்த சுற்றறிக்கையின் படி மேலதிகமாகவுள்ள ஆசிரியர்களின் விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக ஆசிரியர்களின் விவரங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பாத அதிபர்களுக்கும், அதனை மாகாண கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்காத வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க முடியும் என அந்தச் சுற்றறிக்கை தெளிவுபடுத்துகிறது.

யாழ். வலயக் கல்வி அலுவலகப் பிரிவிலும், வலிகாமம் மேற்கு வலய கல்வி அலுவலகப் பிரிவிலும் மேலதிக ஆசிரியர்கள் உள்ளனர். அதுவும் அளவுக்கு அதிகமாக இருக்கின்றனர். பாடசாலைகளில் நேரசூசி வழங்க முடியாத நிலையில் நிதிப் பிரமாண விதிமுறைகளுக்கு முரணாக சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு கடமை புரிய வேண்டிய காலத்தில் பாடசாலையில் ஓய்வெடுக்கின்றனர்.

இவ்வாறு மேலதிக நியமனங்கள் உள்ள நிலையில் வன்னிப் பகுதிக்கான பதிலீட்டு ஆசிரியர்களை தெரிவு செய்ய முடியாதுள்ளதுக்கான காரணம் என்ன என்பதைமாகாணக் கல்வித் திணைக்களம் வெளிப்படுத்துமா?

பாடசாலையில் ஆளணி வளத்தை தீர்மானிக்கும் சுற்றறிக்கை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அத்துடன் வடமாகாணத்துக்காக தயாரிக்கப்பட்ட பதிலீட்டு ஆசிரியர் சுற்றறிக்கையையும் மாகாண கல்வித் திணைக்களம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தவில்லை என்பது இந்த நிலைமைகளை அவதானிக்கும் போது புலனாகிறது.

இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலினும் இந்த விடயம் தொடர்பாக அடிக்கடி தனது கண்டனத்தை வெளிப்படுத்தி வருகிறார்.

திறைசேரியில் நிதி இல்லை என அடிக்கடி கூறிவரும் அரசு, கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறுபவர்களுக்கு எப்படி உடனடியாக நியமனத்தை வழங்க முடியும். கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள் நியமனத்தை மத்திய அரசே வழங்கும். இந்த ஆசிரியர்களைக் கொண்டு பதிலீட்டு ஆசிரியர் பட்டியலைத் தயாரிப்பது என்பது மேலும் காலதாமதத்தை ஏற்படுத்தும் நாடகமாகும்.

இவ்வாறான செயற்பாடுகள் குறித்து இடமாற்றத்துக்காகக் காத்திருக்கும் ஆசிரியர்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரியர்களின் உளவியல் ரீதியான தேவைகள், விருப்பங்கள் இனங்காணப்பட வேண்டும். மனம் வெந்த நிலையில் கற்பித்தல் நடவடிக்கையில் ஆசிரியர்கள் ஈடுபடமுடியாது என்பதை கல்வித் திணைக்களங்கள் கருத்தில் எடுக்க வேண்டும்.

வடக்கின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கான விடயங்களில் ஒன்றாக இருக்கும் இடமாற்ற விடயத்தை சிறப்பான முறையில், சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்துவது அவசியம்.

இதனைச் சிறப்பாக்குவதற்கு மாகாண கல்வித் திணைக்களம் முதலில் கல்வி வலயங்களிலுள்ள இரண்டாம் நிலை அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட வேண்டும். 10 வருடங்களுக்கு மேலாக இடமாற்றமின்றி உள்ள இவர்களுக்கு முதலில் இடமாற்றம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஆசிரியர் இடமாற்ற விடயத்தை கையாள்பவர்கள் இந்த இரண்டாம் நிலை அதிகாரிகள்தான். செல்வாக்குப் பயன்படுத்தப்பட்டு ''கஷ்டப் பிரதேச, வெளி மாவட்ட சேவைகளைப் பூர்த்தி செய்யாத மேலதிக ஆசிரியர்கள்'' என்ற நிலைமை ஏற்படுவதற்கு ஒரு விதத்தில் இரண்டாம் நிலை அதிகாரிகளும் பொறுப்புக் கூறவேண்டியவர்களாக உள்ளனர்.

சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப நீதி, நியாயம் நிலை நாட்டப்படக் கூடியதாக அவற்றை நடைமுறைப்படுத்தி கல்வி நிர்வாக செயற்பாடுகளை வினைத் திறனான முறையில் இனியும் செயற்படுத்தாது விட்டால், கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள் தமது உரிமைக்காகவும் நீதிக்காகவும் போராடுவது தவிர்க்க முடியாது போய்விடும்.

மத்திய அரசின் நிகழ்ச்சி நிரல் மூலம் வடக்கின் கல்விக்கு ஆப்பு வைக்க நினைக்கும் இரட்டையர்களான அமைச்சர் டக்ளஸ், ஆளுநர் சந்திரசிறி ஆகியோருக்கு எந்த மறுப்புமின்றி தலையசைக்க நினைக்கும் கல்வி அதிகாரிகளும் எமது சமூகத்தின் இருப்புக்கு ஆபத்தானவர்களே.

★

# நயினையில் இன்று கொடியேற்றம்

கந்ததியாகராஜா

நிலைபெறும் ஆகமங்களை நிலைத்திடும் தத்துவங்களை தன்னகத்தே கொண்டு பெருங்கடலாகத் திகழ்வது சைவ சித்தாந்தம். சைவசித்தாந்தம் செப்பும் ஒப்பற்ற கருத்துக்கள் யாவும் ஆக்கபூர்வமானவை. மனுக்குலம் வாழ வழி சொல்வன. அத்துடன் பேரின்ப பெருவாழ்வுக்கு நெறி தருவன.

அந்த வகையில் வருடாந்தப் பெருவிழாவில் இடம்பெறும் ஒவ்வொரு நாள் திருவிழாக்களும் உண்மையின் தத்துவத்தை உணர்த்தி நிற்பதை அறியலாம். திருவிழாக்கள் யாவும் வெறும் கேளிக்கைக் கொண்டாட்டங்கள் அல்ல. அவற்றுள் பொதிந்துள்ள ஆழ்ந்த பொருள்கள் மிகவும் உயர்ந்தவை.

முதலாம் திருவிழாவான கொடியேற்றத் திருவிழா பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றான படைத்தல் தொழிலை சுட்டி நிற்கிறது. அத்துடன் மனிதனும் தேவரும் மாய முனிவரும் மற்றுளாரும் அறியும் வண்ணம் உயர்த்திக்காட்டுவது.

இரண்டாம் திருவிழா தூலம், சூக்குமம் ஆகிய யாக்கையை நீக்கிக் கொள்ளும் நெறிமுறையை, பயன்பாட்டைக் குறிக்கும். திருவுலா வரும் திருக்கோலக் காட்சி நிறைந்த ஏனையவை யாவும் காத்தல் போன்றவற்றையும் விளக்கி நிற்கும்.

உற்சவ கால வாகனங்கள் யாவும் எல்லா உயிர்களின் மீது இறைவன் கொண்ட பெரும் கருணையையும் இரட்சித்தலையும், மீட்பையும் உணர்த்தி நிற்பவை.

மகோற்வசத் திருவிழாவின் அதி உத்தமமானதும் சிகரம் எனத் திகழ்வதும் தேர்த் திருவிழா ஆகும். தேர் ஓட்டம் சங்கராத்தை குறிப்பது. திரிபுர தகனம் எனச் சொல்லப்படுகின்ற அழித்தலை குறித்துரைப்பது. வடத்தில் இடம் பிடித்து வானத்தில் தடம்பதிக்க யாவருக்கும் கிடைக்கும் ஓர் அரிய வாய்ப்பு. வடம் பிடித்து இழுக்கும் போது சங்கரித்துப் போவது மும்மலங்களே. ஆன்ம சுத்தி கிடைக்க இறைவன் தேர் ஓடிவரும். திருத்தேரை இழுப்பதும் பெரும் பேறாகும். உடல் உள்ளமெல்லாம் தூய்மைகொள்ளும், மனதுக்கும் சாந்தி ஏற்படும்.

தேர் உற்சவம் என்றும் பேச இனியது. எண்ணத்தருவது, புண்ணியம் சேர்ப்பது, சிவானந்தமாகிய பேரின்பக் கடலில் மூழ்க நெறி காட்டுவது. சிவப் பரம்பொருளின் ஆன்மா ஐக்கியமாகி பிறவா யாக்கை பெற்று உய்தி பெறுதலை அருளலைப் பகர்வது. அத்தகைய அரும்பெரும் தத்துவங்களை வெளிப்படுத்தி நிற்கும் வருடாந்தப் பெருவிழா இன்று நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருக்கோயிலில் கொடியேற்றத்துடன் கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

பொங்குதமிழ் வாழும் பெரும் மண்ணில் பொங்குகடல் நடுவே பெரும் தெய்வமாக வீற்றிருந்து அருள் மழைபொழியும் அன்னையின் பெருவிழா என்றால் தமிழர் நெஞ்சங்களுக்கு ஓர் ஆறுதல் ஏற்படும். பக்தி என்னும் நுண்ணிய அருட்டுணர்வு பொங்கியெழும். மனதில் இருக்கும் மெய் அன்புடன் கூடிய பக்தி எனும் பண்பாடு வெளிப்படும். இவையாவும் அன்னையின் பக்தியீர்ப்பு சக்தி இன்றி வேறு இல்லை. நண்ணுவார்க்கு என்றும் இனியவளாகி எண்ணுவார் தமக்கெல்லாம் நல்கும் நயகியாகியாய் நாரணியாய், ஆரணியாய், பூரணியாய், சங்கவியாய், சாம்பவியாய் தமிழர் நெஞ்சங்களில் நம்பிக்கைக்கீற்றாக அருளின் ஊற்றாக திகழ்பவள் அம்பிகையே.

வானாடர் கோனாம், இந்திரனால் பூசிக்கப்பட்ட பேறுபெற்ற திருத்தலமானது வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டது. காப்பிய வரலாற்றோடு பின்னிப் பிணைந்தது. போதி மாதவனும் பெரும் தவம் இயற்றி போதம் பெற்ற பெருங்கோயிலின் பெருமை ''அகிலாண்ட கோடியீன்ற அன்னையே பிள்ளையின் கன்னியே மறை பேசும் ஆனந்த ரூப மயிலே'' எனத் தாயுமான சுவாமிகள் அன்பொழுகப் பாடுவார். ஒன்றாய் அரும்பி பலவாய் விரிந்து இவ்வுலகம் எங்குமாய் நீக்கமற நிறைந்திருக்கும் பராசக்தியாம் எங்கள் அன்னையை ''ஆதிஷாமாதேவி பார்வதி நீலி, துட்டியல் நீவன், நாகபூஷணி'' எனவும் அருணகிரியர் அம்மையின் புகழ்பாடுவார்.

ஆதி திராவிடர்களின் நாக வழிபாட்டின் நிலைக்களனாய் சான்றாக என்றும் விளங்கும் நாகபூஷணி தாயின் திருக்கோயில் கருவறையில் சுயம்பு மூர்த்தியாக அம்மையின் திருவுருவும் அதன் பின்புறத்தே விரிந்து காணப்படும் ஐந்து தலை நாக உருவும் பிரிவொன்று இல்லாதது. இதிலிருந்து பன்னெடுங்காலமாக தொடரும் நாக வழிபாட்டின் பெருமையை, தொன்மையை அறியலாம்.

காரணனாகி கருணையால் எவையும் நல்கி ஆருயிர் எவையும் மேவி அனைத்தையும் இயற்றி நிற்கும் பூரணமுதன்வனான சிவப்பரம்பொருளோடு கலந்து சிவசக்தி ரூபிணியாய் நின்று ''பெற்றதால் பெறும் உயிர் அனைத்தும் பேணலால் பெற்றிவோர் உற்றதால் விரும்பிய அனைத்தும் உதவலாள், எக்கலையும் சொற்றதால் உலகெடு வானும் தொழுதலால் என்றென்றும் பற்றதாம் கருணை பொழிதலால்'' பக்தி கோடிகள் அன்ன நிழல் தேடி அலையாழியையும் தாண்டி



இலட்சோப இலட்சமாய் பெருகி திருத்தலத்தில் உறையும் திருத் தெய்வத்தைத் தரிசிக்கும் யாத்திரைத் தலமாகப் புகழோடு விளங்குகின்றமை நாகம்மையின் அருளே, திருக்கருணையே எனும் நயினைப் பதிவாழ் புலவின் செய்யுள் செப்புகின்றது.

தமிழ் மக்களின் கலாசார பாரம்பரியங்களோடு ஒன்றிணைந்து பேரொழியாய் பெருங்கருணை தெய்வமாய், பெருந்திறனும் பேரருளும் பொழிந்து கால காலமாய் வந்துபோன இயற்கைச் சீற்றங்களுக்கு முகம் கொடுத்து போரின் கொடுமைகளுக்கெல்லாம் ஈடுகொடுத்து தன்னிறைவோடு காட்சி தந்து இரட்சிப்பவள் நாகம்மையே.

பெரும் துன்பங்களைச் சுமந்து சுகம் இழந்து இடரே வாழ்வாகிப் போன மக்கள் மனங்களின் நம்பிக்கையின் ஒளியாய் விளங்கும் அன்னையை எங்கள் நிலம் வாழ, இனம் வாழ வேண்டுதல் செய்வோம். கோலக்கொடியேறும் இப்பொன்னாளில் அன்னையின் ஈர்கழல் பற்றி கசிந்துருகி கைதொழுவோம். கருணைக்கடலாம் எம் அன்னை, பிள்ளைகள் படும் துயரை விரைந்தே போக்குவாள். துன்பம் நீங்கும், சுபீட்சம் கிட்டும் என்று நம்புவோம்.

# உணவும் குணமும்

பகவத் கீதையில் எப்படிப்பட்ட உணவைச் சாப்பிட வேண்டும் என்பது குறித்து ஓர் அருமையான கருத்து இருக்கிறது. பொதுவாக, மனிதர்களுக்கு மூன்று விதமான குணங்கள் இருக்கின்றன. தாமசம், ராஜசம், சத்துவம் என்பன தாம் அந்த மூன்று வகையான குணங்கள்.

தாமசம் என்பது, மந்தத் தன்மையைக் குறிப்பது, ராஜசம் என்பது கோபத்தைக் குறிப்பது, சத்துவம் என்பது சாத்வீகமான ஞான நிலையைக் குறிப்பது. நாம் உண்ணுகிற உணவுக்கும், இந்த மூன்று குணங்களுக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று பகவத் கீதை சொல்கிறது.

''ஒரு யாமம் கழிந்த உணவைத் தின்னாதே'' என்று கீதை அறிவுறுத்துகிறது. பெரும்பாலான குடும்பங்களில் காலையில் சமைக்கும் சாப்பாட்டை மதியம் சாப்பிடும் பழக்கம் இருக்கிறது. ஆனால், கீதையோ, சமைத்தவுடனே சாப்பிட்டுவிட வேண்டும் என்கிறது. அதாவது, ஒரு யாமம் கழிந்த உணவைச் சாப்பிடக் கூடாது என்று அறிவுறுத்துகிறது.

கண்ணபெருமான் காலத்தில், குளிர்சாதனப் பெட்டி போன்ற நவீன வசதிகள் கொண்ட கருவிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, அவருடைய காலகட்டத்தைப் பொறுத்தளவில் வேண்டுமானால் சரியானதாக இருக்கலாம். ஆனால், இப்போதைய நவீன, வேகமான உலகத்தில் இதையெல்லாம் கடைப்பிடிக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை என்று சில பேர் வாதிடலாம்.

பகவத்கீதை, ''ஒரு யாமம் கழிந்த உணவை உண்ணாதே'' என்று சொல்வதோடு மட்டுமல்லாமல், என்னென்ன உணவுகள் நம்மைப் பாதிக்கின்றன என்பதைப் பற்றியும் அழகாக எடுத்துச் சொல்கிறது. அதாவது, தாமசம், ராஜசம், தசத்துவம் என்னும் மூன்றுவகையான குணங்களைக் கொண்டவர்கள் உணவு விடயத்தில் எப்படி இருப்பார்கள் என்பதை அது படம் பிடித்துக் காட்டுகிறது.

தாமச குணத்தைக் கொண்டவர்கள், பழைய உணவுகளை விரும்பிச் சாப்பிடுவார்கள். அதில் சில பேரைப் பார்த்தீர்களானால், சங்ககாலத்துச் சாம்பாரை ருசித்துக் கொட்டிக் கொண்டே ரசித்துச் சாப்பிடுவார்கள். அதைக் கொதிக்க வைத்து, கொதிக்க வைத்து, அதற்கு ஓர் இலக்கணத்தை வேறு சொல்வார்கள்.

'இந்த செத்துப் போன சாம்பாரைச் சாப்பிட்டால் உடம்பு என்ன ஆகும்' என்கிற கவலை பலருக்கு இல்லை. பழையது என்கிற பெயரில் சில நாள்களுக்கு முன்பு சமைக்கப்பட்ட, புளித்துப்போன ஒரு விடயத்தைச் சாப்பிடுவது என்பதெல்லாம், தாமச குணவான்களுக்குக் கைவந்த கலை. தமச குணம் ஒரு வித மந்தத் தன்மையை, சோம்பலை நமக்குள் கண்டிப்பாக ஏற்படுத்தும். கிருத்திகை, சஷ்டி, அமாவாசை, சோமவார விரதம், பிரதோஷம் இப்படிப்பட்ட விரத நாள்களில் மட்டும் பழையது சாப்பிடுவது இல்லை என்று இவர்கள் தங்களுக்குள் தீர்மானித்துக் கொள்வார்கள். எல்லா நாள்களிலும் தவிர்க்க வேண்டும்.

பொதுவாகத் தமச குணம் என்பது, பழைய, அழுகிய, புளித்த, நாற்றமெடுத்த உணவுகளைச் சாப்பிடுவதால் உண்டாவது. இது பெரும்பாலும் நடுத்தரவர்க்கத்தினரிடையில் இருக்காது. இதுபோன்ற உணவுவகைகளை அதிகமாகச் சாப்பிடுபவர்கள் ஏழை வர்க்கத்தினர்தான்.

ராஜச உணவு என்பது, அதீதமான காரத்தை, அதீத புளிப்பை, அதீதமான சூட்டில் சாப்பிடுவது. சில பேர் அடுப்பிலிருந்து எடுத்துவிட்டாலே ஆறிப்போய்விட்டது என்று சொல்லிவிடுவார்கள். பேசாமல் வாயிலேயே எண்ணெய் வைத்து பொரிக்க வேண்டியதுதான். அந்தளவுக்குச் சுடச் சுடச் சாப்பிட்டால்தான் சில பேருக்குச் சாப்பிட்டது போன்று இருக்கும்.

உடலின் ஆரோக்கியத்துக்குப் பயங்கரமான பகைவர்கள் யார் யார் என்றால், புளிப்பு, காரம், வெப்பம் ஆகியவைதான். ஆனால், இந்தப் பகைவர்களை ஆரத்தழுவி ஆலிங்கனம் செய்யக்கூடியவர்கள், ரஜச குணம் உடையவர்கள். சிலபேரைப் பார்தீர்களேயானால், தேநீரைக் கொதிக்கக் கொதிக்கப் பருகுவார்கள். தங்கள் கைகளால் பிடிக்க முடியாத அளவுக்கு படுசூடாக இருக்கும்.

எனினும் கட கட கட என்று குடித்து விடுவார்கள். அந்தச் சூட்டைக் கையினாலேயே தாங்க முடியவில்லை என்கிறபோது, அதனைக் குடலுக்குள் ஊற்றினால், அந்தக் குடலின் கதி என்ன ஆகும்? இதைப்பற்றியெல்லாம் இவர்கள் சற்றும் சிந்திப்பது இல்லை. இதுதான் ராஜச குணவான்களின் உணவுப்பழக்கம்.

சத்துவகுண உணவு என்பது, சாத்விகமானது. வெள்ளையான அன்னம், வெள்ளையான பால், மோர் இதுபோன்ற விடயங்களைத்தான் அவர்கள் சாப்பிடுவார்கள். அதாவது, அவர்களுடைய உணவுப்பழக்கம் மிகவும் எளிமையானது. அங்கே காரம், புளிப்பு போன்ற சுவைகளுக்கு இடமே இருக்காது. இதைவிட உணவுக்கும் குணத்துக்கும் சம்பந்தம் உண்டு. எனவே கவனமாகச் சாப்பிடுங்கள்.



சுகி.சிவம்



# மூன்று நூற்றாண்டுகளைக் கடந்த பாஷையூர் புனித அந்தோனியார்

(கடந்தவாரத் தொடர்ச்சி)



எஸ்.யேசுதாஸ்

இந்தியக் குடும்ப மென்றை ஒரு பகுதியினர் ஏற்றுக் கொள்ள மறுத்தனர். கலைசார்ந்தோர் அன்போடு ஏற்றுக்கொண்டனர். மணற்றி மக்கள் இரு பிரிவாகினர். ஒரு குழுமத்தினர் தம்மை வடலியார் என்றும் மற்றையோர் தம்மை புட்டியார் என்றும் அடையாளப் படுத்தினர். ஏனெனில் இந்தப் பகுதிகளில் மேற்குப் புறமாக பெரும் மணல் மேடுகளும் கிழக்குப் பக்கமாக பனைமரங்களும், நாவல், அணிஞ்சில், ஈச்சமரங்களும் அந்தக்காலத்தில் காணப் பட்டன.

'காட்டுவளவு' என்று இன்றும் அழைக்கப்படும் கிழக்குப் பகுதியில் புளியமரத்தடியில் சிறிய சிவன்கோயில் அமைந்திருந்தது. இதன் திருவிழாக்களில் ஏலேல சிங்கமன்னன் அரச பரிவாரங்களுடன் கலந்து, கலை நிகழ்வுகளைக் கண்டு களிப்பான். இவ்வாறு ஒரு ஐதீகக் கதையும் இந்தப் பகுதி மூத்தோர் வாயிலாக அறிய முடிகிறது.

மீன் வளம் சிறந்த பிரதேசமாகையால் நல்லூர், சுதுமலை, ஆனைக்கோட்டை, நெடுந்தீவு போன்ற இடங்களைச் சேர்ந்த மீனவர்களும் இங்கே வந்து இந்தப்பகுதி மக்களுடன் இணைந்து கடற்றொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

16 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கீசர் கரையோரப்பகுதிகளில் கத்தோலிக்க மறைபரப்புப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டனர். இந்தப்பகுதியில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டிருந்த இந்து சமய மீனவர்கள் முறையான இல் இடம் இன்றி வாழ்ந்த அவல நிலையை யாழ்ப்பாணத்தில் சேவை செய்த குருக்கள் கண்ணுற்று அவர்களுக்கு குடிசைகள் அமைத்துக் கொடுத்ததையடுத்து மக்கள் குடிப்பரம்பல் அதிகரித்தது என்பதை வாய்மொழிப் பாரம்பரிய சான்றுகளூடாக அறிய முடிகிறது.

இங்கே குடியமர்ந்து தொழில் புரிந்த மக்கள் அந்தப்பகுதியில் சேவை செய்த ஓரற்றோரியன் சபைக்குருக்களின் நற்செய்திப் போதனையாலும், அன்பாலும் பரிவாலும் கவரப்பட்டு கத்தோலிக்க மதத்தில் இணைந்து திருமுழுக்கும் பெற்றனர்.

இந்தக் கத்தோலிக்க மக்களின் ஆன்மிக, வழிபாட்டுத் தேவைகளுக்காக 17 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஓலைகளால் வேயப்பட்ட ஒரு சிறு ஆலயம் மணல் திட்டான இடத்தில் அமைக்கப்பட்டது. யாழ்.ஆயர் இல்லத்தில் உள்ள 1775 ஆம் ஆண்டு அறிக்கை ஆவணத்தில் பாஷையூரில் ஒரு சிறு ஆலயம் அமைந்திருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதென வரலாற்று ஆசிரியர் அருட்திரு பௌடன்ஸ் அடிகள் கூறுகின்றார்.

ஆரம்ப ஆலயத்தில் வைத்து வணங்கப்பட்ட திருச்சொரூபம் எந்தப்புனிதருடைய என துல்லியமாக அறிய முடியாத போதிலும், போர்த்துக்கீசக் குருக்கள் தமது நாடாகிய போர்த்துக்கல் தேசத்தில் தோன்றிய புனிதரான அந்தோனியாரை வைத்து வழிபட்டிருக்கலாம் என எண்ண இடமுண்டு. மேலும் கரையோரப் பிரதேசங்களில் பெரும்பாலும் அந்தோனியார் ஆலயங்கள் அமைந்திருப்பதும் இந்தக் கருத்துக்கு வலுச் சேர்க்கிறது.

1825 ஆம் ஆண்டின் ஆயர் இல்ல அறிக்கையில் இலங்கையில் உள்ள அனைத்து கத்தோலிக்க ஆலயங்களின் பெயரும் அமைவிடங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் உள்ள 142 ஆலயங்களில் பாஷையூர் அந்தோனியார் ஆலயத்தின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. மேலும் 1843-1844 ஆம் ஆண்டுக்கான கத்தோலிக்க பாடசாலைகள் பற்றிய அறிக்கையில் பாஷையூரில் இயங்கிய சிறிய பாடசாலையில் அந்தோனி என்னும் ஆசிரியரிடம் 30 மாணவர்கள் கல்வி கற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலப்போக்கில் ஆரம்ப ஆலயத்தில் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப இடவசதி போதாமையால் கல்லினால் ஆன பெரிய ஆலயம் அமைக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. 1844-1845 ஆம் ஆண்டுகளில் கோவா ஓரற்றோறியன் சபையைச் சேர்ந்த அருட்திரு யோக்கிம் கபிரியேல் அடிகளின் ஊக்குவிப்பாலும், மக்களின் பேராதரவினாலும் கல்லினால் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது. இதுவே தற்போதைய ஆலயத்தின் ஆரம்பமாகும்.

இந்த ஆலயம் விசாலமானதாகவும், அழகானதாகவும் அமைக்கப்பட்டிருந்ததுடன் இரண்டு குருக்கள் தங்கி பணி புரிவதற்குரிய வசதிகளைக் கொண்ட குருமனையும் கட்டப்பட்டிருந்ததாக 1850 இல் கசினிலி அடிகள் குறிப்பிட்டுள்ளார். இந்த ஆலய ஆரம்ப கட்டுமானத்தைத் தொடக்கி சேவை செய்த கபிரியேல் அடிகளாரின் நினைவாக ஒவ்வொரு வருடமும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு வருகிறது.

ஆன்மிக பணியில் நுண்ணிய பார்வையும் யாழ்.மறைமாவட்டத்தை பல்பரிமாண வளர்ச்சிக்கு இட்டுச் சென்றவருமான ஆயர் மேதகு ஹென்றி ஜூலன் ஆண்டகையின் நிர்வாக காலத்தில் வளர்முக சமுதாயத்தின் சமய வளர்ச்சிக்கு இந்தக் கற்கோயில் போதுமானதாக இல்லை என்று உணரப்பட்டது. பாஷையூர் மக்களின் கட்டுக் கடங்காப் புத்தூக்கமும், ஆன்ம வாஞ்சையின் உந்துதலும் கவினுறு கலைக் கோயிலாக தமது ஆலயம் அமைய வேணுமென்ற ஆவலின் வெளிப்பாடாகவும் புனித அந்தோனியாரின் ஆலயத்தை மேலும் விசாலப்படுத்தி அதிக எண்ணிக்கையான மக்கள் வழிபாட்டில் கலந்து கொள்வதற்கு ஏற்றதாக மாற்றியமைக்க 1906 ஆம் ஆண்டு திட்டங்கள் தீட்டப்பட்டன.

> 1844–1845 ஆம் ஆண்டுகளில் கோவா ஓரற்றோறியன் சபையைச் சேர்ந்த அருட்திரு யோக்கிம் கபிரியேல் அடிகளின் ஊக்குவிப்பாலும் மக்களின் பேராதரவினாலும் கல்லினால் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது. இதுவே தற்போதைய ஆலயத்தின் தொடக்கமாகும்.

ஏற்கனவே இருந்த ஆலயத்துடன் இணைத்து பெரிய அளவில் புதிய அத்திபாரம் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கட்டடக்கலையில் நிபுணத்துவமான அருட்திரு கௌடியுட்டியர், அருட்திரு டெஸ்லன்ஸ் ஆகியோரின் திட்டமிடலுடன் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. டெஸ்லன்ஸ் அடிகள் முழுமையாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

மக்கள் கோவா ஆலய அமைப்பு முறையை ஒத்ததாக உள்ளே மரத்தூண்களை நிறுத்தி முகட்டை அமைக்கும் பாணியில் நிறுவ எண்ணிய போதிலும் நவீன முறையில் நடுவில் தூண்களின்றி பலமான உயர்ந்த சுவர்களில் முகட்டுக் கூரைத் தாங்கிகளைக் (வீம்) கொண்டு புதிய வடிவில் அமைத்தார். மக்கள் வன்னிக் காட்டிலிருந்து வெட்டி வந்த பெரிய பாலை மரங்களைக் கொண்டு 38 அடி அகலமான முகட்டுத் தாங்கிகளைக் கொண்டு 108 அடி நீளமும் 38 அடி அகலமும் கொண்ட கூரைப் பகுதி கொழும்பு வாக்கஸ் அன் சன்ஸ் நிறுவனத்தினால் 5000/= செலவில் அமைக்கப்பட்டது. (தொடரும்)

# கிழக்கு மாகாணசபை கலைப்புக்கு எதிரான வழக்கை கூட்டமைப்பே கையாளுகிறது

## இன்று முன்னிலையாகி வாதாடுகிறார் சுமந்திரன்

திருகோணமலை,ஜூன்19

கிழக்கு மாகாண சபையின் ஆயுள்காலம் முடிவடைவதற்கு முன்னர் அதைக் கலைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே கையாளவுள்ளது.

இந்த மனு குறித்தான விசாரணை இன்று செவ்வாய்க்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு வரவுள்ளது.

இதன்போது, மனுதாரர் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் முன்னிலையாகி வாதாடவுள்ளார்.



கிழக்கு மாகாண சபையை அதன் பதவிக்காலம் முடிவதற்கு முன் கலைப்பதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் அண்மையில் வாக்காளர் ஒருவர் ஆணை கோரும் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

கிழக்கு மாகாண சபையை அதன் பதவிக்காலம் முடிவதற்கு முன் கலைப்பதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் அண்மையில் வாக்காளர் ஒருவர் ஆணை கோரும் மனுவைத் தாக்கல் செய்துள்ளார். கே.கே.பி. ரங்கன அமரசிங்க என்பவரே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், கிழக்கு மாகாண ஆளுநர் ரியல் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம, கிழக்கு மாகாண சபை அமைச்சர்களான எம்.எஸ். சுபைர், ரி.நவரட்ணராஜா, எம்.எஸ். உதுமாலெப்பை, விமலவீர திஸாநாயக்க ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

10.05.2013ஆம் திகதி கலைக்கப்பட வேண்டிய கிழக்கு மாகாண சபையை முதலமைச்சரின் ஆலோசனைக்கு அமைய ஆளுநர் விரைவில் கலைக்கவுள்ளார் என்று மனுதாரர் தெரிவித்துள்ளார்.

உரிய காலத்திற்குமுன் மாகாண சபையைக் கலைக்கக்கூடாதென கிழக்கு மாகாண சபையில் கடந்த ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டதையும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வழக்கின் முடிவு வரும்வரை மாகாண சபையை ஆளுநர் கலைப்பதை தடை செய்வதற்கான இடைக்கால தடை உத்தரவொன்றையும் மனுதாரர் கோரியுள்ளார். இந்தநிலையிலேயே மனுகுறித்தான விசாரணை இன்று இடம்பெறவுள்ளது. (ச-சி)

## காட்டுத்தீயை அணைக்க ஹெலிகொப்டர்



நுவரெலியா,ஜூன்19

ஹசலக - பெலுங்கல காட்டுப்பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயை கட்டுப்படுத்த இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு ஒத்துழைப்பு வழங்க இரு ஹெலிக்கொப்டர்களை அனுப்பி வைத்துள்ளதாக விமானப் படை அறிவித்துள்ளது.

மேலும் மற்றுமொரு ஹெலிகொப்டரை அங்கு அனுப்பிவைக்கத் தயாராகி வருவதாக விமானப்படை ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

ஹசலகவில் இருந்து 6 கிலோ மீற்றர் தெற்காகவுள்ள பெலுங்கல காட்டில் திடீர் தீ பரவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## போதைப்பொருள் வைத்திருந்தவர் கைது

கண்டி,ஜூன்19

கண்டி, கெலிஓயா பிரதேசத்தில் ஹெரொயின் போதைப்பொருள் வைத்திருந்த சந்தேகத்தின் பேரில் ஒருவரை விசேட அதிரடி படையினர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து 100 மில்லிகிராம் ஹெரொயின் போதை பொருளையும் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபரை பேரதெனிய பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ச)



நுவரெலியா நகரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நுவரெலியா மணல் வியாபாரிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர். மணலை அனுமதிப்பத்திரம் இன்றி எடுத்துச்செல்ல முடியும் என அரசு அறிவித்திருந்தது. இந்தநிலையில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் எடுத்துச்சென்ற லொறிகளை கடந்த வாரம் பொலிஸார் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்ததுடன், நீதிமன்றத்தினால் அபராதமும் அறவிடப்பட்டது. இதனைக் கண்டித்தே மணல் வியாபாரிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில்

## வீதிச் சமிக்ஞைக் குறிகள் சம்மாந்துறையில் பொருத்தம்

சம்மாந்துறை,ஜூன்19

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அடிக்கடி வீதி விபத்துகள் இடம்பெற்று வருவதைக் கருத்திற்கொண்டு வீதிகளில் வேகக் கட்டுப்பாடு மற்றும் வீதி வளைவுச் சமிக்ஞைகள் பொருத்துவதற்கான நடவடிக்கைகளை சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.

மஹிந்த சிந்தனையின் வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டில் இடம்பெற்றுவரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் ஒன்று பிரதான வீதிகளை காப்பெற்றாக மாற்றியமைக்கும் திட்டமாகும். அந்தவகையில் அம்பாறை மாவட்டத்தில் சகல பிரதான வீதிகளும் காப்பெற்றாக அமைக்கப்பட்டுள் ளன. இவ்வாறான வீதிகளில் சாரதிகள் வாகனத்தை மிக வேகமாகச் செலுத்துகின்றனர். இதனாலேயே சம்மாந்துறை, காரைதீவு பிரதான வீதிகளில் அடிக்கடி வீதி விபத்துகள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் உயிர்ச் சேதங்கள் மற்றும் பொருள் சேதங்கள் ஏற்படுகின்றன. இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வரும் நடவடிக்கை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.

காரைதீவு பிரதான வீதிகளில் இவ்வாறான வீதி சமிக்ஞைகள் பொருத்தப்படுமானால் இரவு நேரங்களில் வாகனத்தைச் செலுத்தி வரும் சாரதிகளுக்கு இது பேருதவியாக அமைவதுடன், பெருமளவிலான விபத்துச் சம்பவங்களையும் தவிர்க்க முடியும். (ச)

## தோட்டத் தொழிலாளர்களை வாக்காளராக இணையுங்கள்

### சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள்

நுவரெலியா கொத்மலை பிரதேச தோட்ட தொழிலாளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க தோட்டப் பகுதிகளிலுள்ள இளைஞர் சமூக அமைப்புகள் பொறுப் புடன் செயல்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் வாக்காளர் இடாப்புக்களில் ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் கிராமப்புறங்களில் வாழும் தமிழர்கள் உரித்தான ஆவணங்கள் இல்லாமையினால் புறக்க ணிக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறானவர்களை இனங்கண்டு அவர்களுக்கு தேவையான பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை போன்றவற்றைப் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் வாக்காளர் பட்டியலில் பெயர்களைப் பதிவுசெய்ய தமிழ் இளைஞர் அணிகள், தோட்ட சமூக அமைப்புக்கள் முன்வரவேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். சிங்கள கிராமப்பகுதிகளில் கிராம அலுவலர்கள் கடந்த காலங்களில் மக்களுக்கு உரிய ரீதியில் வாக்காளர் பதிவு தொடர்பான விளக்கங்களை வழங்கி வருகின்றனர். அதேபோன்று தோட்டங்களிலுள்ள தமிழ்க் கிராம அலுவலர்களும் இளைஞர் அணிகளை ஒன்றுதிரட்டி அறிவுரைகளை வழங்கிச் செயற்படுவது தார்மீக பொறுப்பாகும் என்று அவர்கள் கூறுகின்றனர். (ச)

## மண்முனைப் பிரதேசத்தில் சட்டவிரோதக் குடியேற்றம்

### உடன் நிறுத்துமாறு கோருகிறார் பிரசாந்தன்

மட்டக்களப்பு,ஜூன்19

சட்டவிரோதக் குடியேற்றங்கள் அமைக்கப்படுவதை மண்முனைப்பற்றுப் பிரதேசத்தில் உடன் தடுத்து நிறுத்த வேண்டும்என்றுகிழக்கு மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் இவ்வாறான குடியேற்றங்களினாலேயே தமிழ், முஸ்லிம் இனங்களிடையே இனமுறுகலும், கலவரங்களும் ஏற்பட்டன.

இவ்வாறான குடியேற்றங்களினாலேயே தமிழ், முஸ்லிம் இனங்களிடையே இனமுறுகலும், கலவரங்களும் ஏற்பட்டன.

இவ்வாறான நிலையில் திட்டமிட்ட சில முஸ்லிம் குழுக்களால் தாழங்குடா, வேடர் குடியிருப்பு, ஆரையம்பதி கிழக்குப் பகுதிகளில் வேலி இடப்பட்டு அரச காணிகளும் தமிழருக்குரிய தனியார் காணிகளும் சுவீகரிப்புச் செய்யப்படுவதும், பின்னர் அவை சிறு சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு வேறு பிரதேசங்களில் இருந்து மக்களைக் குடியமர்த்துவதற்கும், முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக பல முறை பிரதேச செயலர், பொலிஸாருக்கு அறிவித்துள்ளதுடன், நீதிமன்றத்துக்கும் சென்றுள்ளேன். ஆனால், இவை குறைந்தபாடாக இல்லை. இதனைத் தடுப்பதற்கு மாவட்ட அபிவிருத்திக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் இவ்வாறான திட்டமிட்ட குடியேற்றங்களூடாக இனங்களைக் குழப்ப நினைக்கும் சக்திகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மாவட்ட அபிவிருத்திக் குழு ஆணை வழங்க வேண்டும். விசேட குழு அமைக்கப்பட்டு ஆராயப்பட வேண்டும்- என்றார். (ச)

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பிற்போட்டு வைத்த சில வேலைகளை, மீண்டும் செய்வீர்கள். உத்தியோக சூழ்நிலை ஆறுதல் தருவதாக அமையும். அயலாரிடம் வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். உறவினர்கள் உங்களிடம் அன்பாக நடந்து கொள்வர். சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்ய நேரிடும்.

**இடபம்:** நீங்கள் எதிர்பாராத சில தரப்பிலிருந்து உங்களுக்கு உதவி கிடைக்க வாய்ப்புண்டு. குடும்ப உறுப்பினர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். அடுத்த சில நாள்களுக்குப் பின் வரும் என நினைத்த பணவரவு ஒன்று இன்றே வந்து சேரும். நண்பர்கள் சிலருடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படும்.

**மிதுனம்:** தந்தை வழியில் மனஸ்தாபம் வராமல் இருக்க, விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டும். சில விடயங்களில், முன்னெச்சரிக்கையுடன் செயற்படாததன் மூலம் இழப்புகளைச் சந்திப்பீர்கள். வெளியூரில் இருக்கும் ஒருவரை, தொலை பேசியில் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு, அவர்கள் இல்லாமல் போகலாம்.

**கடகம்:** வீட்டில் வசதி, வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். மற்றவர்கள் மதிக்கும் வகையில் எந்தக் காரியத்தையும் செய்ய நினைப்பீர்கள். உங்களின் கடந்தகால செயற்பாடு ஒன்றை, மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். உங்களுக்கு வேண்டிய காரியம் ஒன்றைச் சாதிக்க மற்றவர்களை நாடுவீர்கள். விருந்து, விசேடங்களில் கலந்து கொள்வீர்கள்.

**சிங்கம்:** நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர், உங்களைத்தேடி வருவார். தொழில், வியாபார ரீதியாக வர வேண்டிய பண வரவுகளைப் பெறுவீர்கள். குழந்தைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். உறவினர் ஒருவர், ஆதாயம் பெற, நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருப்பீர்கள்.

**கன்னி:** சில விடயங்கள் குறித்து பெரியளவில் மனக்கோட்டை கட்டி, அது நடக்காமல் போகும். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்பீர்கள். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். நீண்ட நாள்களாகப் பிற்போட்டு வைத்த வெளியூர் பயணங்கள் மேற்கொள்வீர்கள்.

**நாளை**

ஆனி 06 புதன்கிழமை 20.06.2012
திதி: பிரதமை மு.இ 10.04 வரை
நட்சத்திரம்: திருவாதிரை பி.இ 02.45 வரை
சுபநேரம்: 04.24- 05.54 வரை
ராகு காலம்: 11.54- 01.24 வரை

**துலாம்:** எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். உறவினர்கள் வருகையால் வழக்கமான வேலைகளில் தடைகள் ஏற்படலாம். புதிய காரியம் ஒன்றை ஆரம்பிக்க முற்படுவீர்கள். அலுவலகப் பணிகளில் முன்யோசனையுடன் செயற்படுவது அவசியம்.

**விருச்சிகம்:** மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். சில விடயங்களில் புத்திசாலித்தனமாக செயற்படுவதன் மூலம், கூடுதல் ஆதாயம் பெறுவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நண்பர்களுடன் விருந்துகளில் பங்கேற்பீர்கள். அலைச்சல் இல்லாமல் சில வேலைகளை சுலபமாக முடிப்பீர்கள்.

**தனுசு:** மற்றவர்களை நம்பி எந்தக்காரியத்திலும் இறங்க வேண்டாம். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, நண்பர் ஒருவரை எதிர்பாராமல் பார்க்க நேரிடும். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருப்பீர்கள். உடல் நிலையில் அசௌகரியங்கள் இருந்தாலும், அதைப் பொருள்படுத்தாமல், சில வேலைகளைச் செய்ய நேரிடும்.

**மகரம்:** வேலை நெருக்கடிகளால் வெறுப்பு, விரக்தி உண்டாகும். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு, சில காரியங்களில் இறங்கிவிட்டு, அவதிப்படுவீர்கள். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, உடனுக்குடன் வாகனங்கள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். மற்றவர்களுக்காகச் செலவிடுவீர்கள்.

**கும்பம்:** எடுத்த காரியங்களில் எதிர்பாராத வெற்றி கிடைக்கலாம். இரண்டு மூன்று நாள்களாக எதிர்பார்த்த பணவரவு ஒன்று இன்று கைக்கு வரும். மற்றவர்கள் பாராட்டும் வகையில், எந்தக் காரியத்தையும் செய்ய முற்படுவீர்கள். உறவினர் ஒருவர் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம்.

**மீனம்:** பணம் கொடுக்கல், வாங்கல் விடயங்களில் சிலரிடம் கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம். வெளியூரில் வசிக்கும் ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு முக்கிய விடயமாகப் பேசுவார். வீட்டுத் தேவைகளுக்காக கணிசமாக செலவிடலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | | 7 | 8 | 6 | | |
| | | 8 | 1 | 4 | | 9 | | |
| | | 1 | 9 | | | | 8 | |
| 9 | 2 | 4 | 8 | | | | | 3 |
| 6 | | | | 3 | | | | 9 |
| 3 | | | | | 7 | 2 | 4 | 1 |
| | 4 | | | | 5 | 1 | | |
| | | 6 | | 1 | 2 | 3 | | |
| | | 3 | 7 | 6 | | | 2 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 1 | 5 | 6 | 3 | 7 | 4 | 9 |
| 9 | 4 | 5 | 7 | 2 | 8 | 1 | 6 | 3 |
| 6 | 3 | 7 | 9 | 4 | 1 | 2 | 8 | 5 |
| 5 | 7 | 8 | 2 | 9 | 4 | 3 | 1 | 6 |
| 3 | 6 | 9 | 8 | 1 | 7 | 4 | 5 | 2 |
| 4 | 1 | 2 | 6 | 3 | 5 | 9 | 7 | 8 |
| 1 | 5 | 3 | 4 | 8 | 2 | 6 | 9 | 7 |
| 8 | 2 | 6 | 1 | 7 | 9 | 5 | 3 | 4 |
| 7 | 9 | 4 | 3 | 5 | 6 | 8 | 2 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3 X 3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# பிறந்தநாள் வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



உயர்திரு.
பாலகிருஷ்ணன் இரகுநாதன்
(S.L.P.S.I)

ஆசிரியராய் அதிபராய் கோட்டப் பணிப்பாளராய்
காசினியில் புகழொடு திகழ்ந்த உத்தமரே!
இடருறு பிரதேசங்களிலும் இன் சேவை புரிந்து
தடம்பல பதித்த தனயனே வாழ்க! வாழ்க!!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்)

(சி/777) (8-8)



# பிறந்தநாள் வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு
மேலாக கல்விப் புலத்துக்கு
அர்ப்பணிப்பான சேவை செய்த

உயர்திரு.
பாலகிருஷ்ணன் இரகுநாதன் (S.L.P.S.I)

பார்போற்ற ஆசிரியப்பணிபுரிந்தே
பண்பான அதிபராய் உயர்ந்து நின்றீர்
பேர்பெற்ற கோட்டத்துப் பணிப்பாளராய்
பெருமை மிகு சேவையினைச் செய்த செம்மல்
சீர்பெற்ற வட. இந்து ஆரம்பப் பள்ளியை
சிறப்புடனே ஆக்கி வைத்த செயல் வீரனாம்
ஊர் போற்றும் இரகுநாதன் வாழி வாழி
உயர்வுள்ளம் தனையுடையோய் நீடு வாழி!

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
(யா/வடமராட்சி இந்து ஆரம்பப் பாடசாலை, பருத்தித்துறை.)

(சி/776) (8-8)


## இலங்கையர் இருவருக்கு விளக்கமறியல்

பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட் பகுதியில் விவசாயியான சமீர சந்திரசேன என்பவர் கடந்த பெப்ரவரி மாதம் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக இலங்கையர் இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வழக்கு விசாரணைக்கு முன்னதாக பூர்வாங்க விசாரணைக்காக வாய் மூலம் சாட்சியமளிப்பதா என்பது குறித்து தீர்மானிப்பதற்கு இவர்களின் சட்டத்தரணிகளுக்கு அடுத்த மாதம் 2 ஆம் திகதிவரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஒக்ஸ்போர்ட்டில் டோமியின் வீதியிலுள்ள வீடொன்றுக்கு கடந்த பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி தீ வைத்ததாகவும் 28 வயதான சந்திரசேனவை கொலை செய்ததாகவும் மேற்படி இருவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

துவான் பிவாஸ் சவால் (வயது 23), விராஜ் அழகக்கோன் (வயது33) ஆகிய இரு இலங்கையர் மீதே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.


HINDU PREMIER LEAGUE

Hindu Premier League

NORTHERN CHAMPIONSHIP
AVARANGAL



# HPL கரப்பந்தாட்டப் போட்டிகள்

வடமாகாணத்தில் முதன் முறையாக பிரமாண்டமான முறையில் நடைபெறவிருக்கும் மாபெரும் HPL கரப்பந்தாட்டப் போட்டிகள். இப் போட்டியில் யாழ். மாவட்டத்தின் முன்னணி வீரர்கள் ஆறு கழகங்களாக போட்டியிடுகின்றார்கள். போட்டிகள் 06 மைதானங்களில் இரவு நிகழ்வாக மின்னொளியில் 03.07.2012 அன்று தொடக்கம் தொடர்ந்து 20 நாள்கள் நடைபெற இருக்கின்றன. இதற்கு தங்களுடைய ஆதரவினை வழங்குமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

ஊடக அனுசரணை உதயன்

HPL ஒருங்கிணைப்புக் குழு

(சி/778)(6-8)



**யா/மகாஜனக்கல்லூரி தெல்லிப்பழை பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்**

17.06.2012 பக்கம் V இல் பிரசுரமான மேற்படி விளம்பரத்தில் இணைச் செயலாளர்கள் என்பதற்குப் பதிலாக இணைப்பாளர் என தவறுதலாக பிரசுரமாகியதை திருத்தி வாசிக்கவும்

(சி/586)(6-8)



**சிறுநீரகம் தேவை**

27 வயதுள்ள நபருக்கு வயது 21 - 60 இக்குள் உள்ள இரத்தவகை A+ அல்லது O+ உடைய நபரின் சிறுநீரகம் உடனடியாகத் தேவை.
தொடர்பு கொள்ள : 077 1506673, 075 0735249, 077 7563678

(சி/839)(6-8)



உ



ஈவினை மத்தி திருவருள் மிகு
# ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்

புனராவர்த்தன சப்ததச குண்டபக்ஷ அஷ்டபந்தன

# மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**எண்ணெய்க்காப்பு**
ஸ்ரீ நந்தன வருஷம்
ஆனிமாதம் 6 ஆம் நாள்
(20.06.2012)
புதன்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை

**கும்பாபிஷேகம்**
ஸ்ரீ நந்தன வருஷம்
ஆனிமாதம் 7 ஆம் நாள்
(21.06.2012)
வியாழக்கிழமை
முற்பகல் 10.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை

பிரதமகுரு:- பிரம்மஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள்

ஈவினை மத்தி. ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ பரிபாலன சபையினர்.

(1857)(2-6)



அம்பாந்தோட்டை, கட்டுவன பிரதேச கூட்டமொன்றின்போது கொல்லப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கலந்துகொண்டு மக்களுடன் கலந்துரையாடுகிறார்.

# வரட்சியான காலநிலை நீடித்தால் மின்வெட்டு

## மின்சார சபை தகவல்

கொழும்பு,ஜூன்19

நாட்டில் தொடர்ந்தும் வரட்சியான காலநிலை நீடித்தால் மின்வெட்டை நடைமுறைப்படுத்த நேரிடும் என்று இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

நாட்டில் மிக மோசமான வரட்சியான காலநிலை தற்போது நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீர்மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. பாகிஸ்தான் மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் நாள் ஒன்றுக்கு எட்டு மணித்தியாலயம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுவதாக இலங்கை மின்சாரசபை சுட்டிக் காட்டியுள்ளது.

நீர்மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தி வீழ்ச்சியினால், அனல் மின்நிலையங்களின் உற்பத்தியை அதிகரிக்க நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு மின் அலகிலும் மின்சார சபைக்கு 5.88 ரூபா நட்டம் ஏற்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

# கொள்ளையிடச் சென்றோர் மக்களால் நையப்புடைப்பு

கொழும்பு,ஜூன்19

கத்திமுனையில் ஒருவரின் தங்கச் சங்கிலியைக் கொள்ளையிட முயன்ற இரு இளைஞர்கள் பிரதேச மக்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்ட பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இந்தச்சம்பவம் நீர்கொழும்பு, தளுபத்தைப் பிரதேசத்தில் இடம் பெற்றது.

நீர்கொழும்பு, சிலாபம் பிரதான வீதியில் தளுபத்தைப் பாலம் அருகிலுள்ள நாய்கள் வளர்த்து விற்கும் வீடு ஒன்றுக்குச் சென்ற இளைஞர்கள் நாய் வாங்க வந்தவர்களைப் போன்று நடித்துள்ளனர். திடீரென்று வீட்டு உரிமையாளரைக் கத்தி முனையில் அச்சுறுத்தி அவர் அணிந்திருந்த 5 பவுண் தங்கச் சங்கிலியை கத்தியினால் அறுத்து எடுத்துக்கொண்டு ஓட முயன்றுள்ளனர்.

அவ் வேளையில் அங்கு கூடிய மக்கள் மடக்கிப் பிடித்தனர். (ச)

# வாக்குறுதியை நிறைவேற்றினால் ஆதரவு; இல்லாவிட்டால் மக்களைத் திரட்டி போராட்டம்

## ரணில் விக்கிரமசிங்க அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு,ஜூன்19

சம்பள உயர்வு உள்ளிட்ட பொது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றினால் அரசுக்கு ஆதரவு வழங்கப்படும். அப்படியில்லாவிட்டால் எதிர்வரும் நவம்பர் மாதம் தொடக்கம் பொதுமக்களைத் திரட்டி போராட வேண்டிவரும் என்று எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தொகுதி அமைப்பாளர்கள் சிலருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்கள் 8 பேருக்கும், தொகுதி அமைப்பாளர்கள் 19 பேருக்கும் நேற்று எதிர்க்கட்சித் தலைவரால் குறித்த நியமனம் வழங்கப்பட்டது.

**அரசு போரைக் காரணம் காட்டி மக்களுக்கான நிவாரணத்தை தட்டிப்பறித்துள்ளது. போர் முடிந்த பின் மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை**



சிறப்பாகக் கடமையாற்றுவோருக்கு முன்னுரிமையும், குறைவாகக் கடமையாற்றுவோருக்கு எச்சரிக்கையும் வழங்கப்படுவதுடன் வேலை செய்யாதோர் பதவி விலக்கப்படுவர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் போர் நிலவியபோதும் பொது மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. தற்போதைய அரசு போரைக் காரணம் காட்டி மக்களுக்கான நிவாரணத்தை தட்டிப்பறித்துள்ளது. போர் முடிந்த பின் மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அவர் கூறினார்.

ஊழியர் சேமலாப நிதியில் கை வைத்துள்ள அரசு அதன் நிதியை பங்குச்சந்தையில் முதலீடு செய்துள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ச)

# காலாவதியான 13,200 சிமெந்து மூடைகள் பறிமுதல்



கொழும்பு,ஜூன்19

மருதானை மற்றும் பண்டாரகம ஆகிய பிரதேசங்களிலிருந்து காலாவதியான 13,200 சிமெந்து மூடைகளை மீட்டதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

காலாவதியான சிமெந்தை புதிய பைகளில் இடும் முயற்சியில் சிலர் ஈடுபட்டிருந்தபோதே அவை கைப்பற்றப்பட்டதாக மேற்படி அதிகாரசபை கூறியது.

மருதானைப் பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமானதெனக் கூறப்படும் களஞ்சியசாலை ஒன்றிலிருந்தே 10 ஆயிரம் மூடை சிமெந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறப்படும் காலாவதியான சிமெந்து மூடைகள் 3,200 ஐ பண்டாரகமப் பொலிஸார் அந்தப்பகுதியில் இருந்து மீட்டுள்ளனர்.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை பொலிஸாருடன் இணைந்து நுகர்வோர் அதிகார சபை மேற்கொண்டு வருகின்றது. (ச)

# மொழிப்போர் இனப்போராக மாறி இன்று மதப்போராக உருவெடுப்பு

## அற்புத வளர்ச்சி என்கிறார் மனோ கணேசன்

கொழும்பு,ஜூன்19

இந்த நாட்டில் மொழிப் போர் ஆரம்பிக்கப்பட்டு, இனப்போராக மாறி, இன்று அது மதப்போராக உருமாறி வளர்ந்திருக்கிறது. இதுதான் இந்த நாட்டில் இன்று நாம் காணும் அற்புதமான வளர்ச்சியாகும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில், கொழும்பு ஹவ்லொக் வீதி சம்புத்தத்வ பௌத்த மண்டபத்தில் தேசிய சர்வமத மாநாடு நடைபெற்றது.

இந்தநிகழ் வில் அவர் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு - கிழக்கிலிருந்து இராணுவத்தை அகற்றும்படி உலகம் இன்று இந்த அரசை வலியுறுத்துகிறது. இம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களிலும் இந்த விடயம் பற்றிக் குறிப்பிடப்பட்டு இருக்கின்றது.

தமிழ்ப் பகுதிகளிலிருந்து இராணுவத்தினரை வாபஸ் பெற அரசு பிடிவாதமாக மறுக்கின்றது. இதை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

அங்கே இராணுவம் சும்மா இருக்கிறது. பாதுகாப்புப் பணியில் ஈடுபடவில்லை. அது தமிழ் மக்களின் சமூக வாழ்க்கை விவகாரங்களில் தலையிடுகிறது.

இவ்விடயம் தமிழ் மக்களுக்குத் தொல்லைதரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கை ஆகும். வடக்கில்தமிழ்மக்கள் வீடுகளில் நடைபெறும் பிறந்தநாள் விழாக்களுக்குக் கூட, இராணுவ அதிகாரிகள் அழையா விருந்தாளிகளாக நுழைகிறார்கள்.

இதை நான் சொல்லவில்லை. இலங்கை வந்து சென்ற இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ், நாடு திரும்பியதும் இதைச் சொன்னார்.

இந்தச் செய்தி உலகத் தலைப்புச் செய்திகளில் இடம் பெற்றது. இதுதான் வடக்கின் உண்மை நிலவரம். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஆளுநர்களாக முன்னாள் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதே அங்கு இராணுவ ஆட்சி நடைபெறுவதை ஊர்ஜிதம் செய்கின்றது. - என்றார். (ச)

# இராணுவத்துக்கு கௌரவம் வழங்குகிறதா அரசு?

## சரத் பொன்சேகா கேள்வி

கொழும்பு,ஜூன்19

விடுதலைப் புலிகளை வெற்றி கொண்ட இராணுவத்தினருக்கு இந்த அரசில் உரிய கௌரவம் அளிக்கப்படுகிறதா என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டையில் இடம்பெற்ற ஜெனரலுக்கான இராணுவத் தினர் என்ற ஒன்றியத்தின் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

போர்க் காலத்தை விடவும் இன்று பலர் இராணுவத்தை விட்டுத் தப்பிச் செல்கின்றனர் என்றும், தரமற்ற செயல்களில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுகின்றமை அதற்குக் காரணம் என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ச)

# 22 ஆவது தியாகிகள் தின நினைவஞ்சலி




தோழர் பத்மநாபா

## 19 ஜூன் 2012

தமிழ் மக்களின் சுபீட்சமான
எதிர்காலத்துக்காக
உண்மையாய் உழைத்து
தம் உயிரை அர்ப்பணித்த
எம் இனிய தோழர்கள்,
இதர அமைப்புக்களைச்
சேர்ந்தவர்கள், பொதுமக்கள்
அனைவருக்கும்


## எமது அஞ்சலிகள்




தோழர் றொபேட்




தோழர் ஐயா - வவுனியா




தோழர் சிவா - மட்டக்களப்பு




தோழர் ரட்ணம் - மன்னார்




தோழர் பெஞ்சமின் - மலையகம்




தோழர் சின்னவன் - திருகோணமலை




தோழர் கிருபா - அம்பாறை




தோழர் கதிர் - கிளிநொச்சி




தோழர் ஜோர்ச் - திருகோணமலை




தோழர் கொட்வின் - முல்லைத்தீவு




தோழர் குமார் - மட்டக்களப்பு



தோழர் நடேசலிங்கம் - வவுனியா




தோழர் சாரங்கன் - மன்னார்



தோழர் முகுந்தன் - வட்டுக்கோட்டை



தோழர் கபூர் - பருத்தித்துறை




தோழர் வீ. ஏ. கந்தசாமி - மானிப்பாய்



தோழர் ராஜன் - கோப்பாய்




தோழர் குமார் - குருநகர்



தோழர் வினோத் - சாவகச்சேரி



தோழர் சோபா - யாழ்ப்பாணம்



தோழர் இளங்கோ - சாவகச்சேரி


தியாகிகள் தின அஞ்சலி நிகழ்வுகள் இன்று இல:310, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது அலுவலகத்தில் நடைபெறும். இதனைத்தொடர்ந்து யுத்தத்தின் பின்னர் தமிழ்ச் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கடந்த 30 வருட போராட்டம் தொழிலாளர்கள், விவசாயிகள், வறிய கூலி உழைப்பாளர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள மாற்றம் என்ன? என்பது குறித்தும் நினைவுச் சொற்பொழிவுகள் இடம்பெறும். இறுதியாக உயிர்நீத்த தோழர்களின் நினைவாக இரத்த தானம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(19565)(2-6)

**பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ்)**

**Pathmanabha Eelam People's Revolutionary Liberation Front (Pathmanabha E.P.R.L.F)**

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## இராசரத்தினம் சிவபாலசுப்பிரமணியம் (பாப்பா)

(உரிமையாளர் - சிவா ஸ்ரூடியோ)

மலர்வு
03.08.1950

உதிர்வு
20.05.2012

நிஜமான நிகழ்வுகளை நிழலாக படம் பிடித்து
நிலையான இடமொன்றை நிறுத்தி விட்டார் எம் மனதில்
படம் பிடிப்பது பாப்பா என்றால்
பரவசமடையாதோர் யாருமில்லை பாரில்

நல்ல நண்பனாய் நட்புக்கோர் இலக்கணமாய்
நம் மெல்லோருடனும் நலமாய் பழகி
நன்மையே நாளெல்லாம் அனைவர்க்கும் விரும்பி
நம்மிடையே குடிகொண்ட உம்மை
நாம் பிரிந்து வாழ்வது எப்படி பாப்பா ? – உம்
ஆன்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகிறோம்.

அரசடி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர்.

(19562)(6)

# பணவீக்கத்தில் சிறிய வீழ்ச்சி

இந்த ஆண்டின் மே மாதத்துக்கான இலங்கையின் பணவீக்கத்தில் சிறியதோர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று மத்திய வங்கியின் புள்ளி விவரத் திணைக்களம் தகவல் தெரிவித்துள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியின் ஆண்டுக்காண்டு மாற்ற விகிதத்தின் அடிப்படையில் கணிக் கப்படும் இலங்கையின் பண வீக்கம், கடந்த மே மாதத்தில் ஐந்து புள்ளி ஆறு சதவீதம் எனக் காணப்பட்டுள்ளது.

இதுவே முன்னைய மாதத்தில் (ஏப்ரல்) ஐந்து புள்ளி ஏழு சதவீதம் எனச் சற்று உயர்வாகக் காணப்பட்டது.

எனினும், இலங்கையின் ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் மே மாதத்தில் ஏழு சதவீதமாகக் காணப்பட்டுள்ளது.

இது, இந்த ஆண்டின் மார்ச் மாதத்தில் இருந்து தொடர்ச்சியாக அதிகரித்து வருவதாக மத்திய வங்கியின் தரவுகள் காட்டுகின்றன.

இந்தப் பணவீக்க அதிகரிப்பில் உணவு மற்றும் மென் பானங்களின் விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க (2.5%) அதிகரிப்பே காரணம் என்று மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக, கோதுமை மா, பாண், பால் மா, மரக்கறி வகைகள், தேசிக்காய், பச்சை மிளகாய், சின்ன வெங்காயம், உருளைக் கிழங்கு மற்றும் கடல் உணவு ஆகியவற்றின் விலைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஹற்றன் நஷனல் வங்கியின் 2011 ஆம் ஆண்டுக்கான 'பத்தும் விமன' கணக்கில் கணக்கு வைத்திருந்த கெருடாவிலைச் சேர்ந்த வாகீசன் லக்சினிக்கு குலுக்கல் முறையில் மோட்டார் சைக்கிள் பரிசில் கிடைத்தது. (ம-253)

# இலங்கை அரிசிக்குக் கேள்வி உலக சந்தையில் அதிகரிப்பு



உலக சந்தையில் இலங்கை அரிசிக்கான கேள்வி அதிகரித்து வருவதைத் தொடர்ந்து, அரிசி ஏற்றுமதியை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளதாக அபிவிருத்திக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அரிசி உற்பத்தியில் இலங்கை தற்போது தன்னிறைவு கண்டுள்ளதுடன், வாரந்தோறும் 25 கொள்கலன் அரிசியை கென்யா, சோமாலியா, எதியோப்பியா, டுபாய் போன்ற ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்காசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருவதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இங்கிலாந்து இலங்கையின் புதிய இன அரிசிக்கு கேள்வி எழுப்பியுள்ள நிலையில், இதனை அதிகம் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யவும் அரசு திட்டமிட்டுள்ளது.

(ம)

# பங்குச் சந்தையில் முன்னேற்றம்

இலங்கையின் கொழும்பு பங்குச் சந்தை நடவடிக்கைகள் இந்த மாதத் தொடக்கத்தில் இருந்து முன்னேற்றம் கண்டு வருவதாக சந்தைப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

கடந்த காலாண்டு அல்லது மூன்று மாதங்களுக்கும் மேலாக தொடர்ந்து சரிவினைச் சந்தித்து வந்த இலங்கையின் பங்குச் சந்தை நடவடிக்கைகள், கடந்த சில வாரங்களாகவே சிறிய முன்னேற்றத்தைப் பதிவு செய்து வருகின்றன.

கடந்த வாரத்துடன் முடிவடைந்த கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் (4,991.21) மற்றும் மிலங்கா விலைச்சுட்டெண் (4,449.98) ஆகியன முறையே 1.39 மற்றும் 1.56 சதவீதத்தால் உயர்வு கண்டுள்ளன.

இதேபோல், முன்னைய சில வாரங்களுடன் ஒப்பிடுகையில், பங்குச் சந்தையின் மொத்தப் புரள்வு மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டவரின் ஈடுபாடு என்பனவும் அதிகரித்துள்ளதாக அண்மைய சந்தைக் குறிகாட்டிகள் காட்டுகின்றன.

(ம)

# மாணவர்களுக்கு இலவச பஸ் சேவை மலிபன் நிறுவனத்தால் அறிமுகம்



மலிபன் நிறுவனம் அதன் புதிய சமூகப் பொறுப் புணர்வுத் திட்டத்தின் கீழ், இரத்மலானை பிரதேசத்தில் உள்ள பாடசாலைச் சிறுவர்கள் பாடசாலை செல்வதற்காக இலவச பஸ் ஒன்றை வழங்கியுள்ளது.

இதனைக் கையளிக்கும் வைபவத்தில் மேல் மாகாண போக்குவரத்து அமைச்சர் உபாலி கொடிகார, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் பியதாச மாறம்பகே, பொலிஸ் தலைமையகத்தின் போக்குவரத்து நிர்வாகம் மற்றும் வீதிப் பாதுகாப்புக்கான பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத் தியட்சகர் கே.அரசரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சேவை இரத்மலானையில் ஆரம்பித்து கல்கிசை, தெஹிவளை, வெள்ளவத்தை, பகத்தல வீதி, ஆர்.ஏ.டிமெல் மாவத்தை, பௌத்தாலோக மாவத்தை, தும்முல்ல சந்தி, தோர்ஸ்டன் வீதி மற்றும் நெலும் பொக்குண மாவத்தை ஊடாக நகர மண்டபத்தையும் பின் லிப்டன் சுற்றுவட்டத்தையும் சென்றடையும்.


இரத்மலானை, கொத்தலாவலபுர வித்தியாலயம், கல்கிசை சென் தோமஸ் கல்லூரி, தெஹிவளை திருக்குடும்ப கன்னியர் மடம், றோயல் கல்லூரி, பௌத்த மகளிர் கல்லூரி முதலிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இந்த இலவச பாடசாலை பஸ் சேவை மூலம் அதிக பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. மீண்டும் பகல் 1.45மணிக்கு மாணவர்களை ஏற்றிக் கொண்டு கொலுமடவுக்கு இந்த பஸ் திரும்பும்.

நிகழ்வில் உரையாற்றிய மேல் மாகாண போக்குவரத்து அமைச்சர் உபாலி கொடிகார ''மாணவர்களைப் பாடசாலைக்குப் பாதுகாப்பாகக் கூட்டிச்செல்லும் இந்த இலவச பஸ் சேவையை மலிபன் வழங்க முன்வந்தமைக்கு நான் பாரட்டுகின்றேன். காலப்போக்கில், முன்னேற்றமடையக்கூடும் என எதிர்பார்க்கப்படும் இந்தத் திட்டத்திற்கு மேல்மாகாணத்தின் போக்குவரத்து அமைச்சர் என்ற ரீதியில் என்னாலான உதவியை வழங்கத் தயாராயுள்ளேன்'' என்றார்.

மலிபன் தொடர்ந்து மேற்கொண்டு வரும் சமூகப் பொறுப்புணர்வுத் திட்டங்களின் இன்னொரு முயற்சியே இது. இந்தப் புதிய திட்டத்தை பிரதம நிறைவேற்று அதிகாரி டி.எல் வீரசூரிய அறிமுகப்படுத்தியதுடன், தலைவர் ஏ.ஜி. ஆர்.சமரவீர மற்றும் மலிபன் நிறுவனத்தின் பணிப்பாளர்சபை உறுப்பினர்களின் ஆதரவிலும் மேற்பார்வையிலும் இத்திட்டம்அமுல்படுத்தப்படுகின்றது.



லிஸ்பின் இன்வெஸ்மென்ட் நிறுவனத்தால் யாழ்.மக்களுக்கான இலகு கடன் சேவையை அறிமுகப்படுத்தி வழங்கும் வைபவத்தின் ஆரம்ப நிகழ்வில் நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் வஜிர ஹெந்தவித்தாரன மங்கல விளக்கேற்றுகிறார். அருகில் இலகு கடன் பகுதித்தலைவர் விக்டர் ரட்ணநாயக்க மற்றும் தர்சன விஜயசிங்க ஆகியோர் உள்ளனர்.




தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கொமர்ஷல் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையின் வெற்றியாளர்களுக்கான 'அருணலு' பரிசளிப்புநிகழ்வு கடந்த மாதம் இடம்பெற்றது. இதில் வெற்றியாளர்கள் கொமர்ஷல் வங்கியின் வடமாகாண முகாமையாளர், கிளைமுகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்களுடன் காணப்படுகின்றனர். (த)

# பரிசு மேல் பரிசு சீட்டிழுப்பில் நான்காவது லட்சாதிபதி

SEYLAN
BANK PLC
The bank with a heart

**ஒரு மில்லியனை மத்துகம பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதான ஆசிரியை திருமதி ஈ.ஏ. தயாவதி வென்றெடுத்தார்.**

செலான் வங்கியின் பரிசு மேல் பரிசு வெகுமதி வழங்கல் திட்டத்தின் பெப்ரவரி மாதத்துக்கான சீட்டிழுப்பில் மிகவுயர்ந்த பரிசான ரூபா ஒரு மில்லியனை மத்துகம பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதான ஆசிரியை திருமதி ஈ.ஏ. தயாவதி வென்றெடுத்தார்.

இவ்வாறான பரிசொன்றை வெற்றிகொள்வேன் என்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை. எவ்வாறிருந்த போதிலும் இதனையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன் என்று தயாவதி தெரிவித்தார்.

கற்பித்தலில் 24 வருடகால அனுபவத்தைக் கொண்டவரான திருமதி. எல்பட ஆராச்சிகே தயாவதி தற்போது மத்துகமவிலுள்ள பந்திய மகாவித்தி யாலயத்தில் அரசியல் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியையாகக் கடமையாற்றுகின்றார். தனது சம்பளக் கொடுப்பனவுக்கான காசோலை கூட செலான் வங்கியிலுள்ள தனது கணக்கிற்கே செல்வதாக அவர் பெருமையுடன் குறிப்பிட்டார்.

கடந்த 12 வருடங்களாக செலான் வங்கியின் மத்துகம கிளையின் வாடிக்கையாளராகத் திகழ்ந்து வரும் இவர், அங்கு சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக் கணக்குகளை பேணி வருகின்றார்.

செலான் வங்கியின் பரிசு மேல் பரிசு வெகுமதி வழங்கல் திட்டம் கடந்த வருடத்தின் ஒக்டோபரில் மிகப் பிரமாண்டமான முறையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.


அப்போது முதல் இது வரை நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த 10,480 வெற்றியாளர்களுக்கு பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள் - ரூபா 01 மில்லியன் பணம், மோட்டார் சைக்கிள்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், ஹோம் என்டர்டெயின்மன்ட் சிஸ்டம், சோபா கதிரைகள், மடிகணினிகள், முழு அளவில் தன்னியக்கமாக செயற்படும் சலவை இயந்திரங்கள், 4 எரிகருவிகளைக் கொண்ட கேஸ் அடுப்புக்கள், தங்க நாணயங்கள் போன்ற பெருந்தொகையான பரிசுகளை ஒவ்வொரு மாதமும் வென்றெடுத்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள செலான் வங்கியின் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வின் போது, நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆர். நடராஜா, பொது முகாமையாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரத்ன ஆகியோரிடமிருந்து கடைசித் தொகுதி வெற்றியாளர்கள் தமக்குரிய வெகுமதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

# கிழக்கில் எந்தப் பிரதேசத்திலும் அரசின் மீது மக்கள் திருப்திகரமான நிலையில் இல்லை

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



திருகோணமலை,ஜூன்19

கிழக்கில் எந்த முஸ்லிம் பிரதேசங்களிலும் அர சின் மீது மக்கள் திருப்திகரமான நிலையில் இல்லை. இதனை நான் சொல்லித் தெரிந்து கொள்ளத் தேவையில்லை. எல்லோருடைய மனச்சாட்சியையும் தொட்டுத் தெரிந்து கொள்ள முடியும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபை தொடர்பான விளக்கக் கூட்டமொன்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் தலைமையில் கிண்ணியா பிரதேசத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் என்ற இயக்கத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை எது என்பதை அறிந்துகொள்ளவே எல்லோரின் பார்வையும் உள்ளது. இதனை அடிக்கடி பத்திரிகையெல்லாம் ஒவ்வொரு விதமாக எழுதிக் கொண்டிருக்கின்றன.

அரைவாசிக் காலம் எதிர்க் கட்சியிலும், அரைவாசிக் காலத்தை ஆளும் கட்சியிலும் அரசின் பக்கம் இருந்து அமைச்சராகப் பதவிகளை வகித்து வந்திருக்கின்றோம். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என மூன்று பிரதான கட்சிகள் இருக்கின்றன.

இதில் அடித்துப் போட்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் கூட்டுச் சேரப் போவதில்லை.

இந்த மூன்று கட்சிகளில் இரண்டு கட்சி கூட்டுச் சேர்ந்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும். இதில் யார் சேர்ந்தாலும் சரி இதனோடு ஐக்கிய தேசியக் கட்சியையும் இணைத்துக்கொண்டால் போனஸ் ஆசனத்தையும் பெற்றுக் கொள்ளமுடியும். இதுதான் அரசியல்.

இன்று கிழக்கு மாகாண சபையைக் கலைக்கக் கூடாது என்று கிழக்கு முதலமைச்சர் வழக்குப் போடவுள்ளார். இதில் முஸ்லிம் காங்கிரஸையும் இணைந்துக் கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டிருக்கின்றார்.

கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு வேட்புமனு தாக்கலுக்கு காலமுள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தில் நாம் இது பற்றிப் பேசிக் கொள்வோம் - என்றார். (ச)

# புத்தர் சிலை அமைக்கும் முயற்சி மக்கள் எதிர்ப்பினால் முறியடிப்பு

திருகோணமலை,ஜூன்19

மூதூர், 3ஆம் கட்டைமலை எனுமிடத்தில் கடந்த சில தினங்களாக நடைபெற்று வரும் புதிய புத்தர் சிலை மற்றும் விகாரை அமைக்கும் பணிகளால் அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்துடன் காணப்படுகின்றனர். பின் அந்த மக் களின் எதிர்ப்பினால் அது கைவிடப் படுவது குறித்து ஆலோசிக்கப்படுவ தாக அறியமுடிகின்றது.

இப்பகுதி மக்களது ஜீவனோபாய தொழில் மலைக் கல்லுடைத்தல் மற்றும் விவசாயமாகும். மேற்படி நிகழ்வால் இந்தத் தொழில்களை இழக்கும் அபாயம் உள்ளதால் மக்கள் விசனமடைந்த நிலையிலுள்ளனர்.

இது குறித்து பிரதேச மக்கள் மூதூர் தொகுதி அமைப்பாளர் நஜிப் அப்துல் மஜித்திடம் முறையிட்டதைத் தொடர்ந்து அமைச்சர் ரெஜினோல்ட் குரே தலைமையிலான அமைச்சர்கள் குழு நேற்றுமுன் தினம் காலை கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் மாவட்ட அரச அதிபர் ஆகியோருடன் மேற் கொண்ட கலந்துரையாடலின் பயனாக இத்திட்டம் கைவிடப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# புராதன மனித எச்சம் கண்டுபிடிப்பு

புளத்சிங்கள, பாகியங்கல பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆய்வின்போது புராதன யுகத்திற்குரிய முழு மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சுமார் 1200 ஆண்டுகளுக்கு முந்திய புராதன யுக மனித எலும்புக் கூட்டு எச்சம் முழுமையாகக் கிடைக்கப்பெற்ற முதல் சந்தர்ப்பம் இது எனவும் பாகியங்கல தொல்பொருள் அகழ்வாராய்ச்சி அதிகாரி ஒசான் வெதகே தெரிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்கள்



### திருமதி கமலரத்தினம் ஐயாத்துரை
(ஓய்வு பெற்ற நேசவுப் போதனாசிரியர்)

இணுவில் மஞ்சத்தடியைச் சேர்ந்த திருமதி கமலரத்தினம் ஐயாத்துரை நேற்று முன்தினம் (17.06.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா ஐயாத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா -சுந்தரம் தம்பதியரின் அன்பு மகளும் கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னாச்சி தம்பதியினரின் அன்பு மருமகளும் சசிகலா (ஜேர்மனி), சசிசுகேதினி (ஆசிரியர் யா/ புதுமடம் றோ.க. த.க பாடசாலை), காலஞ்சென்ற சசி மோகனா மற்றும் பகீரதி (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தாயும் சத்துரு சிங்காரப்பிள்ளை, ரவிச்சந்திராவின் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் ஆரணியா, சரண், காருண்யா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா மூத்ததம்பி, நாகம்மா, நடராசா, சிதம்பரேஸ்வரி நவரத்தினம் (சங்கானை) மற்றும் சரஸ்வதி, திருநாவுக்கரசு (வவுனியா), சிவகாமி அம்மை- விநாயகமூர்த்தி (ஓய்வு பெற்ற ஆசிரியர் இணுவில் மத்திய கல்லூரி), ஞானாம்பிகை சடாச்சரம், ஞானபூரணம் பொன்னையா (ஓய்வுபெற்ற ஆசிரியர் இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.06.2012) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி,
இணுவில்.

தகவல்:
சசி சுகேதினி.
(மகள்)

(19582) (15-14)

### குழந்தையன் சிங்கராசா



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தையன் சிங்கராசா நேற்று (18.06.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தையன்-பொன்னி தம்பதியரின் அன்பு மகனும், இராசமலரின் அன்புக் கணவரும், மரீனா, ஜெபநேசன், ராகினி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான கெனடி, போறசி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பலசுந்தரம், சிறிதரன் (பிரான்ஸ்), ஜெயா ஆகியோரின் அன்பு மாமனும், கெல்பா (பிரான்ஸ்), கெனிஸ்ரன், நிலக்ஷன், நிலுஷா, சிந்துஜா (பிரான்ஸ்), அனுசிஜா (பிரான்ஸ்), றொசான் (பிரான்ஸ்), டெனோஜன், டினுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், பாலசிங்கம், சின்னம்மா, காலஞ்சென்ற அருணி மற்றும் பொன்னம்மா, நாகம்மா, துரைசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (20.06.2012) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் நீர்வேலி பரலோக மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் பரலோகமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி பரலோகமாதா கோயிலிடி,
நீர்வேலி வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

(19583)


## இலங்கை சின்மயா மிஷன் யாழ்ப்பாண நிலையம்

கொழும்பில் முதலுதவித் தாதிமார் பயிற்சி

**First Aid Home Caretakers**

ஆனி 2012.

- ✦ க.பொ.த உயர்தரம் கற்ற மாணவர்களிடமிருந்து முதலுதவித் தாதிமார் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆறுமாதகாலப் பயிற்சிக்கான கட்டணம் ரூபா 20,000/-
- ✦ தங்குமிடத்தை மாணவர்களே ஒழுங்கு செய்துகொள்ளவேண்டும். அதற்காக ஒருவருக்கு மாதாந்தம் 3000/- ரூபாவும், உணவுக்காக வாரத்திற்கு 1000/- ரூபாவும் வழங்கப்படும்.
- ✦ குறைந்தது 15 மாணவர்களை ஒழுங்கமைத்த பின்னரே பயிற்சி தொடங்கும்
- ✦ கொழும்பிலுள்ள முன்னணி வைத்திய சாலைகளில் பயிற்சி பெற்றுக் கொடுக்கப்படும்.
- ✦ விண்ணப்பிக்க விரும்புபவர்கள் சுயவிபரக்கோவையுடன் கீழ்க்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு 23.06.2012 இற்கு முன்னர் காலை 9.00 மணி தொடக்கம் 11.00 மணிக்கிடையில் நேரில் வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலதிக விபரங்களுக்கு :- 0774744153,0779355085
22, செம்பாட்டு ஒழுங்கை, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
மின்னஞ்சல் : info@cordsrilanka.org (19579) (15-14)

## சேவை

வெளிநாடுகளுக்கு வேலைக்காக செல்லும் அனைவருக்கும் கடன் / லீசிங் வசதி செய்து கொடுக்கப்படும். பெற்ற கடனை மாதா மாதம் செலுத்த முடியும்.

ஆசிய, ஐரோப்பிய நாடுகளுக்கு Land Line / Mobileக்கு இலவசமாக பேச முடியும். Communicationகளுக்கு மிகவும் உகந்து

(சி/843)

Life Time Free | 0771 569 294

## வீடு, காணி விற்பனைக்கு

சங்கானை, மல்லாகம் பிரதான வீதியில் அருணாசலம் வித்தியா சாலை முன்பாக கிணற்றுடன் வீட்டுடன் கூடிய 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0771697950, 021 7210157

(14747)(2-6)

## பராமரிப்பாளர் தேவை

நாய்க்குட்டிகள் பராமரிப்பதற்கு வேலையாள் தேவை. (உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்).

தொடர்பு:0771942050 (14749)(2-6)

## பணிப்பெண் தேவை

வீட்டினைப் பராமரிப்பதற்கேற்ற பணிப்பெண் தேவை.

தொடர்பு:0771942050

(14748)(2-6)

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

#9, குமார வீதி, நல்லூர்
யாழ்ப்பாணம் -021 2229191

**Junior Diploma**



பாடசாலை மாணவர்களுக்கான விசேட கொம்ப்யூட்டர் பயிற்சிகள் தற்பொழுது பதிவுகள் ஆரம்பம்

(சி/785)

## வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2012

"வாழ்வகம்" விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.

இடம்:-வாழ்வக இல்லம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.
காலம்:-03.07.2012 செவ்வாய்க்கிழமை
நேரம்:-காலை 09.30 மணி
தலைமை:- திரு.ஆ.ரவீந்திரன், தலைவர் வாழ்வகம்

நிகழ்ச்சிநிரல்

| | |
|---|---|
| *அன்னையின் ஆசிபெறல் | *கணக்கறிக்கை |
| *இறைவணக்கம் | *பிரேரணைகள் |
| *தலைமையுரை | *புதிய நிர்வாக சபைத்தெரிவு |
| *சென்ற பொதுக்கூட்ட அறிக்கை | *நன்றியுரை |
| *ஆண்டறிக்கை | |

வாழ்வக அங்கத்தவர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

செயலாளர்
திரு.வை.க.ரவீகரன்

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.

தலைவர்
திரு.ஆ.ரவீந்திரன்

(சி/792) (15-14)

## நூலகருக்கான விண்ணப்பம் கோரல்

நூலக சேவையில் சிறந்த அனுபவம் உள்ள ஆண்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது. உடன் விண்ணப்பிக்கவும், ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(சி/779)(2-6)

## வேலைக்கு ஆள்கள் தேவை

- ✱ விற்பனை பிரதிநிதி
- ✱ நிர்வாக உத்தியோகத்தர்
- ✱ விற்பனையாளர்

தகுதியானவர்கள் சுயவிவரக்கோவையுடன் இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நேரில்வரவும்.

தொடர்பு:- 270, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். T.P 021-2222403

(சி/795) (15-14)

# மஹோற்சவம்

ஆனைக்கோட்டை கண்ணகைபுரம் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறும்.

இன்று பிற்பகல் 4.30 மணிக்கு கொடியேற்றத்திருவிழா ஆரம்பமாகித் தொடர்ந்து எதிர்வரும் 27ஆம் திகதி மாம்பழத்திருவிழாவும், 28ஆம் திகதி மஞ்சத்திருவிழாவும், 29ஆம் திகதி கைலாசவாகனமும், 30ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும், எதிர்வரும் முதலாம் திகதி சப்பரமும், 2ஆம் திகதி இரதோற்சவமும், 3ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (16-4)

## இடையூறு செய்தவர் செலுத்தினார் அபராதம்

யாழ்ப்பாணம்,ஜூன்19

கல்வியங்காட்டில் மது போதையில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தவருக்கு யாழ். நீதிமன்றம் நேற்று 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

நேற்று யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் கோப்பாய் பொலிஸார் கல்வியங்காட்டைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன் கணேஸ்வரன் என்பவரைச் சந்தேகநபராக மன்றில் முற்படுத்தினர்.

விசாரணையின் போது சந்தேகநபர் தன்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இந்த அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (16-4)

## ஆங்கில பாடப் பரீட்சை

தென்மராட்சி,ஜூன்19

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான ஆங்கில பாடப் பயிற்சிப் பரீட்சைகள் நாளை நடைபெறவுள்ளன.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இப்பரீட்சை வினாத்தாள்களை பாடசாலை அதிபர்கள் கோட்டக்கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(16-9)

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை துண்டுக்கூலி அடிப்படையிலான ஆள்சேர்த்தல்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும், ஏனைய கூட்டுறவுச் சங்கங்களிலும் பொது முகாமையாளர் மற்றும் கிளை முகாமையாளர் பதவிகளில் துண்டுக்கூலி அடிப்படையில் பணிபுரிய விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமை, அனுபவத் தகைமை, தொலைபேசி இலக்கம் என்பவற்றை உள்ளடக்கி 07.07.2012 இற்கு முன்னதாக செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

*(கூட்டுறவுச் சங்க சேவை அனுபவம் உள்ளவர்களுக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது)*

- செயலாளர்.

(f/787)(2-6)

## நல்லூர் பிரதேசசபை திருநெல்வேலி பொதுச்சந்தை புனரமைப்பு வேலைகள் Hand rail Works இற்கான கேள்வி அறிவித்தல் - 2012

மேற்படி வேலைக்கான கேள்வி நல்லூர் பிரதேசசபையினால் கோரப்படுகின்றது. இக் குறித்த வேலைக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 19.06.2012 தொடக்கம் 02.07.2012 பி.ப. 4.00 மணிவரை.
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி : 04.07.2012 மு.ப.10.00 மணி வரை.
3. கேள்வி திறக்கப்படும் திகதி : 04.07.2012 மு.ப. 10.30 மணிக்கு.
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
5. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலைக் கொண்டிருக்கவேண்டும்.
6. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
7. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை தலைவர்/செயலாளர் நல்லூர் பிரதேசசபை, கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித்திணைக்களம், பண்ணை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
8. மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ.இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த ICATD தரம் |
|---|---|---|---|---|
| 01 | Hand rail Works | 3855.00 | 500.00 | M10/C10 |
| | | | | |

ப.செந்தகுமார்
தவிசாளர்
நல்லூர் பிரதேசசபை.

(சி/788)(6-8)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



*ஆறாத் துயரில் ஆண்டுகள்*
*நான்கு ஆனபோதும்*
*ஆறவில்லை உங்கள் பிரிவின் துயரம்*
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

மலர்வு : 27-05-1942
உதிர்வு : 02-07-2008
(திதி: அமாவாசை)


### அமரர் திருமதி ராதாதேவி பத்மநாதன்
(ராதா ரீச்சர்)

95 தாவடி தெற்கு,
கொக்குவில்

உம் பிரிவால் துயருறும்
கணவர், மகன், மருமகள், பேரன்
மற்றும் குடும்பத்தினர்

(சி/794)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 02 03 1977

உதிர்வு 22 06 2009

திதி : 19.06.2012

எம் அன்பான குலவிளக்கு ரூபையாவிற்கு சமர்ப்பணம்

### DR. RUBAN ARUMUGAM

தந்தையின் சொற் படிபணியும் தனையன் ஆனாய்
தாழ்தொழுதே அவர் விருப்பம் தலைமேல் ஏற்று
புனிதசேவை செய்ய குழந்தை மருத்துவ நிபுணரானாய்
கேட்கு முன்னே ஊகித்தே உதவி செய்வாய்
கிறங்கவைத்தே தூய அன்பாற் பிணைத்து நின்றாய்
கூட்டாக குடும்பத்தார் கூடியின்புறவே
கோமகனே திட்டங்கள் தீட்டி நிற்பாய்
வீட்டோடு குடும்பத்தார் பிரிவாற்கூடி வேதனையைப்
பகிர்ந்திடவோ தென்திசைப் பாட்டதனை தேடிச் சென்று விட்டாய்
ஆனாலும் உன் சிரிப்பை நாம் இனி எப்போ காண்போம்?

உன் பிரிவால் துயருற்று நிற்கும் உன்னுடைய அன்பான
அன்பு அப்பா அம்மா, ஆசை மனைவி,
சகோதரன், சகோதரிகள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

(சி/842)

## வாங்கிவிட்டீர்களா....?

ஆசிரியை குணரஞ்சினியின் ஆக்கமான தரம் 04 மாணவர்களுக்கான பயிற்சி வினாக்கள் மும்முரமாக விற்பனை ஆகின்றன. (புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கும் உகந்தது) சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தொ.பே.இல. : 021 2220231

(19570)(6-8)

## ஆள்கள் தேவை

★ விற்பனையாளர்கள்
★ பில் கிளார்க்
நேரில் வரவும்

**பேப்பர் கவுஸ்**
300, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.021 222 5343

(f/786)(2-6)

## டொல்பின் வான் விற்பனைக்கு உண்டு

GU தொடர் இலக்கமுடைய 97 ஆம் ஆண்டு வகையுடைய 113 மொடல் டொல்பின் வான் வவுனியாவில் விற்பனைக்குண்டு.


A/C அஜஸ்மென்ட் சீற், மனுவல் ஆறு ஆணி விலை பேசித்தீர்மானிக்கப்படும்

தொடர்புகளுக்கு: 077 7585930

(16885)(6-8)

## மரண அறிவித்தல்

### ஸ்ரீமுருகன் அருள் மார்க்கண்டு சுவாமிகள்



மானிப்பாய், லோட்டன் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மார்க்கண்டு சுவாமிகள் (முன்னாள் மானிப்பாய் பிரதேசசபை உபதலைவரும், சமாதான நீதிவானும்) நேற்றுமுன்தினம் (17.06.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சின்னையா - இலட்சுமி தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ் சென்றவர்களான தம்பையா - பொன்னம்மாவின் அன்பு மருமகனும், வடிவம்மாவின் அன்புக்கணவரும், ரஞ்சினிதேவி (ஜேர்மனி), மனோகரன் (மனோ அம்பிகை ஸ்ரோர்ஸ், மானிப்பாய்), யமுனா (ஜேர்மனி), ஸ்ரீகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மசீலன் (ஜேர்மனி), சத்தியசீலன் (ஜேர்மனி), ஞானேஸ்வரி (மானிப்பாய்), கௌசி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், றொனி, யூலி, தமறா, றொஷானி (ஜேர்மனி), சமுத்திரராஜ், கஜன்ராஜ், மதுராஜினி, நர்த்தனா, ஹேராம் (ஜேர்மனி), தன்சஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும், இராசம்மா, இராசு (CTB) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (21.06.2012) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லோட்டன் வீதி,
மானிப்பாய்

தகவல்:
பிள்ளைகள்,
மா. மனோகரன்
(மனோ அம்பாள் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்)

(19573)(8-14)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# முள்ளிவாய்க்காலில் இருந்துதான் மீண்டும் பிறக்கும் தமிழர் வரலாறு

## பழ. நெடுமாறன் கருத்து

முள்ளிவாய்க்காலில் இருந்துதான் மீண்டும் தமிழர் வரலாறு ஆரம்பிக்கும் என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

விழுப்புரத்தில் தமிழ் இளைஞர் கூட்டமைப்பின் சார்பில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பழ.நெடுமாறன் எழுதிய 'பிரபாகரன் தமிழர் எழுச்சியின் வடிவம்' என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முள்ளிவாய்க்கால் போரோடு எல்லாமே முடிந்து விட்டது. இனி தமிழ் ஈழம் இல்லை, முடிக்கப்பட்டு விட்டது என்ற பிரமையை சிங்கள அரசும், இந்திய அரசும் ஏற்படுத்தி இருக்கின்றன.

முள்ளிவாய்க்காலில் இருந்துதான் மீண்டும் தமிழர் வரலாறு ஆரம்பிக்கும் என்பதற்காக இந்த நூல் எழுதப்பட்டது. இந்த நூல் தமிழக இளைஞர்களுக்குத் தேவை. தமிழக அரசியல் திரைக் கவர்ச்சியால் சின்னாபின்னமாக்கப் பட்டுள்ளது. இளைஞர்களுக்கு லட்சியப் பாடத்துக்குப் பதில் அவர்களுக்கு பதவி வெறி, பணவெறி ஊட்டப்பட்டுள்ளது.

பொது வாழ்க்கைக்கு அடிப்படையான இலட்சியம் இல்லாமல் அவர்கள் திசை திருப்பப்பட்டு ஏதேதோ செய்யும் அளவில் இருப்பதைப் பார்க்கிறோம். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருப்பவர்களுக்கு இலட்சியப் பாதைக்கு வழிவகுத்தவர் பிரபாகரன். அதுபோல் இலட்சியப் பாதைக்கு தமிழகம் திரும்ப வேண்டுமானால் அதற்கு இந்த நூல் உதவும்.



இதுவரை வெளியிடப் படாத செய்திகளை இதில் வெளியிட்டு இருக்கிறேன். இதில் பிரபாகரனின் கடிதங்கள் எனக்கு எழுதப் பட்டவை அல்ல. அது தமிழ் இளைஞர்களுக்கு எழுதப் பட்டவை. தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் வேலூர் கோட்டையில் இருந்து சுரங்கம் தோண்டி வெளியே சென்றது எப்படி போன்ற கடிதங்களும் உள்ளன.

1975 இல் நான் இலங்கைக்குச் சென்றபோது கருணாநிதி என்னைப் பாராட்டி முரசொலியில் முதல் பக்கத்தில் முழுவதுமாக எழுதினார். ஆனால் வைகோ சென்றபோது, அதனை அவர் விளம்பரத்துக்காகச் செய்கிறார் என்று எழுதினார் என்றும் நெடுமாறன் அங்கு குறிப்பிட்டார். (வ)

## மாட்டுடன் மோதிக் காயம்

யாழ்ப்பாணம்,ஜூன் 19

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் வீதியில் படுத்திருந்த மாட்டுடன் மோதி, காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பளையில் இடம்பெற்றுள்ளது. தம்பகாமம் பளையைச் சேர்ந்த தேவராஜா விஜயகுமார் (வயது-30) என்பவரே காயமடைந்தவர் ஆவார். காயமடைந்த நபர் பளை வைத்திய சாலையில் இருந்து அம்புலன்ஸில் கொண்டு வரப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-14,9)

## பருத்தித்துறையில் புத்தகக் கண்காட்சி

வடமராட்சி, ஜூன் 19

பருத்தித்துறை நகர சபை, வடமராட்சிப் பகுதியிலிருந்து உள்ளூர் எழுத்தாளர்களால் எழுதி வெளியிடப்பட்ட புத்தகங்களைப் பொதுமக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தி, உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக புத்தகக் கண்காட்சியை எதிர்வரும் ஆவணி மாதத்தில் நடத்த தீர்மானித்துள்ளது.

இதற்கமைய வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த எழுத்தாளர்கள் அனைவரும் தங்களால் எழுதி வெளியிடப்பட்ட புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் தலா இரண்டு பிரதிகளைத் தாமதமின்றி பருத்தித்துறை சிவன் கோயில் வடக்கு ஒழுங்கையிலுள்ள நகரசபையின் பொது நூலகத்திற்கு தந்துதவுமாறு நகராட்சி மன்றத் தலைவர் எஸ். சபாரவீந்திரன் கேட்டுள்ளார்.

இதேவேளை பொதுநூல்கள் மாத்திரமன்றி கோயில்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், பொது நிறுவனங்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட மலர்கள், பயனுள்ள தகவல்களைக் கொண்ட கல்வெட்டுப் புத்தகங்கள் போன்றவையும் புத்தகக் கண்காட்சியில் இடம் பெறவுள்ளதனால் இத்தகைய புத்தகங்களையும் நகரசபை ஏற்றுக்கொள்ளும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ந-402)

## படுக்கையில் பாம்பு தீண்டியது

யாழ்ப்பாணம், ஜூன் 19

படுக்கையில் வைத்து பாம்பு தீண்டிய பாடசாலை மாணவி ஒருவர் சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்த மரியநாயகம் வினோஜி (வயது-11) என்பவரே பாம்பு தீண்டியவர் ஆவார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. (ந-14)

# சவூதியில் இலங்கைப் பணிப்பெண்கள் பலவந்தமாக அடைத்து வைப்பு

சவூதி அரேபியாவில் பலாத்காரமாக அடைத்துவைக்கப்பட்டுள்ள இலங்கைப் பணிப்பெண்களை மீட்க விரைந்து செயற்படுவதாக அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கைப் பணிப் பெண்கள் சிலர் சவூதியின் ரியாத் நகரிலுள்ள வீடொன்றில் பலாத்காரமாக அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று சவூதி பொலிஸாருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. இது குறித்து தாம் உடனடி நடவடிக்கை எடுப்பதாக இலங்கைத் தூதரக அதிகாரிகளுக்கு சவூதி பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அந்தக் கட்டடத்தில் 11இலங்கைப் பணிப்பெண்களும், மூன்று எதியோப்பிய பணிப்பெண்களும் இருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

சுமார் ஒன்றரை மாதங்களுக்கும் அதிககாலம் அவர்கள் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அந்தப் பணிப் பெண்களது கடவுச்சீட்டுக்கள், வீசா என்பன அவர்களை அனுப்பிய முகவர் நிலையங்களால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதால், அவர்களால் எவருடனும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து, விரைவில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதரகத்தின் தொழிலாளர் நலன்புரி ஆலோசகர் அனுர முதுமால தெரிவித்தார்.

சவூதி பொலிஸார், மேலதிக விவரங்களை உடனடியாக வெளியிடவில்லை. இருந்த போதிலும், இவர்களை மீட்பதற்கு விரைந்து செயற்படுவோம் என்று அந்தப் பொலி ஸார் உறுதி வழங்கியுள்ளனர். (ந)

# இறால்கள் அபகரிப்பு

## இலங்கைக் கடற்படை மீது குற்றச்சாட்டு

இராமேஸ்வரம் மீனவர்களை, இலங்கைக் கடற்படையினர் அடித்து விரட்டி இறால்களைப் பறித்துக் கொண்டனர் என்று இந்திய ஊடகங்கள்தகவல் வெளியிட்டுள்ளன.

இராமேஸ்வரத்திலிருந்து, கடந்த சனிக்கிழமை ஏராளமான படகுகளில் மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றனர். அன்று மாலை, தனுஷ்கோடிக்கும், தலை மன்னாருக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் இவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, அந்தவழியாக ரோந்து வந்த இலங்கைக் கடற்படையினர், மீனவர்களிடம் "இலங்கைக் கடற்பகுதிக்குள் நுழையக் கூடாது" என்று எச்சரித்து அடித்து விரட்டியுள்ளனர். அங்கிருந்து வேறு பகுதிக்குச் சென்ற மீனவர்கள், இரவு முழுவதும் மீன் பிடித்து, நேற்றுமுன்தினம் காலை இராமேஸ்வரம் திரும்பினர்.

ரோந்து வந்த இலங்கை கடற்படையினர், இறால், மீன்கள் என்பனவற்றைப் பறித்துக்கொண்டு அடித்து விரட்டினர் என்று, நேற்று முன்தினம் கரை திரும்பிய மீனவர்கள் தெரிவித்தனர்.

இதனிடையே தலை மன்னார் கடல் பகுதிக்குச் சென்ற மீனவர்கள் சிலர், அந்தக்கடல் பகுதியில் மீன்களுக்காக விரிக்கப் பட்டிருந்த, இலங்கை மீனவர்களின் வலைகளைச் சேதப்படுத்தி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதுகுறித்து, புலனாய்வுத் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (வ)

## சிறுவர் அபிவிருத்திக் குழுக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று நடைபெறவிருந்த சிறுவர் அபிவிருத்திக் குழுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். இந்தக் கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். (ந)

## விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட வண்ணார் பண்ணை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி முதல் இடம்பெற்று வருகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி முதல் முற்பகல் 11 மணிவரை அரசடி வீதி ஞானக் குழந்தைகள் பாலர் பாடசாலையிலும், முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 1மணிவரை ஐயனார் கோயிலடியிலும் இடம்பெறும்.

நாளை புதன்கிழமை காலை 9 மணிமுதல் முற்பகல் 11 மணிவரை முருகமூர்த்தி வீதியிலும், முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 1மணி வரை கலைவாணி சனசமூக நிலையத்திலும், நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் முற்பகல் 11 மணிவரை தாமரை வீதியிலும், முற்பகல் 11மணி முதல் பிற்பகல் 1மணிவரை பெரியதம்பிரான் வீதியிலும் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு இடம் பெறும். இதேவேளை நேற்று திங்கட்கிழமை குமாரசாமி வீதி கிராம சேவகர் பிரிவிலும் ஆத்தி சூடி சனசமூகத்திலும் நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப் பட்டது. (த-14)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 19

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 23 ஆம்திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி வரை திருவிழாக்கள் இடம் பெறவுள்ளன.எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக் கிழமை கைலாய வாகனத் திருவிழாவும் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பரத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் இடம்பெறும். திருவிழாக் காலத்தில் தினமும் காலை 7.45 மணிக்கு அபிஷேகமும், முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், மாலை 4.30 மணிக்கு மாலைப் பூசையும் மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நடைபெறும். (ந-14)

★ ★ ★

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறவுள்ளது. அந்த வரி சையில் எதிர்வரும் ஜூலை 02 ஆம் திகதி தேர்த்திருவிழா வும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. பெருந் திருவிழா நடைபெறும் 15 தினங்களும் தினமும் மாலை 6.30 மணியளவில் குடாநாட்டின் சமயப் பெரியார்களின் சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன. கொடியேற்ற தினமான இன்று கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் லலீசனின் சமயச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (ந)

★ ★ ★

சுழிபுரம், ஜூன் 19

சுழிபுரம் ஈஸ்வர விநாயகர் வருடாந்த கொடியேற்றம் வெள் ளிக்கிழமை நடைபெற்று தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

தேர்த்திருவிழா 25 ஆம் திகதி புதன்கிழமையும் அடுத்தநாள் சுழிபுரம் திருவடிநிலை தீர்த்தம் ஆடுதலும் நடைபெறும். (ந-28)

★ ★ ★

சித்தன்கேணி ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலயக் கொடியேற்றம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. தேர்த்திருவிழா 25 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும். ஆலய மூன்றாவது வீதியில் பஞ்சரதங்கள் பவனி வரும் காட்சி இடம்பெறும். அடுத்தநாள் தீர்த்தத்திருவிழா நடைபெறும். (ந-28)

★ ★ ★

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி காளியாமூலை ஸ்ரீ முத்துமாரி (பேச்சி) அம்மன் ஆலயப் பெருந்திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகித் தொடர்ந்து 15தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ந)

★ ★ ★

வடமராட்சி, ஜூன் 19

வல்லை நகர் ஸ்ரீ சுந்தர மனோன்மணி அம்பாள் சமேத ஸ்ரீ சுந்தரப் பெருமான் சுவாமி கோயில் புனராவர்த்தன நவ குண்ட மகா கும்பாபிஷேகம் நாளைமறுதினம் வியாழக் கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 10.45 மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள் ளது. பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளது.கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நல்லைக் குருமணி சோம சுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரை நிகழ்த்துவார். 48 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (ந-8)





வடமாகாண கல்வித் திணைக்களம் நடத்திய பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது.

# இன்றைய ஆட்டம்

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் கைதடி குமரன் விளையாட்டுக் கழகத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் வடமாகாண ரீதியிலான மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குகொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு,

**இரவு 7 மணி**

உடுப்பிட்டி அண்ணா விளையாட்டுக் கழகம் எதிர் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

**இரவு 8 மணி**

கைதடி குமரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விவேகானந்தா விளையாட்டுக்கழளகம் மோதவுள்ளது. (ந-23)

## போட்டி அட்டவணை தயாரித்தல்

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் சமபோஷ வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 13 வயது பிரிவினருக்கிடையியே நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. இதற்கான போட்டி அட்டவணை இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணியளவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. பாடசாலைப் பொறுப்பாசிரியர்களை இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந-23)

## வட மாகாண கபடிப் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும்

### ஆண்கள் பிரிவில் மோதும் அணிகள்

வலி வடக்கு ,ஜூன் 19

வட மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் மாவட்டப்பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கபடிப் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் முதல் தடவையாக மாகாண மட்டத்தில் நடத்தப்படும் இந்தப் போட்டியில் மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு.

* மன்னார் பத்திமா மத்திய மகா வித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் வடமராட்சி வேலாயுதம் மகா வித்தியாலயம்.
* முல்லைத்தீவு பாலிநகர் மகா வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு மகா வித்தியாலயம்.
* வவுனியா கணேஸ்வரா மகா வித்தியாலயம் எதிர் மன்னார் வட்டக்கண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.
* கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் சாவகச்சேரி றிபேக் கல்லூரி.
* முல்லைத்தீவு கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கல வன் பாடசாலை எதிர் வடமராட்சி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.
* வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு குரங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை.
* முல்லைத்தீவு மகா வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

இரண்டாம் சுற்றில் இருந்து வவனியா பரக்கும்பா மகா வித்தியாலயம் மோதவுள்ளது.

### பெண்கள் பிரிவில் மோதும் அணிகள்

வட மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

* மன்னார் சென்.சேவியர் மகளிர் கல்லூரி எதிர் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.
* முல்லைத்தீவு றெட்பானா மகா வித்தியாலயம் எதிர் வவுனியா கல்மடு மகா வித்தியாலயம்.
* கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் வவுனியா பரக்கும்பா மகா வித்தியாலயம்.
* யாழ்ப்பாணம் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு மகா வித்தியாலயம்.
* முல்லைத்தீவு பாலிநகர் மகா வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி பூநகரி மகா வித்தியாலயம்.
* மன்னார் பெரியமடு மகா வித்தியாலயம் எதிர் வவுனியா கணேஸ்வரா மகா வித்தியாலயம்.
* மன்னார் அடம்பன் மகா வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

இரண்டாம் சுற்றில் இருந்து இளவாலை மெய் கண்டான் மகாவித்தியாலயம் மோதவுள்ளது. (ந-86-400)

## தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கரப்பந்தாட்டம்

# காலி அணி காலி யாழ்ப்பாணம் சம்பியன்

வலி.வடக்கு, ஜூன் 19

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற ஆண்கள் கூடைப்பந்தாட்ட அணி தேசிய மட்டத்தில் முதல் தடவையாக சம்பியனாகி யாழ் மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்துள்ளது.

இலங்கை தேசிய இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் அகில இலங்கை ரீதியாக மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டி குருநாகல் சேர்.ஜோன் பொஸ்கோ வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்த இறுதிப் போட்டியில் யாழ்.மாவட்ட அணியும் காலி மாவட்ட அணியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகியது முதல் யாழ். மாவட்ட அணி போட்டியில் ஆதிக்கம் செலுத்தி ஆட்டத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டதுடன் புள்ளிகளையும் தொடர்ச்சியாகப் பெற்றுக் கொண்டது.

காலி மாவட்ட அணியும் தன்னாலான எதிர்ப்பைக் காட்டியது. அந்த அணிக்கு உள்ளூர் ரசிகர்களின் ஆதரவு காணப்பட்ட போதிலும் யாழ்.மாவட்ட அணியின் வேகமான ஆட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் காலி அணி பின்னடைவைச் சந்தித்தது.

யாழ்.மாவட்ட அணி விரைவாக புள்ளிகளைப் பெற்ற நிலையில் 22 :10 புள்ளிகள் முன்னிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதியாட்டத்தில் காலி மாவட்ட அணி தீவிரமாக எதிர்ப்பை வெளிப்படுத்தியது. எனினும் அதனைச் சமாளித்து யாழ். அணியும் தன் வேகத்தை அதிகப்படுத்தியது.

இரு அணிகளும் மாறி மாறிப் புள்ளிகளைப் பெற்றன. இதனால் இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா 19 புள்ளிகளைப் பெற்று சம நிலையில் காணப்பட்ட வேளையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட இறுதியில் யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணி 41:29 புள்ளிகள் என்ற அடிப்படையில் காலி மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணியை வெற்றிகொண்டு தேசிய மட்டச் சம்பியனாகத் தெரிவானது. (ந-86)

# ஐக்கியம் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது வதிரி டயமன்ஸ்

பண்டத்தரிப்பு, ஜூன் 19

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரின் வெற்றிக் கிண்ணத்தை வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் சுவீகரித்துக் கொண்டது.



இந்தச் சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழகத்தின் திக்கமுனை மைதானத்தில் நடைபெற்றது. இதில் வதிரி பொம்மர்ஸ் அணியினரும், வதிரி டயமன்ஸ் அணியினரும் மோதிக்கொண்டனர்.

போட்டியின் முதல் பாதி முழுவதும் டயமன்ஸ் அணியினர் வசமே இருந்தது. சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய டயமன்ஸ் அணியினர் அடுத்தடுத்து 4 கோல்களை அடித்தனர். முதல் பாதியில் பொம்மர்ஸ் அணியின் பின்களம் பலவீனமாக இருந்ததோடு அவர்களால் ஒரு கோலினையும் பெற முடியவில்லை. முதல் பாதி முடிவில் 4 : 0 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் அணியினர் முன்னிலை பெற்றனர்.

எனினும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் அணியினர் தமது பின்களத்தை பலப்படுத்திக் கொண்டு கோல் பெற வேண்டும் என்ற துடிப்புடன் விளையாடத் தொடங்கினர். அந்த அணி சார்பாக சாரங்கன் ஒரு கோலினைப் போட்டார். இரண்டாம் பாதி ஆட்டத்தில் டயமன்ஸ் அணி மேலும் ஒரு கோலினைப் போட்டு 5 : 1 என்ற கோல் கணக்கில் பொம்மர்ஸ் அணியை வீழ்த்தி இலகுவான வெற்றியைப் பெற்றுக்கொண்டது. டயமன்ஸ் அணி சார்பில் பிரேம்குமார் 3 கோல்களையும், அரவிந்தன் 2 கோல்களையும் பெற்று அணியின் வெற்றிக்குப் பங்காற்றியிருந்தனர். (ந-130)

# றொனால்டோ அதிரடி வீழ்ந்தது நெதர்லாந்து



ஐரோப்பிய கிண்ண கால்பந்துத் தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் போர்த்துக்கல் 2-1 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்து அணியை வீழ்த்தி காலிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது.

ஆட்டம் தொடங்கிய 11 ஆவது நிமிடத்தில் நெதர்லாந்து முதல் கோல் அடித்தது. ராபன் கொடுத்த 'பாஸை' வான்டெர் வார்ட் மிக அழகாக கோலுக்குள் அடித்தார். இதற்கு 28 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் பதிலடி கொடுத்தது. 'கோலி ஏரியாவுக்குள்' ஜோ பெரைரா அழ காக தள்ளிய பந்தை மிக எளிதாக கோலாக மாற்றினார் கிறிஸ்டியானோ றொனால்டோ. இந்த யூரோவில் றொனால்டோ அடித்த முதல் கோல் இது. இதன் மூலம் தாய் நாட்டுக்காக கோல் அடிக்க வக்கு இல்லாத வீரர் என்ற பழி சொல்லுக்கும் பரிகாரம் தேடிக் கொண்டார். முதல்பாதி ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

வாழ்வா சாவா?ஆட்டத்தில் முரட்டு ஆட்டம் இருக்கத்தானே செய்யும். இரு அணி வீரர்களுமே பிற்பாதியில் முரட்டு ஆட்டம் ஆடத் தொடங்கினர். எனவே மஞ்சள் அட்டையும் தாராளமாக வழங்கப்பட்டது. ஆட்டத்தின் 59 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் ஒரு கோல் அடித்தது. ஆனால் அதனை 'ஓப்சைட்' என்று நடுவர் அறிவித்தார். தொடர்ந்து 66 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கலுக்கு இன்னொரு அருமையான வாய்ப்புக் கிடைத்தது. நடுக்களத்தில் இருந்து பந்தை கடத்தி வந்த றொனால்டோ அதனை கோயின்ட்ரோவுக்கு கொடுத்தார். அவரும் பந்தை வளையை நோக்கி அடித்தார். ஆனால் நெதர் லாந்து கோல் காப்பாளர் ஸ்டக்லன்பர்க் மிக அருமையாக விழுந்து தடுத்துவிட்டார். ஆனால் போர்த்துக்கல் கோல் அடிக்க போராடிக் கொண்டே இருந்தது. இதற்கு 74 ஆவது நிமிடத்தில் பலன் கிடைத்தது. போர்த்துக்கல் விங்கர் நானி அணித்தலைவர் றொனால்டோவுக்கு கொடுத்த 'பாஸை' அவர் அற்புதமாக கோலாக மாற்றினார். இதன் பிறகு நெதர்லாந்து அணி கடுமையாக போராடியும் பலன் இல்லை. ஆட்ட நேர இறுதியில் போர்த்துக்கல் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது. காலிறுதியில் போர்த்துக்கல் 'ஏ' பிரிவில் முதலிடம் பிடித்த செக் குடியரசுடன் மோதுகிறது.

1988 ஆம் ஆண்டுக்கு பிறகு எந்த ஒரு முக்கிய தொடரிலும் கிண்ணத்தை வெல்லாத நெதர்லாந்து அணி இந்த யூரோவில் முதல்சுற்றுடன் தனது பயணத்தை முடித்துக் கொண்டது. (5)





# குரங்கு என்று கூக்குரல்

இத்தாலி மற்றும் மான்செஸ்டர் சிட்டி 'சூப்பர் ஸ்டார்' மரியோ பொலிட்டலியை குரங்கு என்று குரோஷியா ரசிகர்கள் கிண்டலடித்ததால் குரோஷிய கால்பந்து சங்கத்தின் மீது 'பீபா' நடவடிக்கை எடுக்க உள்ளது.

யூரோ கிண்ண கால்பந்து ஆட்டம் போலந்தில் நடைபெற்று வருகிறது. கடந்த வியாழக்கிழமை நடந்த 'சி' பிரிவு ஆட்டத்தில் இத்தாலி அணி குரோஷியாவுடன் மோதியது.

இந்த ஆட்டத்தின் போது குரோஷியா ரசிகர்கள் மரியோ பொலிட்டலியை பார்த்து 'குரங்கு குரங்கு' என்று கூச்சலிட்டதுடன் பொலிட்டலியை பார்த்து குரங்குபோல் செய்கைகள் செய்தும் வாழைப்பழம் ஒன்றை அவரை நோக்கி எறிந்தும் குரோஷியா ரசிகர்கள் கலாட்டா செய்தனர். மேலும், குரோஷியா கோல் அடித்தும் வெடியையும் மைதானத்திற்குள் கொழுத்திப் போட்டனர். இதனால் ஆட்டம் சில நிமிடங்கள் நிறுத்தப்பட்டு மீண்டும் தொடர்ந்தது.

தற்போது இந்தச் சம்பவம் தொடர்பாக குரோஷிய கால்பந்து சம்மேளனம் மீது 'பீபா' நடவடிகை எடுக்க உள்ளது. இது தொடர்பாக விசாரணையும் முடுக்கி விடப்பட்டுள்ளது. இது தொடர்பாக 'பீபா' வெளியிட்டுள்ள அறிக்கையில் இத்தாலி, குரோஷியா அணிகளுக்கிடையிலான ஆட்டத்தின் போது நடந்த சம்பவங்கள் அனைத்தும் ஜீரணிக்க முடியாதவை.

மேலும் இனத்தை குறிக்கும் வார்த்தைகளும் செய்கைகளும் ஏற்றுக் கொள்ள முடியாதது. ரசிகர்களை தனிப்பட்ட முறையில் 'பீபா' தண்டிக்க முடியாது. அந்தந்த நாட்டு கால் பந்து சம்மேளனங்கள்தான் இதற்கு பொறுப்பு ஏற்க வேண்டும் என்று கூறியுள்ளது. (5)



# அப்பாவாகிறார் மெஸ்ஸி

ஆர்ஜென்டினாவின் பிரபல கால்பந்து நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்சி விரைவில் தந்தை ஆகப் போகிறார்.

பார்சிலோனா ஸ்டிரைக்கர் லயோனல் மெஸ்சி நீண்ட நாள்களாக தனது குழந்தை பருவ தோழி ஆன்டனிலோ ருசோலியோவை காதலித்து வந்தார். தற்போது மெஸ்சியின் காதலி கர்ப்பமாக உள்ளார்.

இது குறித்து ஆர்ஜென்டினா பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. அதில் மெஸ்சி விரைவில் தந்தை ஆகப் போகிறார் என்றும் அவர் தனக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பார்சிலோனா அணிக்காக 2004 ஆம் ஆண்டு முதல் விளையாடி வரும் 24 வயதான மெஸ்சி கால்பந்து உலகில் அதிகம் சம்பாதிக்கும் வீரர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# டென்மார்க் ஏமாற்றம் காலிறுதியில் ஜேர்மனி

ஐரோப்பிய கிண்ண கால் பந்துத் தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் ஜேர்மனி 2-1 என்ற கோல் கணக்கில் டென்மார்க் அணியை தோற்கடித்தது. காலிறுதியில் ஜேர்மனி, கிரீஸ் அணியுடன் மோதுகிறது. தோல்வி கண்ட டென்மார்க் தொடரை விட்டு வெளியேறியது.

ஐரோப்பிய கிண்ண கால் பந்துத் தொடரில் நேற்று முன்தினம் லீவிவ் நகரில் நடந்த 'பி' பிரிவு ஆட்டத்தில் ஜேர்மனி, டென்மார்க் அணியை எதிர்கொண்டது. ஜேர்மனி ஏற்கனவே காலிறுதி இடத்தை உறுதி செய்து கொண்ட அணி. டென்மார்க் அணிக்கு வெற்றி முக்கியம்.

ஆட்டம் தொடங்கிய 19 ஆவது நிமிடத்தில் ஜேர்மனி முதல் கோல் அடித்தது. மரியோ ஹோம்ஸ் கொடுத்த 'பாஸை ஆட்டம் இதுவாகும். இதில் கோல் அடித்து மேலும் அவர் பெருமை தேடிக் கொண்டார். இந்தக் கோலுக்கு 24 ஆவது நிமிடத்தில் டென்மார்க் பதில் கோல் திருப்பியது. மைதானத்தின் வலது புறத்தில் இருந்து பென்டட்னர் கொடுத்த அருமையான 'பாஸை' மைக்கல் க்ரோன் டெலி தலையால் முட்டி வலைக்குள் தள்ளினார். முதல் பாதி ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் நிறைவடைந்தது. முதல்பாதியில் டென்மார்க் கோல் காப்பாளர் அன்டர்ஸன் மிக அருமையாக செயல்பட்டு ஜேர்மனி அணியின் பல கோல் வாய்ப்புகளை தடுத்துவிட்டது குறிப்பிடத்தக்கது.

பிற்பாதியில் 80 ஆவது நிமிடத்தில் ஜேர்மனி 2 ஆவது கோலை அடித்தது. மெசூட் ஓசில் கொடுத்த 'பாஸ்' லார்ஸ் பென்டர் கோல் அடிக்க உதவியாக இருந்தது. இதன் பிறகு வேறு கோல்கள் விழவில்லை. இறுதியில் ஜேர்மனி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 9 புள்ளிகளை ஈட்டியது. இந்த ஆட்டத்தில் தோல்வி கண்ட டென்மார்க் 3 புள்ளிகளுடன் தொடரை விட்டு வெளியேறியது. காலிறுதி ஆட்டத்தில் ஜேர்மனி 'ஏ' பிரிவில் 2 ஆவது இடம் பிடித்த கிரீஸ் அணியுடன் மோதுகிறது. (5)



# ஒருநாள் தொடர் இலங்கை வசம்



பாகிஸ்தான் அணியுடனான இறுதி ஒருநாள் போட்டியில் அபாரமாக ஆடிய இலங்கை அணி மத்தியூஸின் துடுப்பாட்டத்தின் துணையுடன் 2 இலக்குகள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை தோற்கடித்து வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியது.

நேற்று பாகிஸ்தான் - இலங்கை அணிகளுக்கிடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ஒரு நாள் ஆட்டம் கொழும்பு ஆர்.பிரேமதாஸா மைதானத்தில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக ஹபீஸுடன், பர்கத் களமிறக்கப்பட்டார். பர்கத் ஆரம்பத்திலிருந்தே அதிரடியாக விளையாடிய போதும் ஹபீஸ் 6 ஓட்டங்களுடன் குலசேகராவின் பந்து வீச்சில் போல்டாகி வெளியேறினார். தொடர்ந்து களமிறங்கிய அஷார் அலியுடன் இணைந்து பர்கத் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினார். 69 பந்துகளில் பாகிஸ்தான் அணி 50 ஓட்டங்களைக் கடந்தது. அதிரடியாக ஓட்டங்களைக் குவித்த பர்கத் 56 பந்துகளில் தனது 12 ஆவது சர்வதேச அரைச் சதத்தை கடந்தார்.

தொடர்ந்தும் அதிரடியாகத் துடுப்பெடுத்தாட பர்கத் முற்பட்ட போதும் பந்து வீச்சு பவர்பிளே தெரிவு செய்யப்பட்ட முதலாவது பந்திலேயே 56 ஓட்டங்களுடன் பர்கத்தை, பெரேரா வெளியேற்றினார். அதன் பின்னர் அஷாட் சபிக், அஷார் அலி இணைந்து நிதானமாக துடுப்பெடுத்தாடினர். பாகிஸ்தான் அணி வலுவான இலக்கை நோக்கி முன்னேற இவர்கள் சிறப்பான இணைப்பை அமைத்தனர்.

25.1 பந்து பரிமாற்றங்களில் 113 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அலி 30 ஓட்டங்களுடன் ஜீவன் மெண்டிஸின் பந்து வீச்சில் வெளியேறினார். அதன் பின்னர் மிஸ்பா உல் ஹக், அஷாட் சபிக் இணைந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை சீரான வேகத்தில் கொண்டு சென்றனர். இவர்களிடையே மிகச் சிறந்த இணைப்பாட்டம் கட்டியெழுப்பப்பட்ட போதும் துரதிஷ்டவசமாக சபிக் 38 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டில்' வெளியேறினார்.

ஐந்தாவது இலக்குக்காக மிஸ்பா, உமர் அக்மல் இணைந்து இணைப்பாட்டத்தை கட்டியெழுப்பினார். எனினும் இவர்களால் துடுப்பாட்ட பவர்பிளேயில் அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை. இருப்பினும் உமர் அக்மல் துடுப்பாட்டத்தை தனது கையிலெடுத்து அதிரடியாக ஆடினார். மறு முனையில் ஒத்துழைப்புக் கொடுத்த ஆடிய மிஸ்பா, 61 ஓட்டங்களை இணைப்பாக பகிர்ந்த நிலையில் 38 ஓட்டங்களுடன் ஜீவன் மெண்டிஸின் சுழலில் சிக்கினார்.



தொடர்ந்தும் தனது அதிரடியான ஆட்டத்தை அக்மல் வெளிபடுத்த மறுமுனையில் அப்ரிடி 9 ஓட்டங்களுடன் வெளியேறினார். 49 பந்துகளில் தனது 15 ஆவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார் அக்மல். இறுதிப் பந்து பரிமாற்றத்தில் தன்வீர் வழங்கிய பிடியெடுப்பை தரங்க தவற விட்ட போதும் மலிங்க இறுதியில் வெளியேற்றினார். உமர் அக்மல் ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க பாகிஸ்தான் அணி 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் ஜீவன் மெண்டிஸ், குலசேகரா தலா 2 இலக்குகளையும், மலிங்க, பெரேரா தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

சவாலான இலக்கை விரட்டக் களமிறங்கிய இலங்கை அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய தரங்க, டில்ஷான் இருவரும் சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தத் தவறினர். தன்வீரின் வேகத்தில் டில்ஷான் 10 ஓட்டங்களுடனும் தொடர்ந்து தரங்க 2 ஓட்டங்களுடனும் போல்டாகி வெளியேற இலங்கை அணி 6 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 19 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்திருந்தது.

கடந்த ஆட்டத்தில் கலக்கிய சங்கா, சந்திமால் இணைந்து நிதானமாகத் துடுப்பெடுத்தாடினர். இவர்களின் மெதுவான இணைப்பினால் இலங்கை 89 பந்துகளில் 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஆட்டத்தின் 18 ஆவது பந்து பரிமாற்றத்தில் சமியின் பந்துவீச்சில் சங்கா 25 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கொடுத்த பிடியெடுப்பை இலக்குக் காப்பாளர் அஹமட் தவறவிட மூன்றாவது இலக்குக்கு 72 பந்துகளில் 50 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்டது.

பாகிஸ்தான் வீரர்கள் களத்தடுப்பில் சொதப்ப இந்த ஜோடி சிறப்பாக ஓட்டங்களைச் சேர்த்தது. நிதானமாக மேலதிக இலக்கு இழப்பை தடுக்கும் வகையில் விளையாடியது. ஆட்டத்தின் 25 ஆவதுபந்துப் பரிமாற்றத்தில் அதிரடியாக ஆட முற்பட்ட சங்கா வீணாக 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

சங்காவை தொடர்ந்து களமிறங்கிய அணித் தலைவர் மஹேல முதலாவது பந்திலேயே அப்ரிடியின் பந்து வீச்சில் அவரிடமே பிடி கொடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி 97 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்தது. அதன் பின்னர் களமிறங்கிய மத்தியூஸ், சந்திமாலுடன் இணைந்து துடுப்பாட்டத்தை தொடர இலங்கை அணி 100 ஓட்டங்களை 156 பந்துகளில் எட்டியது. இந்த ஜோடி 31 ஆவது பந்து பரிமாற்றத்திலேயே துடுப்பாட்ட பவர்பிளேயை தேர்வு செய்தது.

ஆரம்பத்திலிருந்து சிறப்பாக ஆடிய சந்திமால் 71 பந்துகளில் 8 ஆவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். இது இலங்கையில் அவர் பெற்றுக் கொண்ட முதலாவது அரைச்சதமாகும். தொடர்ந்தும் துடுப்பாட்ட பவர்பிளேயில் அடித்தாட முயன்ற சந்திமால், ஹபீஸின் பந்து வீச்சில் 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 135 ஓட்டங்களுக்கு 5 ஆவது இலக்கை இழந்தது. தொடர்ந்து நுழைந்த பெரேரா ஓட்டமெதனையும் பெறாத நிலையில் 'ரன்அவுட்டானார்'. அதன் பின்னர் மத்தியூஸ், திரிமன்னே ஜோடி இணைந்து ஆட்டத்தை முன்னெடுத்தது.

இவர்கள் அதிரடியாக ஆடி ஓட்டங்களை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் துடுப்பெடுத்தாடினர். இதனால் திரிமன்னே 11 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டானார்'.

தொடர்ந்து நுழைந்த ஜீவன் மெண்டிஸ், மத்தியூஸுடன் இணைந்து ஆடினார். இதுவரையில் பொறுமையாக ஆடிய மத்தியூஸ் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தார். 56 பந்துகளில் தனது 10 ஆவது அரைச் சதத்தை கடந்து இலங்கையின் ஆட்டத்தை வெற்றியை நோக்கி நகர்த்தினார். மத்தியூஸுக்கு சற்றும் சளைக்காமல் அதிரடி வேட்டையைத் தொடக்கினார் மெண்டிஸ். அதிரடியாக பவுண்டரிகள், சிக்ஸர்கள் விளாச இலங்கை அணி 200 ஓட்டங்களை கடந்தது. எனினும் ஜீவன் மெண்டிஸ் 19 ஓட்டங்களுடன் வெளியேற நிலைமை சிக்கலானது. கைவசம் இரண்டு இலக்குகளை வைத்துக்கொண்டு வெற்றியை நோக்கி அணியை கொண்டு செல்லத் தொடங்கினார் மத்தியூஸ். இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் இலங்கை அணி வெற்றிபெற 15 ஓட்டங்கள் தேவைப்பட்டன. சமி வீசிய முதல் பந்து அகலப் பந்தானது. இரண்டாவது பந்தில் இரண்டு ஓட்டங்களையும் 3 ஆவது பந்தில் சிக்ஸரையும் விளாசி நம்பிக்கை ஊட்டினார் மத்தியூஸ். இரண்டு பந்துகள் மீதம் இருக்கையில் வெற்றி இலக்கை தொட்டது இலங்கை அணி. மத்தியூஸ் 80 ஓட்டங்களுடனும், குலசேகர 10 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். பாகிஸ்தான் அணி சார்பாக தன்வீர் 3 இலக்குகளையும், அப்ரிடி 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.இதன் மூலம் 3:1 என்ற ரீதியில் ஒருநாள் தொடரை இலங்கை சுவீகரித்துக்கொண்டது. ஆட்ட நாயகனாக மத்தியூசும், ஆட்டத் தொடர் நாயகனாக திஸர பெரேராவும் தெரிவாகினர்.(ங-5)


**AHEAD Preschool and Day care center**

பயிற்றப்பட்ட அசிரியர்களினால் நவீன முறைப்படி கற்பிக்கப்படும்.

புதிய அனுமதிகளுக்கு தொடர்பு கொள்ளவும்.

**10A, Wyman Road,**
**Nallur, Jaffna.**
**0212223195,0777286164.**

(19580) (15-06)

**போட்டிப் பரீட்சைகளுக்கான விசேட கருத்தரங்குகள்**

இலங்கை வங்கி (BOC) பரீட்சைகளுக்கான கரத்தரங்கு வியாழன் (21/6)காலை 10 மணி தொடக்கம் 5 மணிவரையும், சனி (23/6) காலை 10 மணி தொடக்கம் 3 மணிவரையும்

இலங்கை நிர்வாக சேவை (SLAS)பரீட்சைக்கான கருத்தரங்கு வெள்ளி (22/6) சனி (23/6) ஞாயிறு (24/6) காலை 10மணி தொடக்கம் 5மணிவரையும் நடைபெறும்.

யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புக்கள் பிரிவு
யாழ்.ஆஸ்பத்திரி வீதி,கொமர்ஷர் வங்கி அருகில்.

(சி/781)

**விசேட கருத்தரங்கு**

**SLAS போட்டிப் பரீட்சை**

30ஆம் திகதி நடைபெறவுள்ள SLAS திறந்த போட்டிப் பரீட்சைக்கான இறுதிக் கருத்தரங்கு

Note- சிங்களமொழி மூலஎதிர்பார்க்கை வினாத்தாள் தமிழில் ஆராயப்படும் — fri,sat-9 am-4 pm

**வங்கியாளர் போட்டிப் பரீட்சை**

24ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை வங்கியாளர் போட்டிப் பரீட்சைக்கான இறுதிக் கருத்தரங்கு fri,sat-9 am-4 pm

ஆரம்பம்- 22.06.2012 fri -9 am.

P.உமாசங்கர்
P.கமல்தாசன்

அனுமதிக்கு உடன் பதிவு செய்யவும்

**நாவலர் கல்வி நிலையம்**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
T.P- 0774696695

**தகவல் தொழில்நுட்ப பட்டக்கற்கை நெறி கொழும்பு பல்கலைக்கழகம்.**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். O/L பயின்றோரும் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகவல் தொழில்நுட்ப கற்கைநெறியில் சித்தியடைவதன் மூலம் மேற்படி பட்டப்படிப்பை தொடரலாம். விரிவுரைகள் வார, வாரஇறுதி ஞாயிறு மட்டும் என 3 பிரிவுகளாக நடைபெறும். இம்மாணவர்களிற்கு கணிப்பொறியியலாளர் கற்கைநெறிகளிற்கான புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. மேலதிக விபரங்களை இல.324. பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்: -இணைப்பாளர், BIT கற்கை நெறி

MCS தகவல் தொழில் நுட்ப வளாகம் ☎0212226373, 0772395895ம்.

BIT சிறந்த பெறுபேற்றுக்காக சிறப்பு விருதினை பெற்றுக்கொண்ட நிறுவனம்

**Send sms <Name>,<Address>,<Course>to772395895&get scholarship**

Supported by United Nation Development Programme / Jaffna Rehabilitation & Resettlement Projects.

**விற்பனையாகின்றன**

**போட்டிப் பரீட்சை வழிகாட்டிகள் தொகுப்பு**

★SLAS - 700/
★SLPS Ltd - 350/=
★ முகாமைத்துவ உதவியாளர் - 300/=
★ பொது அறிவு பொது உளச்சார்பு - 500/=
★ கட்டுரைகள்-300/=

பூபாலசிங்கம், அண்ணா, ஸ்ரீலங்கா, துர்க்கா, சிதம்பரப்பிள்ளை, கவிதா,கஜன் புத்தகசாலைகள்.

(சி/782)

**மாபெரும் இலவசக்கருத்தரங்கு (GIT & ICT)**

எமது நிறுவனத்தினால் வருகின்ற கா.பொ.த உயர்தர பரீட்சையை முன்னிட்டு பொது தகவல் தொழில்நுட்பவியல் (GIT) மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் (ICT) பாடங்களுக்கான இலவசக்கருத்தரங்கு 24.06.2012 அன்று நடைபெறவிருக்கின்றது. பரீட்சைக்கு முற்றிலும் எதிர்பார்க்கப்பட்ட வினாக்கள் மற்றும் கொழும்பு மாவட்ட மாதிரி வினாத்தாள்கள் என்பன செய்முறை விளக்கத்துடன் கலந்துரையாடப்படும்.

**கையேடு மற்றும் பண வவுச்சர்கள்**

இலவசமாக வழங்கப்படும்.

உங்கள் பதிவுகளை 22.06.2012 முன்னர் மேற்கொள்ளவும்.

மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்கள்

பதிவுகளுக்கு: **E-TRANSITION** No: 166/3, Navalar Road, Jaffna. TP: 021-2219230
www.etransition.net | etransition.net@gmail.com


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.